# வஞ்சி மூதூர்

புலவர்
கா. கோவிந்தனார்

எழிலகம்

# நூல் விவரப் பட்டியல்

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | வஞ்சி மூதூர் |
| ஆசிரியர் பெயர் | : | புலவர் கா. கோவிந்தனார் |
| முதற்பதிப்பு | : | டிசம்பர், 1998 |
| உரிமை | : | பதிப்பகத்தாருக்கு |
| நூல் வெளியீடு | : | எழிலகம்<br>46, செல்வ விநாயகர் கோயில் தெரு<br>திருவத்திபுரம் (செய்யாறு)<br>திருவண்ணாமலை மாவட்டம்-604407<br>தொ. எண் : 04182—22255 / 20755<br>22806 |
| தாளின் தன்மை | : | 10.5 kg. வெள்ளைத்தாள் |
| நூலின் அளவு | : | 1×8 கிரவுன் |
| மொழி | : | தமிழ் |
| அச்சு எழுத்து | : | 10 புள்ளிகள் |
| பக்கங்கள் | : | 140 |
| நூல் கட்டுமானம் | : | சாதா அட்டை பைண்டு |
| சென்னை முகவரி | : | 17/12பீட்டர்ஸ் சாலைக் குடியிருப்பு<br>இராயப்பேட்டை, சென்னை-600 014<br>தொ. எண் : 8528340. |

---

விலை : ரூ. 27-00

---

அச்சிட்டோர் : வெற்றி அச்சகம்
சென்னை-14

I S B N 81—85703—20—5

# பதிப்புரை

இருபதாம் நூற்றாண்டுத் தமிழகத்தின் வரலாற்றில் தனக்கென ஒரு சிறப்பிடத்தைப் பெறத்தக்க வகையில் நல்ல தமிழ் அறிஞராக, வரலாற்றுத் திறனாய்வாளராக, செந்தமிழ்ப் பேச்சாளராக, இலக்கியப்படைப்பாளராக, பாதை மாறாத பகுத்தறிவுவாதியாக, அப்பழுக்கற்ற அரசியல் தலைவராக, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவராக, எனப் பல்திறன் படைத்த நற்றமிழ்ப் புலவராக விளங்கியவர்,

புலவர். கா. கோவிந்தனார் அவர்கள்

"தமிழுக்கும், தமிழ்ப் புலவர்கட்கும், தமிழ் நாட்டுக்கும் தொண்டாற்றத் தன்னையே அர்ப்பணித்தவர்" என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் பாராட்டப்பெற்ற பேறு பெற்றவர்; பைந்தமிழ்ப் புலவராய் உயர்ந்து, சங்கத் தமிழ் ஏடுகளிலெல்லாம் திளைத்து, வரலாற்றுக் கண்கொண்டு ஆய்ந்து, தொல்காலத் தமிழர் வாழ்வை இக்காலத்தவரும் தெளிந்திடுமாறு தேன் தமிழ்ச்சுவடிகளாக வரைந்து வழங்கிய பெருமை உடையவர்,

புலவர். கா. கோவிந்தனார் அவர்கள்

புலவர்களுள் பெரும் புலவராய் விளங்கி, திருவண்ணா மலை குன்றக்குடி ஆதீனத்தாரின் 'புலவரேறு' பட்டம்,

தமிழக அரசின் 'திரு. வி. க. விருது', மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' பட்டம், போன்ற சிறப்புகளைப் பெற்ற புலவர் அவர்களின் தமிழ்ப்பணி பொன்விழாக் கண்ட பெருமையினையுடையது.

'என் தமிழ்ப்பணி' என்ற தலைப்பில், தாம் எழுதிய கடைசி கட்டுரையில், "என் எழுத்துப்பணி தொடரும். குறள்பற்றி, சங்க இலக்கியங்கள் பற்றி பல தலைப்புகளில் நூல் எழுதக் குறிப்பு எடுத்து வைத்துள்ளேன். 'கல்வி கரையில, கற்பவர் நாள் சில! காலம் இடம் தந்தால் என் எழுத்துப்பணி தொடரும்'' என்று புலவர் தம் தமிழ்ப் பணியைத் தொடரவேண்டும் என்ற தணியா ஆவலை வெளியிட்டுள்ளார். ஆனால், காலம் இடம் தரத் தவறி விட்டதனால், முற்றுப்பெறாத நிலையிலே அவருடைய எழுத்துப்பணி எச்சமாகவே நின்று போயிற்று. காலம் செய்த கொடுமை அது!

தமிழால் உயர்ந்து, தம் தமிழ்ப்பணி மூலம் தமிழுக்கும் உயர்வு தேடித்தரும் வகையில், எழுத்துலகம் நினைவு கொள்ளும் வண்ணம் நூற் பணியாற்றிய புலவர் அவர்கள், 'செத்தும் பொருள் கொடுத்த சீதக்காதி வள்ளல்' போலத் தம் மறைவிற்குப் பின்னும் தமிழுக்கு அணி செய்யும் வகையில் பல இலக்கியப் படைப்புகளைத் தம் கையெழுத்து வடிவிலே அளித்துச் சென்றுள்ளார்.

அந்த எழுத்துச் சுவடிகளையெல்லாம் அச்சுவடிவில் வெளியிடுவதைத் தன் தலையாய கடமையாக எழிலகம் ஏற்று,

"வள்ளுவர் சொல்லாட்சி மாட்சி."

"மனையுறை புறாக்கள்."

"பெரும்பாணற்றுப்படை—விளக்கவுரை."

"புலா அம்பாசறை."

"என் தமிழ்ப் பணி"

ஆகிய இலக்கிய நூல்களையும்

"தமிழக வரலாறு—சங்ககாலம்-அரசர்கள்."

"தமிழக வரலாறு-கோசர்கள்."

"தமிழக வரலாறு-கரிகாற்பெருவளத்தான்."

ஆகிய வரலாற்று நூல்களை வெளியிட்டுள்ளோம்.

புலவர் அவர்கள் விட்டுச் சென்றுள்ள, அச்சு வடிவம் பெறாத அவருடைய கட்டுரைகளைத் தொகுத்து இன்று,

## வஞ்சி மூதூர்

என்ற இக்கட்டுரைத் தொகுப்பைத் தமிழ்கூறு நல்லுலகத்தின் முன் படைக்கிறோம்.

"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம் புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே"

என்ற புறநானூற்று மொழிகளுக்கேற்ப, புகழுடம்பு பெற்று விட்ட புலவர் பெருந்தகை, இறவாத புகழுடைய இலக்கியங்கள் பலவற்றைத் தமிழன்னைக்கு அணிசெய்ய அளித்துவிட்டுச் சென்றுள்ளார். புலவர் அவர்களின் முன்னைய படைப்புகளுக்குத் தமிழகத்துப் பெரியோர்களாகிய தாங்கள் காட்டிய பேரன்பையும், பாராட்டையும், ஆதரவினையும் தொடர்ந்து அளித்திட வேண்டுகிறோம்.

"தமிழுக்குத் தொண்டு செய்வார் சாவதில்லை" என்றார் பாவேந்தர். தம் வாழ்நாள் முழுவதும், காலம் கரம் பிடித்து அழைத்துப் போன அந்தக் கடைசி நொடி வரை, தமிழ்ப்பணி ஆற்றிய புலவர் அவர்கள் வாழ்வார்! அவர் தமிழ் உலகிற்கு அளித்துச் சென்றுள்ள இலக்கியச் செல்வங்கள் உள்ளவரை என்றென்றும் நிலைத்து வாழ்வார்! தமிழ் படிப்போர் நெஞ்சமெல்லாம் நிறைந்து வாழ்வார் என்பது உறுதி!

—எழிலகம் பதிப்பகத்தார்

# பொருளடக்கம்


பதிப்புரை

வரலாறு

1. வஞ்சி மூதூர் 11
2. சைவ சமயம் 22
3. வைணவ சமயம் 29
4. சமண சமயம் 37
5. பௌத்த சமயம் 42
6. ஓவியக் கலை 47
7. இசைக் கலை 53
8. பாசனம் 60

இலக்கியம்

9. தாமரையும் தும்பியும் 71
10. ஆநாண் விடையும், துணை புணர் ஏறும் 73
11. வாடும் மஞ்சையும் ஆடும் தோகையும் 75

வாழ்வியல்

12. காதலும் கடமையும் 79
13. போரும் போராட்டமும் 83
14. அறிவுச்செல்வம் 89
15. இறைவன் இருக்கும் இடம் 95
16. புலி நிகர் மாந்தர் 98

அரசியல்

17. மக்களாட்சியின் மாண்பு 105

# வரலாறு

# 1. வஞ்சி மூதூர்

வைகைக் கரையில் மதுரை, காவிரிக் கரையில் உறையூர் எனப் பாண்டிநாட்டுத் தலைநகரமும், சோணாட்டுத் தலைநகரமும் பேராற்றங்கரையில் இடம் பெற்றிருத்தலைப் போன்றே, சேரநாட்டுத் தலைநகராய வஞ்சியும் ஒரு பேராற்றங்கரையிலே இடம் பெற்றிருந்தது. வஞ்சி மாநகர்க்கு வளம் தந்த பேராறு, தண்பொருநை, தண்ணான் பொருநை எனப் பலவற்றான் அழைக்கப்பெறும்.

பொருநையாற்றுப் பாய்ச்சல் வஞ்சிக்குப் புகழ் அளித்தது. வற்றாப் பெருவெள்ளம் பாயும் பொருநை, வஞ்சிமா மாநகரை வளைத்து ஓடி, அந்நகர்க்கு இயற்கை அரணாக அமைந்தது. பொருநையாற்று நீர், வஞ்சியின் புறமதிலுக்கு முத்தம் தருதல் போல் பலகால் மோதிப் பாய்ந்தோடும் காட்சி காண்டற்கு இனிது. கருவூர் என்ற பிறிதொரு பெயர் பூண்ட வஞ்சிநகர்த் துறையில், ஆன் பொருநைநீர் அடித்துக் கொணர்ந்து குவிக்கும் தூய வெண் மணலில் வஞ்சி மக்கள், மாலைக் காலத்தில் விரும்பிவந்து வீற்றிருந்து வீடு திரும்புவர். வஞ்சி மாநகரின் வஞ்சிக் கொடியார், தம் திண்ணைகளில் அமர்ந்திருப்பார் போல், அம்மணல் மேட்டில் இருந்து, தம் கைவளை ஒலிக்கக் கழங் காடி மகிழ்வர்.[1]

இவ்வாறு வஞ்சியர் நகரின் வளம்பெருக்கி, அரண் அளித்துப் புகழ் பரப்பியும், மணல் குவித்து அந்நகர் மக்களுக்கு மகிழ்ச்சி ஊட்டியும் ஓடிற்று அவ்வான்பொருநை[2]

ஆன் பொருநையாற்றைக் கடந்து கரையேறியவர். காவற்காட்டைக் கடந்தபின்னரே வஞ்சிமாநகரை அடைதல் இயலும். குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்ற சோழன், கருவூர் எனவழங்கப் பெறும் வஞ்சிமாநகரை, ஒரு காலத்தில் முற்றியிருந்தான். அது கண்ட புலவர் ஆலத்தூர் கிழார், அவ்வளவன் பால் சென்று, "வளவ! உன் வீரர்கள், தொழில் செய்து செய்து காய்ப்பு ஏறிய கைகளை கொண்ட கொல்லர் வாளரம் கொண்டு வடித்துக் கூர்மையாக்கிய கோடாலிகளால், கருவூர்க் கோட்டையின் காவற்காட்டு மரங்களை வெட்டி வீழ்த்துகின்றனர்; மணம் கமழும் மலர்களை நிலையழிந்து அக்காவற்காட்டை அடுத்து ஓடும் ஆன் பொருநையாற்றில் வீழ்ந்து, அங்கு வெள்ளநீர் குவித்துச் சென்ற வெண்மணலைச் சிதறப் பண்ணுகின்றன கோடாலி வீழ்ந்து வெட்டும் ஓசை, மதிலகத்திலுள்ள மன்னவன் காதுகளில் பாய்கிறது. இவ்வாறு காவற்காடு அழிபடுவதைக் கண்டும், சிவந்து செருமேற்கொண்டு வரக் கருதிலன்; அத்தகையானொடு, மேலும் அமர்கொண்டு நிற்றல், ஆண்மையும் ஆற்றலும் வாய்ந்த அரசர்க்கு அறமோ, அழகோ ஆகாது எனக்கூறிய அறிவுரையால், கருவூர்க் கோட்டையில், காவாற் காட்டின் இடமும், இயல்பும் இனிது விளங்குவது அறிக.[3]

வஞ்சி மாநகரத்துப் புறநகர், ஏனைய நகரத்துப் புறநகர்களை போலவே காவற்காட்டிற்கும், மதிலைச்சூழ இருந்த அகழிக்கும் இடையே அமைந்திருந்தது. கடவுளர் உறையும் கோயில்களுக்கும், தவநெறி மேற்கொண்ட துறவிகளும், அறநூல் பல அறிந்து அறிவு வாய்ந்த ஆன்றோர்களும், மக்களை மாண்புடையவராக்கும் மதிநலம் வாய்ந்த பாக்களைப் பாடவல்ல புலவர்களும் வாழ்தற்கு ஏற்றஅறப்பள்ளிகளுக்கும், அவர்கள் இருந்து அறிவாராய்ச்சி மேற்கொள்ளும் மேடைகளுக்கும், புறநகர் அகநகர்மக்கள் பொழிலாடியும், புனலாடியும் மகிழ்தற்கேற்ற தண்மலர்ச்

சோலைகளுக்கும், தாமரைப் பொய்கைகளுக்கும் இடமாய் அது விளங்கிற்று.[4]

வஞ்சி மாநகரை வளைந்து நிற்கும் கோட்டைக்கு அரண் அளித்து நிற்பது காவற்காடு; ஆகவே, அக்காவற் காட்டினைக் காப்பதில் அரசர்கள் கருத்துடையராய் இருந்தனர்; அதனால் காவற்காட்டைக் காக்கும் வீரர் களை, அக்காவற்காட்டை அடுத்திருக்குப் புறநகரில் வாழ வைத்தனர்.

தம்மோடு நட்புடையராய் வாழும் பிறநாட்டு வேந்தர்கள், தம் தலைநகர்க்கு வந்து, தம்மோடு சிலநாள், வாழ்தலும் உண்டு அவ்வாறு வரும் வேந்தர்கள் நண்பர் களேயாயினும் வேற்று நாட்டு வேந்தர்களைத் தலைநகர் அகத்தே வாழவைத்தல், அரசியல் அறிவுடைமை ஆகாது; அது, தம் படைவலிமையை அவர்கள் அறிந்துகொள்ள வாய்ப்பளிப்பதாகும்; அது தம் ஆட்சிக்கு ஆக்கம் அளிப்ப தாகாது. அதனால், அவ்வேந்தர்களை வரவேற்று இருக்க வைக்கும் விருந்தினர் மாளிகைகளை, வஞ்சி வேந்தர் புறநகரில் அமைத்தனர்.[5]

கங்கைக் கரைக்கண் நிகழ்ந்த போரில் தோற்று கண்ணகிச் சிலைக்கு வேண்டும் கல் சுமந்து வந்து சிறைப் பட்ட கனகவிசயர் என்ற வடநாட்டு வேந்தர்களைக் கண்ணகிக்குக் கோயில் கட்டிச்சிலை நாட்டிச் செய்யும் விழாவின் நினைவாய் விடுதலை செய்து, விழா முடியுங் காறும் வைத்திருந்து, அவர்க்கு, வேண்டுவன எல்லாம் விரும்பி அளித்து அன்பு காட்டி அனுப்பும் பெரும் பணியைத் தன்பெரும் படைத் தலைவனாய வில்லவன் கோதைபால் ஒப்படைத்த செங்குட்டுவன், அவர்களை, வஞ்சி மாநகரை வளைத்திருந்த மதிலைச் சூழ அமைந்திருந்த அகழிக்கும் அப்பால், புறநகரில், பூஞ்சோலைகளுக்கிடையே அமைந் திருந்த, வேண்மாடம் அல்லது வேளாவிக்கோ மாளிகை

எனப்பெயர் பூண்ட விருந்தினர் மாளிகையில் வாழவைக்கும் வண்ணம் பணித்தான் எனச் சிலப்பதிகாரம் செப்புவது அறிக.[6]

புறநகர் மக்கள் அகநகர் புகினும், அகநகர் மக்கள் புறநகர்வரினும், அகழியைக் கடத்தல் வேண்டும். அரண் கருதி அமைக்கப்பட்ட அகழி, 'அவ்வரணகத்து' மக்களின் வாழ்க்கைத் துணையாயும் விளங்குதல் வேண்டும் என அவ்வேந்தர்கள் விரும்பினர்; அதனால், அவ்வகழியில், அடியிட்டாரைக் கவ்வி ஈர்த்துக்கொன்று உயிர் போக்கும் கொடுமை வாய்ந்த இடங்கர் போலும் முதலை இனங்களை வளர்த்ததோடு, மீன்களை விடுத்து அகழி நீர் தூய்மை யுறவும், மக்களின் மனைகளினின்றும் கழித்துவிடப்படும் கழிநீர், நகரில் கண்ட கண்ட இடங்களில் தேங்கி, நகர்வாழ் மக்களை நோய்க்கு உள்ளாக்கா வண்ணம், அந்நீரல்லாம் தான் ஏற்று, நகரின் நோய்போக்கும் நல்ல மருத்து வனாகவும் விளங்கிற்று அவ்வகழி; அம்மட்டோ! கழிநீர் தேங்கிக்காணவும், அணுகச்சென்று நிற்கவும் இயலாவாறு, மூடை நாற்றம் வீசும் அவ்வகழியில் அழகும் மணமும் வாய்ந்த அல்லி, தாமரை முதலாம் மலர்க்கொடிகளை வளர்த்து, அதைக் கண்ணும் மனமும் விரும்பும் காட்சி யுடையதாக மாற்றி மகிழ்ந்தனர்.[7]

மனைகளில், மகளிர் நீராடிக் கழித்த நீரும், ஊர்ப் பொதுவிடத்தில் உள்ள, வேண்டுமளவு நீரை நிறைக்கவும் போக்கவும் வல்ல பொறி அமைந்த குளத்தில், நகர நம்பியரும், நங்கையரும், குளித்து எழுந்தொறும் எடுத்து விடப்படும் நீரும், மன்னவன் பிறந்த நாள் விழாவில் வருவார்மீது வீசிய வாசனை நீரும் அருளறம் மேற்கொண்ட ஆன்றோர்களை வணங்கி வரவேற்பார், அவர் அடிகளை கழுவி விடுக்கும் நீரும், அருள் உள்ளம் பெற்ற பெரி யோர்கள், ஆங்காங்கே வைத்து நடாத்தும் அறச்சாலை

களில், வருவார் உண்ணுங்கால் ஒழுகிய மணம் நாறும் உண்ணுநீரும், அகில் ஆரம் முதலாம் அறுவகை மணப் பொருள்களையும் ஒன்றுகூட்டி அரைத்து விடுத்த நீரும், நகரின் நடுவே நின்று தேங்காது, நகர வீதிகளின் ஓரத்தே அமைந்த கழிநீர்க்கால்வாய்கள் வழி ஓடி, நகர்ப்புறத்தில் ஒன்று சேர்ந்து, இறுதியில் அகழியில் வீழ்ந்து, அவ்வகழி நீரோடு ஒன்று கலக்குமாறு நகரெங்கும் ஒன்றொடொன்று இணைந்து கிடக்கும், சிறியவும் பெரியவுமான கழிநீர் கால் வாய்களை மண்ணுக்கடியில் பொறுத்தி வைத்தனர்.[8]

அகநகரைச் சூழ, அகழிநீர் அலைக்க அமைந்திருந்த மதில் அகழலாகா அடி அகலமும், அழிக்கலாகத் திண்மையும், ஏணியிட்டு ஏறலாகா உயர்வும், அரணகத்து வீரர், அகத் திருந்தவாறே, புறத்தே சூழ்ந்து கிடக்கும் பகைவர் படையை அம்பு ஏவி அழிக்குமாறு ஏவறைகள் அமைத்த தற்கேற்ற தலையகலும் வாய்ந்தது அம்மதில், அம்மட்டோ; அம்மதிலில், பகைவர் கண்ணிற்குப் புலனாகாவாறு, பல வகைப்பட்ட பொறிபடைகளும், ஆங்காங்கே பொறுத்தி வைக்கப்பெற்றிருந்தன,[9]

நகரின் நாற்புறமும் அமைந்திருந்த வாயில்கள் பலநிலைகளைக்கொண்ட மாடங்களோடும், அம்மாடங்கள் மீது ஏற்றிய வில்பொறித்த கொடிகளோடும் நின்று, வெண்ணிறச் சுண்ணம் பூசப்பெற்று வெள்ளி மலையை இடையே குடைந்து வழிகண்டாற்போலும் காட்சி அளிக்கும் சிற்பமும், ஓவியமும், அம்மாடங்களுக்கு மேலும் சிறப்பை யளித்துத் திகழ்ந்தன.[10]

வாயிலைத்தாண்டி நகருக்குள்ளே செல்வார், வாயிலைக் காக்கும் வீரர்கள் வாழும் வீதிகளையும், மீன், உப்பு, கள், அப்பம், பிட்டு ஆகிய ஏழை மக்களின் உணவுப்பொருள் களை விற்கும் சிறு வாணிகர் வீதிகளையும், வாசனைப் பொருள்களை விற்போர் வீதியையும். இறைச்சி வணிகர்

வாழும் வீதியையும், மண்கலம் வினையும் குயவர்களும், செப்புக்கலம் செய்யும் செம்பு கொட்டிகளும், வெண்கலம் வினையும் கன்னாரும், பொற்கொல்லரும், தச்சரும், பாவை பண்ணும் சிற்பியும், ஆடை ஆக்கித் தரும் தையற்காரரும் மலர் மாலை கட்டித் தருவோரும், காலம் அறிந்து கூறும் காலக் கணிதரும், யாழ் இசைக்கும் பாணர் களும் வாழும் வீதிகளையும், சங்கறுத்து வளையல் முதலா யின செய்வோர் வீதியையும், நவமணித் தொழிலாளர் வீதியையும், நாடகக் கணிகையர் வீதியையும், நெல், புல் முதலாம் எண்வகைக் கூலங்கள் குவிந்து கிடக்கும் கூல வீதியையும் நின்று வாழ்த்தவும், இருந்து வாழ்த்தவும் உரிமை வாய்ந்த சூதர், மாகதர், வேதாளிகர் வீதிகளையும், கண்ஒளிநுழையா நுண்ணிய நூலால் ஆன மெல்லிய ஆடை களை விற்போர் வாழும் அறுவையர் வீதியையும், நால் வகைப் பொன்னின் நலந்தெரிந்து விற்கும் பொன் வணிகர் வீதியையும், அந்தணர் சேரியையும், அரச வீதியையும், அமைச்சர் முதலாம் அரசியல் துணைவர்களின் வீதிகளையும் வரிசையாகக் கடந்து சென்றால் நகரின் நடுவே, அரசன் பெருங்கோயிலைக் காண்பர்.[11]

வெள்ளி மாடம் எனப் பெயர் பூண்ட, வஞ்சிமாநகரத்து அரசன் பெருங்கோயில், அந்நகரின் நடுவே நாற்புறமும், வாணிக வீதி முதலாம் பல்வேறு வீதிகள் சூழ்ந்து கிடக்க, பொன்னால் வேயப்பட்டு, நீர் சூழ்ந்த உலகின் இடையே, தனிமிக உயர்ந்து விளங்கும் மாமேரு மலைபோல் மாண்புறத் தோன்றும்.[12]

நகரின் இடையிடையே. நான்கு தெருவு கூடும் சதுக்கங் களிலும், மூன்று தெருவு கூடும் முச்சந்திகளிலும், நிழலும், நிறைந்த பழங்களும் தரும் மரங்கள் வளர்ந்த மேடைகளும், வெளியூர் மக்கள் வந்து தங்குவதற்கேற்ற பொது மன்றங் களும், அமைந்திருக்கும்; இந்நகரில், அரசன் கோயிலுக்கு,

அணித்தாக, குதிரைகளையும், யானைகளையும் பழக்கப் பயன்படும் செண்டுவெளிகளும் காணப்படும். அரசனும், அவன் மனைவியும் சென்று மகிழ்தற்கேற்ற, அருவி வீழும் அழகிய செய்குன்றும், இளமரக்காவும், தாமரைக்குளமும், அவ்விடங்களை அடுத்து இடம் பெற்றிருக்கும். இவற்றொடு, அறச்சாலைகளும், அழகிய பொன்னம்பலங்களும், தவப் பள்ளிகளும் அவ்வநகர்க்கு அணிசெய்து கிடக்கும்.[13]

அறநூல் கேட்கும் அவாவுடையவராய், அந்நகருக்கு வரும் பலநாட்டு அடியார்களும், அவர்களுக்கு அறம் உரைக்கும் அடிகளாரும் இருக்கத்தக்க, இந்திர விகாரம் எனப் பெயர் பூண்ட புத்தன் கோயில் ஒன்றும் அவ்வஞ்சி மாநகரில் விளங்கிற்று.[14]

கண்ணகி கணவன் கோவலனுடைய ஒன்பதாம் தலைமுறைப் பாட்டனாகிய கோவலன் என்பான், சாரணர் பால் அறம்கேட்டு, அருள் உள்ளம் மேற்கொண்டு, தன் முன்னோர் வைத்துச் சென்றனவும், தான் ஈட்டி வைத்தனவு மாய தன் பெரும் பொருளை வருவார்க்கு வழங்கிய பின்னர் தான் இருந்து துறவறம் மேற்கொள்வதற்கு என அமைத்த புத்தன் கோயில் ஒன்றும் அஞ்வஞ்சிமாநகரில் இடம் பெற்றிருந்தது.[15]

கங்கைச் சடைமுடிக் கண்ணுதலும், நீள் நிலம் அளந்த நெடுமாலும் வீற்றிருக்கும் கோயில்கள் இரண்டும் அந் நகர்க்கு அழகு தந்து நின்றன. வடநாடு நோக்கிப் படை யெடுத்துச் சென்ற செங்குட்டுவன், செல்லும் முன்னர், சிவன் கோயிலார் அளித்த திருவடிப்பேற்றினைத் தலை யிலும், திருமால் கோயிலார் அளித்த திருவடிப்பேற்றினை புயத்திலும் ஏற்றுக்கொண்டான் எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது.[16]

வஞ்சிமாநகர், ஒரு பேரரசின் தலைநகர்; அதனால் அவ்வரசிற்குப் பணிந்து திறைதரும் அரசர்களும், அவரோடு பகைகொண்டு வாழும் அரசர்களும், அவ்வஞ்சி நாட்டார் எந்த நேரத்தில் தம்மீது போர்தொடுத்து விடுவரோ என அஞ்சி அஞ்சி வாழ்ந்தனர்; வஞ்சியாரின் அரசியல் முறைகளை, அவர் படைகளின் பெருமையை; அவற்றின் போக்கினை அறிந்துகொள்வதில் ஆர்வம் காட்டினர்; அதனால் அந்நாடுகளைச் சேர்ந்த ஒற்றர்கள், அவ்வஞ்சி நகரில் எக்காலமும் வந்து வாழ்ந்திருந்தனர்; அமர்முறையும் அரசியல் முறையும் வல்ல வஞ்சிவேந்தர்களும், வேற்று நாட்டு ஒற்றர்கள் தம் தலைநகரில் வாழ்வதை அறிந்தும், அவரால் தமக்கு எக்கேடும் வராது எனும் துணிவால், அவர் வரவையும் வாழ்வையும் தடுத்திலர்.

கண்ணகி சிலைக்குக் கல் கொணற, செங்குட்டுவன் வடநாடு செல்லத் துணிந்தபொழுது "வேந்தே! வடநாடு செல்லும் நின் கருத்தினை, ஆங்குள்ள அரசர்க்குத் திருமுகம் அனுப்பித் தெரிவித்தல் நலமாம்" எனப் படைத்தலைவன் வில்லவன் கோதை கூறியபொழுது, அமைச்சர் அழும்பில் வேள், "அரசே! நாவலந்தீவில் நம் பகைவராய் உள்ள அரசர்களின் ஒற்றர்கள், வஞ்சிநகரை விடுத்து இமைப் பொழுதும் அகல்வதில்லை. அவ்வொற்றர்கள், நம் வடநாட்டுச் செலவைத் தம் அரசர்க்கு அறிவித்துவிடுவர். ஆகவே, நம் படையெடுப்புச் செய்தியை, அவ்வொற்றர் அறியுமாறு, நம் நகர வீதிகளில் பறையறைந்து அறிவித்தல் ஒன்றே போதும்." எனக் கூறினார் என்ற சிலப்பதிகாரச் செய்தியால், பகைநாட்டு ஒற்றர்களின் வஞ்சிநகர் வாழ்வு உறுதியாதல் உணர்க.[17]

## சான்றெண் விளக்கம்

1. "தன்பொருநைப் புனல் பாயும்
விண்பொருபுகழ் விறல் வஞ்சி"

—புறம்-11

"வருபுனல் நீர் ஆன் பொருநை
சூழ் தரும் வஞ்சி"

—சிலம்பு : 29 : 17 : 14-15

2. "வஞ்சிப் புறமதில் அலைக்கும்
கல்லென் பொருநை"

— புறம் : 387

"திருமாவியன் நகர்க் கருவூர் முன்துறைத்
தெண்ணீர் உயர்கரை குவைஇய
தண்ஆன் பொருநை மணல்"

— அகம் : 93

"மகளிர், பொலஞ்செய் கழங்கில் தெற்றியாடும்
தண்ஆன் பொருநை."

—புறம் : 36

3. "தண்ஆன் பொருநை வெண்மணல் சிதையக்
கருங்கைக் கொல்லன் அரஞ்செய் அவ்வாய்
நெடுங்கை நவியம் பாய்தலின் நிலையழிந்து
வீகமழ் நெடுஞ்சினை புலம்பக் காவு தொறும்
கடிமரம் தடியும் ஓசை, தன்ஊர்
நெடுமதில் வரைப்பின் கடிமனை இயம்ப
ஆங்கு இனிது இருந்த வேந்தன்"

புறம் : 36

4. "தேவகுலமும், தெற்றியும், பள்ளியும்,
பூமலர்ப் பொழிலும், பொய்கையும் மிடைந்து
நற்றவமுனிவரும், கற்றடங்கினரும்,
நன்னெறி காணிய தொன்னூற் புலவரும்
எங்கணும் விளங்கிய எயிற்புற இருக்கை"

— மணி : 26: 72 — 76

5. "வேற்று மன்னரும், உழிஞைவெம் படையும்
போற்புறம் சுற்றிய புறக்குடி"

மணி : 28 : 3-4

6. "ஆரிய அரசரை அருஞ்சிறை நீக்கிப்
பேரிசை வஞ்சிமூதூர்ப் புறத்துத்
தாழ்நீர் வேலித் தண்மலர்ப் பூம்பொழில்
வேளாவிக்கோ மாளிகை காட்டி
நன்பெரு வேள்வி முடித்தற் பின்னாள்
தம்பெரும் நெடுநகர் சார்வதும் சொல்லி, அம்
மன்னர்க்கு ஏற்பன செய்க நீ என
வில்லவன் கோதையை விருப்புடன் ஏவி"

சிலம்பு : 28 : 195—202

7. மணிமேகலை : 28 : 17-22

8. மணி : 28 :5-17

9. மணி : 28 : 23-23

10. மணி : 28 : 25-28

11. மணி : 28 : 29-58

12. சிலம்பு : 25 : 4-5; 28 : 47-50

13. மணி : 28 : 59-67

14. "அந்தரசாரிகள் அமர்ந்து இனிது உறையும்
இந்திரவிகாரம் என எழில் பெற்று
நவையுறுநாதன் நல்லறம் பகர்வோர்
உறையும் பள்ளி."

மணி : 28 : 69-72

15. "நின்பெருந் தாதைக்கு ஒன்பது வழிமுறை
முன்னோன் கோவலன் மன்னவன் தனக்கு
நீங்காக் காதற் பாங்கன் ஆதலின்,
தாங்கா நல்லறம் தானும் கேட்டு
முன்னோர் முறைமையின் படைத்ததை அன்றித்
தன்னான் இயன்ற தனம்பல கோடி
எழுநாள் எல்லையுள் இரவலர்க்கு ஈத்துத்
தொழுதவம் புரிந்தோன் சுகதற்கு இயற்றிய
வானோங்கு இமையத்து வால்ஒளிச் சயித்தம்
ஈனோர்க்கெல்லாம் இடர்கெட இயன்றது."

மணி : 28 : 123-32

16. ஆடகமாடத்து அறிதுயில் அமர்ந்தோன்
சேடங்கொண்டு சிலர்நின்று ஏத்தத்
தெண்ணீர்கரந்த செஞ்சடைக் கடவுள்
வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்
ஆங்கது வாங்கி அணிமணிப் புயத்துத்
தாங்கின னாகித் தகைமையிற் செல்வுழி"

சிலம்பு : 26 : 62-67

17. "நாவலந் தண்பொழில் நன்னார் ஒற்றுநம்
காவல் வஞ்சிக் கடைமுகம் பிரியா;
வம்பணியரணை வேந்தர் ஒற்றே
தம்செவிப் படுக்குந் தகைமையவன்றோ
அறைபறை என்றே அழும்பில் வேள் உரைப்ப"

சிலம்பு : 25 : 175-177

ஒரு கூறாகிய பெண்ணைப் பழித்தல் போலும் செயல்களின் பால் வெறுப்புக் கொண்ட மக்கள், சமண சமயத்தின் பால் பண்டு காட்டிய ஆர்வத்தை மெல்ல மெல்லக் கைவிடலாயினர்.

அந்நிலையில் சைவ சமயப் பெரியார்கள், சமணர் பின்பற்றிய அருள் நெறிகளாகிய, தண்ணீர்ப் பந்தல் வைத்தல், மடங்கள் அமைத்து கல்வி புகட்டுதல், அறப் பணிகள் ஆற்றுதல், வரும் அன்பர்களுக்கு விருந்தளித்து ஓம்புதல் போலும் செயல்களை மேற்கொண்டு, மக்களின் ஆதரவைப் பெறலாயினர். மக்கள் மனதை ஈர்க்கும் வகையில் கோயில்களில் ஆடல் பாடல்கள் இடம் பெற்றன: இனிய இசையோடு கூடிய பாடல்கள் ஆலயங்களில் பாடப் பெற்றன.

இவ் வகைகளால், சைவ சமயம் பல்லவர் காலத்தில் சிறப்பான இடம் பெற்று விட்டது. ப்ல்லவ மன்னர்களில் பலர் சைவராவர்; மகேந்திரவர்மன் தொடக்கத்தில் சமணனாக இருந்து பின்னர்ச் சைவனாக மாறினான். சைவராகப் பிறந்த மருள்நீக்கியார், சமண சமயப் போதனையில் மயங்கிச் சமணரானார்; ",நல்லாறு தெரிந்துணர, நம்பர் அருளாமையினால் கொல்லாமை மறைந்துறையும் அமண சமயம் குறுகினார்" பின்னர் உண்மை தெரிந்து மீண்டும் சைவரானார், சமணம் விடுத்துச் சைவராக மாறியது கண்டு கொதித்தெழுந்த சமணர் சொல் கேட்டு, அவருக்கு இழைத்த கொடுமைகளை எல்லாம் சிவன் அருளால் அவர் கடந்தது கண்ட அளவே மகேந்திரவர்மனும், சைவ சமயத்தால் ஈர்க்கப்பட்டான் என்பர். உடனே சமணனாக இருந்த போது கட்டிய திருப்பாதிரிப் புலியூர் சமணப் பள்ளியை இடித்து திருவதிகையில் சிவன் கோயில் கட்டினான். "லிங்கத்தை வழிபடும் குணபரன் இந்த லிங்கத்தினால், புறச் சமயத்திலிருந்து திரும்பிய ஞானம் உலகத்தில் நீண்டநாள் நிலை நிற்பதாக" என்று திருச்சி மலைக் கோயில்

கல்வெட்டுக் கூறுவது சைவ சமய வளர்ச்சியின் பெருமையை உணர்த்துகிறது.

நாவரசரும், ஞான சம்பந்தரும் தமிழகத்தின் கோவில்கள் தோறும் சென்று தேவாரப் பாடல்களைப் பாடிச் சைவ சமய வளர்ச்சியின் முழுமையைக் கண்டார்கள்; பரமேசுவரன், இராசசிம்மன், இரண்டாம் நந்திவர்மன் முதலியவர்கள் தமிழ்நாடு எங்கும் எண்ணிலாப் பல சிவன் கோயில்களைக் கட்டினார்கள். வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த காஞ்சி கைலாயநாதர் கோயில் இராசசிம்மனால் கட்டப் பட்டதாகும்.

இவ்வாறு அன்பே சிவம் எனும் அடிப்படையாகக் கொண்ட சிவ வழிபாடு பெருகி வரும் அதே நிலையில் வட நாட்டினின்றும் போந்த, காபாலிக, பாசுபத, காளமுகச் சைவ சமயங்களும் தமிழகத்தில் அங்கும் இங்குமாக இடம் பெற்றிருந்தன. நரசிம்மனின் படைத் தலைவராய், வாதாபியை வெற்றி கொண்ட பரஞ்சோதியார் என அழைக்கப்படும் சிறுத்தொண்டர் தம் மகனையே அறுத்துச் சமைத்த உணவை காபாலிக அடியார்க்குப் படைத்தமை உணர்க.

இவ்வாறு சமணத்தை அழித்துச் சைவத்தை வளர்த்த பணி, பல்லவ நாட்டில் மட்டுமல்லாமல் சோழ பாண்டிய நாடுகளிலும் நடைபெற்றது. சோழர் குலப் பாவையாகி, பாண்டியனை மணந்த பாண்டிமா தேவியாகிய மங்கையர்க் கரசியார் அழைப்பால் மதுரை வந்த திருஞான சம்பந்தர், பாண்டிய மன்னனுக்கு உண்டான வெப்ப நோயைத் தேவாரம் பாடித் தீர்த்தும், சமணர்களை வாதிட்டு வென்றும் பாண்டிய மன்னனையும் மக்களையும் சைவ ராக்கினார்.

வட நாட்டிலிருந்து புதிய வேகத்தோடு வந்து தங்களை அழித்து விட்டுத் தமிழகத்தில் இடம் பெற்று விட்ட சமண,

பௌத்த சமயங்களைத் துரத்துவதே தங்களின் முதற்கடன் என எண்ணியதால் சைவமும் வைணவமும் தங்களுக்குள்ளே பகை கொள்ளாது, ஒன்றுபட்டே அப்பணியை ஆற்றின. இந்நிலை பல்லவர்களை அடுத்துத் தமிழகத்தில் பேரரசு நடாத்திய சோழர் காலத் தொடக்கத்திலும் தொடர்ந்து இருந்தது. சமணத்தை அழிக்க முனையும் தம்மைப் போலவே பௌத்தை அழிக்க முனையும் திருமங்கை ஆழ்வார்பால் அன்பு கொண்ட ஞானசம்பந்தர் அவரைத் தாம் பிறந்த சீர்காழிக்கு வருகை தருமாறு வேண்ட திருமால் கோயில் இல்லாத ஊருக்குப் போகாத தம் கொள்கையை ஆழ்வார் நினைவூட்டி அவர் அழைப்பை ஏற்க மறுக்க ஒருகாலத்தே சீர்காழியில் கோயில் கொண்டிருந்த திருமால் பின்னர் கோயில் பாழுற்றுப் போனதால் கோயில் அர்ச்சகர் வீட்டில் இடம் பெற்றிருக்கும் உண்மையை சம்பந்தர் எடுத்துக் காட்ட சீர்காழி வந்து சம்பந்தரோடு சிலநாள் அளவளாவி மகிழ்ந்திருந்துத் திரும்பிய ஆழ்வார், திரும்புங்கால், அவ்வூர்ச் சிவன் கோயிலுக்குத் திருப்பணி ஆற்றிக் கொண்டிருக்கும் செல்வனை திருமால் கோயிலுக்கும் திருப்பணி ஆற்றுமாறு பணிக்க அவனும் அது செய்தான் எனத் திவ்விய சூரி சரிதம் என்ற வைணவ நூல் கூறும் வரலாற்று நிகழ்ச்சி அக்காலை நிலவிய சைவ, வைணவ ஒற்றுமைக்கு ஓர் எடுத்துக் காட்டாம். மேலும் சோழர் குலத் தெய்வமாகக் கருதப்பட்ட நடராசப் பெருமான் எழுந்தருளி இருக்கும் தில்லை கோயிலில் கோவிந்தராசப் பெருமாளும் எழுந்தருளி இருக்கும் காட்சியைக் கோவை பாடிய மணிவாசகர் பாராட்டியுள்ளார்.

சமண, பௌத்த சமயங்களை வென்று புத்துயிர் பெற்ற சைவம், பல்லவர் காலத்தை விடுத்துச் சோழர் காலத்தில் அடியிட்டதும் புகழ் ஏணியின் உச்சிக்கே சென்று விட்டது. முதலாம் ஆதித்த சோழன். காவிரியின் இரு கரையிலும், காவிரியின் தொடக்கம் முதல், அது கடலோடு கலக்கும்வரை எண்ணிலாச் சிவன் கோயில்களைக் கட்டினான்.

இராசராசன் கட்டிய தஞ்சைப் பெரிய கோயிலும், அவன் மகன் இராசேந்திரன், கட்டிய கங்கை கொண்ட சோழபுரக் கோயிலும், சோழப் பேரரசின் சமயப் பணிக்குச் சிறந்த எடுத்துக் காட்டாம்.

மேலும், இராசராசன் காலத்தவரான நம்பியாண்டார் நம்பிகள், மூவர் தேவாரப் பாடல்களையெல்லாம் ஒன்று திரட்டித் திருமுறைகளாக வகுத்தார். தேவாரங்களைத் திருக்கோயில்களில் முறையாகப் பாடுவதற்கு வழி வகுக்கப் பட்டது; தேவாரம் பாடுவார்க்கும், அவருடன் மத்தளம் கொட்டுவார்க்கும், இசைக்கருவிகள் இயக்குவார்க்கும் நிவந்தங்கள் வைக்கப்பட்டன; தேவாரப் பாடல்களைப் பாடவும், பயிற்றுவிக்கவும், தேவார நாயகர் என்பான் தலைமையில் ஓர் அமைப்பே நிறுவப்பட்டது. கோயில்களில் வேதம் ஓத, வட நாட்டினின்றும் சர்வ சிவ பண்டிதர் என்பார், அவர் மாணவர்களுடன் வரவழைக்கப்பட்டார், சைவ சமயப் பெரியோர்களின் வரலாறு கூறும் பெரிய புராணத்தைச் சேக்கிழார் சோழர் காலத்தில்தான் ஆக்கி அருளினார்.

இவ்வாறு சைவ சமய வளர்ச்சி, ஆக்கபூர்வமாக ஒரு பால் வளர்ந்து கொண்டிருக்கும்போது, பிற சமய வெறுப்பும் மெல்லத் தலை தூக்கலாயிற்று. சமண, பௌத்த சமயங் களை அழிப்பதில் ஒன்றுபட்டுப் பணிபுரிந்த சைவமும், வைணமும், அவ்விரு சமயங்களும் அழிந்து விட்ட பின்னர்த் தம்மிடையே ஒற்றுமை குலைந்து ஒன்றையொன்று பகைத்துக் கொள்ளத் தொடங்கின; அந்நிலை சோழப் பேரரசின் பிற்காலத்தே ஏற்பட்டு விட்டது. வைணவ ஆசாரியரான இராமானுசரும், அவருடைய மாணவர்களும், சோழ மன்னன் ஒருவனால் நாடு கடத்தப்பட்டனர். தில்லை நடராசர் கோயிலில் எழுந்தருளி இருந்த கோவிந்தராசப் பெருமானின் திருமேனியை இரண்டாம் குலோத்துங்கன் பறித்துக் கடலில் எறிந்து விட்டான். சைவக் கோயிலில்

பணிபுரிபவர்களும், வைணவக் கோயிலில் பணிபுரிபவர்களும் உறவு கொண்டாடக் கூடாது எனச் சட்டமே விதிக்கப் பட்டது.

பள்ளிகளும், விகாரங்களும் அமைத்து, சமணர்களும், பௌத்தர்களும், அறப்பணி, அறிவுப்பணிகள் மூலம், மக்களைத் தம்பால் ஈர்த்ததைக் கண்ட சைவர்களும், தமிழக மெங்கும் மடங்களை நிறுவி, மக்களுக்குச் சமயக் கல்வி வழங்கியதோடு, ஏழை எளிய மக்களுக்கு, உணவும் உடையும், உறையுளும், உடல் நோய் போக்கும் மருத்துவமும் அளித்துச் சமயப் பணிபுரிந்து வந்தன. கடவுள் ஒருவர் உண்டு: உயிர் என்பது ஒன்று உண்டு; அவ் வுயிர் தன்னைத்தான் அறியவும், இறைவனை அடையவும் விடாமல் அதை தடுக்கும் இருள் ஒன்று உண்டு; அவை முறையே பதி, பசு, பாசம். எனப்படும் என்பதே சைவ சித்தாந்தமாகும்; இச் சைவ சித்தாந்த உண்மைகளை விளக்கும் உயர்ந்த நூல்களை ஆக்கி அருளிய பெருமை இம் மடங்களையே சாரும்.

சோழப் பேரரசின் காலத்தில் கண்ட; சைவ சமய நிலை, அவர்களுக்குப் பின்னர், ஆட்சிப் பொறுப் பேற்றுக் கொண்ட பாண்டியர் காலத்திலும், நாயக்கர் காலத்திலும் தொடர்ந்து இருந்து வந்தது. பாண்டிய மன்னர்களும், நாயக்க மன்னர்களும், சிவனுக்குப் புதிய கோயில்கள் கட்டுவது, பழைய கோயில்களைப் புதுப்பிப்பது, பண்டைய கோயில்களுக்கு முன்னோர் செய்து வைத்த அறக்கட்டளை களைப் பேணிக்காப்பது போலும் சமயப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்தனர். மன்னர்களும், மக்களும், இவ்வாறு, சைவ சமய உணர்வில் ஆராப்பற்று கொண்டு விட்டமையினாலேயே, முகமதியப் படை யெடுப்பாலும், ஐரோப்பியர் வருகையாலும், அது தன்னிலை கெட்டு அழிந்து விடாது, இன்றும் வளம் பெற்று வாழ்கிறது

# வைணவ சமயம்

காடு கொன்று நாடு கண்டு, ஆவும், ஆனிரையும் கொண்டு குடியோம்பும் வழக்கம் வந்த நிலையிலேயே, கடவுள், நினைவும் வர, அக்காடுறை மக்கள் தங்களைக் காக்கும் கடவுளாகத் திருமாலை மேற்கொண்ட நிகழ்ச்சி தொல்காப்பியர் காலத்திலேயே உருப்பெற்று விட்டது. "மாயோன் மேய காடுறை உலகும்" என்ற அவர் கூற்றும்; "முல்லை நிலத்துக் கோவலர், பல்லா பயன் தருதற்கு மாயோன், ஆகுதி பயக்கும் ஆபல காக்கவெனக் குரவை தழீஇ மடைபல கொடுத்தலின் அவன் ஆண்டு வெளிப் படும்" என்ற நச்சினார்க்கினியர் விளக்கமும் காண்க.

இவ்வாறு, தொல்காப்பியர் காலத்துக்கு முந்திய தமிழர்களிடையே இடம் பெற்று விட்ட வைணவ வழி பாட்டு முறை கடைச்சங்க காலத் தமிழர்களிடையே சிறப்பிடம் பெற்றுத் திகழ்ந்தது. திருமால், மாயன், மாயவன், நெடியோன் என்ற பெயர்களால் குறிக்கப் பட்டுள்ளான். விஷ்ணு என்ற வடமொழிப் பெயரின் தமிழ் வடிவமாகிய விண்ணு, விண்டு என்பதும் ஓரிரு இடங்களில் இடம் பெற்றுள்ளன.

திருமால், நீலமணி நிறமும், ஆழ்கடல் நீர் நிறமும் உடையவன்; அவன் கைகளில் சங்கும், சக்கரமும் ஏந்தி நிற்பான்; அவன் கொடி கருடன்: பாம்பின் மீது படுத்திருப் பான்; அவன் ஆயிரமாயிரம் கைகளும், ஆற்றலும் வாய்க்கப்

பெற்றவன். வேங்கடத்தில் அவனுடைய நின்ற கோலத்தையும், ஆடகமாடகத்தும், திருவரங்கத்தும் அவனுடைய அறிதுயில் கோலத்தையும் கண்டு வழிபட மக்கள் அவ்விடங்களுக்குச் சென்று வரும் வழக்கமும் அன்றே மூகிழ்த்திருந்தது; அழகர்மலை, திருமால் குன்றம் என்று அன்று அழைக்கப் பட்டது.

திருமால் அவதாரங்களாகிய இராமனையும், கிருஷ்ணனையும், அவர்கள் பற்றிய கதைகளையும் அக்கால மக்கள் அறிந்திருந்தனர்; இராமன், இராவணனை வென்ற இராமாயணக் கதை மக்களிடையே பயின்றிருந்தது: இராமன் வேதம் ஓதாவாறு ஓயாது குரல் எழுப்பிய காக்கைகளைக் கரையாதிருக்க இராமன் பணித்தான் என்ற செய்தியும், இராவணன் தூக்கிச் செல்லும் போது, சீதை கழற்றி எறிந்த அணிகளைக் குரங்குகள் கண்டு எடுத்தன என்ற செய்தியும் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப் பட்டுள்ளன; அது போலவே, கிருஷ்ணன், கண்ணன் என்ற பெயரில், சங்க இலக்கியங்களில் பல இடங்களில் குறிப்பிடப் பட்டுள்ளான்; குழல் இசைத்து ஆயர்குல மகளிருடன் ஆடிப் பாடி மகிழ்ந்த வரலாறும், ஆயர், குரவைக் கூத்தாடித் தன்னை மகிழ்விக்க அவர் துயர் தீர்ப்பான் என்ற நம்பிக்கையும் அக்கால மக்கள் அறிந்தனவாகும்.

நிலம் அளந்த வாமன அவதாரக் குறிப்பு; "அடியளந்தான் தாயது எல்லாம்" என்ற திருக்குறளில் இடம் பெற்றுள்ளது. சேரன் செங்குட்டுவன், ஆடக மாடத்து அறிதுயில் அமர்ந்த திருமாலை வழிபடுபவன் என்பது சிலப்பதிகாரத்தால் தெரிகிறது. கண்ணன், கண்ணனார் என்ற பெயர்கள். சங்ககால மக்கள் விரும்பி ஏற்றுக் கொண்ட பெயர்களாம் என்பது, அப்பெயர் தாங்கிய புலவர்கள் பலர் உண்மையால், புலனாம்.

கண்ணன் உடன்பிறந்த பலராமன், வாலியோன் என்ற பெயரால் கடைச்சங்க கால மக்கள் உள்ளத்தில் இடம் பெற்றிருந்தான்; அவன் மேனி வெண்ணிறம்; பாலும், வெண்சங்கும் அதற்கு உவமை காட்டப்படும்; அவன் படை உழு கலப்பை: அவன் கொடி பனை; அவனுக்குக் கோயிலும் இருந்தது! அது "வால் வளைமேனி வாலியோன் கோயில்" என அழைக்கப்பட்டது. திருமாலின் மகன் எனக் கருதப் பட்ட பிரமன், "முதியவன்", "மாமுது முதல்வன்" என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளான். "படைத்தோன் மன்ற அப் பண்பிலாளன்" என, அவன் தொழில் மதிக்கவும் பெற்றுள்ளது.

திருமாலின் மனைவி திருமகள்; உடன் பிறந்தவள், மாலவர்க்கு இளங்கிளை எனப்படும் கொற்றவை; திருமால் மருகன், முருகன், இவ்வுறவு முறையினையும் தமிழர்கள் அறிந்திருந்தார்கள். திருமகள், திருமாலின் மார்பில் இடம் பெற்றவள் என்பது, திருமாலைத் "திருஅமர் மார்பன்" என அழைப்பதால் புலனாம், திருமகளின் தமக்கையாகிய மூதேவி, வறுமைக்கு உரியவள்; தவ்வை என அழைக்கப்பட்டவள், "தவ்வையைக் காட்டி விடும்" என்ற குறள் காண்க. திருமகளை இருபுறமும் நின்று யானைகள் வழிபடும் காட்சி, கலித்தொகையுள் விளக்கப்பட்டுள்ளது. திருமகளுக்கு உரியதான இலகுமி என்ற பெயரும் அக்காலை ஆட்சியில் இருந்தது என்பது, மணிமேகலையின் முற்பிறவிப் பெயர் இலக்குமி என்பதாம் என மணிமேகலை குறிப்பிடுவதால் புலனாம்.

இவ்வாறு கடைச்சங்க காலத்தில் சிறப்போடு வாழ்ந்த வைணவ சமயம், கடைச்சங்க காலத்தை அடுத்துத், தமிழகம் புகுந்து, தமிழ் அரசுகளை அழித்து விட்டுத் தாமே ஆளத் தொடங்கிய களப்பிரர்கள், தம்மோடு கொண்டு வந்த பௌத்த, சமண சமயங்களால் அழிக்கப்பட்டு, வலி குன்றி

விட்டது. இந்நிலை அக்களப்பிரர்களை வென்று பல்லவர் ஆட்சியை நிறுவிய சிம்ம விஷ்ணு காலம் வரை நீடித்தது.

பல்லவர் பேரரசின் தொடக்கத்திலேயே வைணவம் மீண்டும் புத்துயிர் பெற்றுக் கிளர்ந்து எழுந்து விட்டது என்பதும், பல்லவ வேந்தர்கள் வைணவத்தைப் போற்றி வளர்த்தார்கள் என்பதும், களப்பிரர்களை அழித்தும் பல்லவப் பேரரசுக்குக் கால்கோள் விழாக் கண்ட முதற் பல்லவன் பெயரே "சிம்ம விஷ்ணு' என அமைந்திருப்ப தாலும், உதயேந்திரப் பட்டயம், அவனைக் குறிப்பிடுங்கால், "பக்தி ஆராதித்த விஷ்ணு, சிம்ம விஷ்ணு" எனக் குறிப் பிடுவதாலும் நன்கு புலனாம். தங்களின் பிறப்பிடமாகிய வடநாட்டில் தோன்றித் தங்களோடு உடன் வளர்ந்தவை என்பதால், பௌத்த சமண சமயங்கள் பால் பல்லவர்க்குத் தொடக்கத்தில் பற்றும் பாசமும் இருந்தன என்றாலும், அவர்கள் தமிழகத்தில் நிலைத்து விட்ட பின்னர், அவர்கள் உள்ளம், சைவத்திற்கும் வைணவத்திற்கும் அடிமையாகி விட்டது.

சைவ, வைணவ சமயங்களாகிய வைதீக சமயங்களின் வழிகாட்டியாக இருந்தவர்கள், மக்களிடையே பிறப்பு காரணமாக உயர்வு தாழ்வு கற்பித்துச், சமய வழிபாடு உயர்சாதியினர்க்கே உரித்து என்ற, மக்கள் ஒவ்வா வழி களைக் காட்டி வந்தனர். அதனால், அச்சமயங்கள், மக்கள் உள்ளத்தைப் பெரிய அளவில் கவரத் தவறி விட்டன; அந் நிலையில். தமிழகம் புகுந்த பௌத்த சமண சமயங்களின் தலைவர்கள் மக்களிடையே ஏற்றத் தாழ்வு கருதாமல், எல்லோரையும் ஒரு சேர மதித்து, நாடெங்கிலும் கல்வி நிலையங்களை நிறுவி, மக்களுக்குக் கல்வி அறிவு புகட்டியும், மக்களுக்கும், ஆடு மாடு முதலாம் மாவினங்களுக்கும் தனித் தனியே மருத்துவமனைகள் நிறுவி, நோய் போக்கியும், அறச்சாலை பல அமைத்து, கூன், குருடு, செவிடு, முடங்

களுக்கு உணவும், உடையும், உறையுளும் அளித்தும் மக்களின் மதிக்கற்பாட்டினைந் பெறவே, அவர்கள் பின் பற்றிய பௌத்த, சமண சமயங்களுக்கு மக்களிடையே செல்வாக்கு பெருகிற்று.

இந்நிலை, பல்லவர் காலத் தொடக்கத்தில் மாறி விட்டது: சமயத் தலைவர்களிடையே மாறுதல் இடம் பெற்றது! அறப்பணியும், அறிவுப் பணியும் ஆற்றி வந்த, பௌத்த, சமணத் தலைவர்கள் அப்பணிகளில் கவனம் செலுத்துவது விடுத்துப் போக போக்கியங்களில் ஈடுபடலா யினர்! அவர்கள் பண்டு மேற் கொண்டிருந்த நற்பணிகளால் அவர்கள் பால் மக்கள் பற்றும் பாசமும் கொண்டிருந்தனரே ஒழிய, ஆடை அற்றும், அழுக்கு மேனியராகவும் திரியும் அச்சமயத் துறவிகள் பாலும், உணவு வெறுத்து, உடலை வருத்தித் தவம் ஆற்ற வேண்டும் என்ற அவர் சமயக் கொள்கைபாலும் தீரா வெறுப்புக் கொண்டே இருந்தனர், அவ்வெறுப்பு, அவர்கள் பிற்காலத்தே மேற்கொண்ட தகா ஒழுக்கங்களைக் காண நேர்ந்ததும், அளவின்றி வளர்ந்து விட்டது.

இது ஒரு பால் நிகழ, சைவ, வைணவச் சமயவாதிகள் தங்களின் பண்டைய போக்கை மாற்றிக் கொண்டு ஆண்டவனை எல்லோரும் வழிபடலாம்; அவனை வழிபடக் கடுந்தவம் வேண்டியதில்லை; அன்பொழுகப் பாடிப் பரவினாலே போதும் எனக் கூறத் தொடங்கியநோடு, கோயில்களில், மக்களின் பற்றும் பாசமும் மிகும் வகையில் பாடல்களோடு கூடிய பெருவிழாக்களுக்கு வகைசெய்து விட்டமையாலும், மக்கள் பௌத்த சமண சமயங்களை வெறுத்து, சைவ வைணவ சமயங்களை வளர்க்கத் தலைப் பட்டனர்.

பௌத்தர்களையும், சமணர்களையும் வாதிட்டுவென்று அழிக்கும் பணியை, சைவ சமயக் குரவர்களாகிய நாவரசர்,

ஞானசம்பந்தர், மணிவாசகர் ஆகிய மூவர் பெரிய அளவில் மேற்கொண்டார்கள். என்றாலும், அப்பணியில், வைணவர்களுக்கும் பங்கில்லாமல் போகவில்லை. திருமங்கை ஆழ்வார், நாகப்பட்டினத்துப் பௌத்த விகாரத்தில் இருந்த பொன்னால் செய்யப்பட்ட புத்தர் சிலையைக் கவர்ந்து வந்து, அதைக் கொண்டு, பல கோயில் திருப்பணிகள் செய்தார் என்று குருபரம்பரை கூறுகிறது. மேலும்,

"வெறுப்போடு சமணமுண்டர் விதியில் சாக்கியர்கள் நின்பால்
பொறுப்பரியனகள் பேசில் போவதே நோயதாகி
குறிப்பெனக் கடையுமாகில் கூடுமேல், தலையை ஆங்கே
அறுப்பதே கருமம் கண்டாய் அரங்கமாநகர் உளானே"

என்ற கொண்டரடிப்பொடி ஆழ்வார் திருப்பாடல் வைணவப் பெரியார்கள், பௌத்த சமணர்கள் பால் கொண்டிருந்த வெறுப்புணர்ச்சியை விளக்குவதாகும்.

சமணனாக இருந்த மகேந்திரவர்மன் மாறியது சைவத்திற்கே என்றாலும், அவனுக்குப் பின் வந்த பல்லவர் பலரும் வைணவர்களாகவும் இருந்துள்ளார்கள். காஞ்சி வைகுண்டப் பெருமாள் கோயில், பரமேசுவர விண்ணகரத்துக் கோயில், நாமக்கல் மலையடியில் உள்ள குகைக் கோயில் போலும் பல கோயில்கள், பல்லவ வேந்தர்கள் கட்டிய வைணவக் கோயில்களாகும். வைணவ அடியார்களாகிய ஆழ்வார்கள், தமிழகத்தில் உள்ள வைணவக் கோயில்களுக்குச் சென்று, இனிய தமிழ்ப் பாக்கள் பாடி வைணவ சமயம் வளரப் பெருந்தொண்டு ஆற்றினார்கள்.

தமிழகத்துள் நுழைந்துவிட்ட பௌத்த சமண சமயங்களை அழிப்பதே மக்களின் தலையாய கடமை என்ற உணர்வு தளிர்விற்றிருந்த காலமாதலின், வைணவர்களும் சைவர்களும் தம்முள் பகைத்துக்கொள்ள முடியாது, புறச்சமய

ஒழிப்புப் பணியில் ஒன்றுபட்டே நின்றனர். சமணரை மதுரையில் வாதித்து வென்று சைவப் பயிர் தழைக்கப் பணி புரிந்து வரும் திருஞானசம்பந்தர், வைணவப் பெரியாராகிய திருமங்கை ஆழ்வாரைத் தாம் பிறந்த சீர்காழிக்கு வருகை தருமாறு வேண்ட, திருமாலுக்குக்கோயில் இல்லா ஊருக்குப் போகாத் தம் சமயக் கொள்கையைக் காட்டி, அவர் மறுக்க சம்பந்தர் சீர்காழியில் இடம்பெற்றிருந்த திருமால் கோயில் பேணுவார் அற்றுப்போனமையால், அங்கிருந்த திருமாலைத் தனியார் ஒருவர் போற்றி வருகின்றார் என்ற உண்மையை உணர்த்தவே, சீர்காழிக்கு வந்த திருமங்கை ஆழ்வார் திரும்புங்கால் அங்குள்ள சிவன் கோயிலுக்குத் திருப்பணி ஆற்றிவரும் ஒரு செல்வரை திருமால் கோயில் திருப்பணியையும் ஆற்றுமாறு பணித்து அவர் இசைவு பெற்றுத் திரும்பினார் எனக் கூறும் திவ்வியசூரி சரிதம் என்ற வைணவ நூல் குறிப்பு, சைவ வைணவர்களின் சமயங்களிடையே, அக்காலை நிலவிய ஒருமைப்பாட்டிற்கு ஓர் எடுத்துக்காட்டாம்.

வைணவ சைவ சமயங்களுக்கிடையே நிலவிய இவ்வொற்றுமை நீண்ட நாட்கள் நிலைபெற்றிருக்கவில்லை; தங்கள் பொதுப்பகையாகிய பௌத்த—சமண சமயங்கள் வீழ்ச்சி உற்ற பின்னர், வைணவர்களும் சைவர்களும் தத்தம் சமய வளர்ச்சியில் கருத்தூன்றலாயினார்; அதனால் அவர்களிடையே பகையுணர்ச்சி வளர்ந்தது; வைணவர்களுக்கும், சைவர்களுக்கும் இடையில் பற்பல இடங்களில் பூசல்கள் ஏற்பட்டன; வைணவக் கோயில் அர்ச்சகர்களோடு உறவு கொண்டிருந்தனர் என்பதற்காக, சிவன் கோயில் அர்ச்சகர் தண்டிக்கப்பட்ட நிகழ்ச்சியும் அக்காலை நடைபெற்றுள்ளது.

சோழர் ஆட்சிக் காலத்தில், இராமானுசர் நாடு கடத்தப்பட்டார்; தில்லைப் பெரிய கோயில் திருப்பணி மேற்கொண்ட இரண்டாம் குலோத்துங்கன், அக்கோயிலில்

எழுந்தருளி இருந்த, கோவிந்தராசப் பெருமாள் விக்கரகத்தைப் பெயர்த்துக்கொண்டு போய் கடலில் எறிந்து விட்டான்.

இவை போலும் எதிர்ப்புகளையுப் தாங்கிக்கொண்டு வைணவ சமயம், தமிழகத்தில் வளமார்வாழ் பெற்று வந்தது; வைணவர் சைவத்தோடு போராடியதோடு நில்லாமல், தம் சமயத்திற்கு உள்ளாகவே எழுந்த போராட்டத்தையும் தாங்கவேண்டியதாயிற்று; வைணவ சமயத்தின் இரு பிரிவுகளாகிய வடகலை, தென்கலைகளுக் கிடையே என்றோ துவங்கிய போராட்டம், இவ்விருபதாம் நூற்றாண்டிலும் ஓய்ந்திலது! உயர்நீதிமன்றங்களில், அவ் வழக்கு இன்றும் இருந்து வருகிறது; என்றாலும், சங்ககாலத்தில் அது பெற்றிருந்த வளத்தில், சிறிதும் குன்றாத வகையில் அது, தமிழகத்தில் இன்றும் இடம்பெற்று நிற்கிறது. சீவகசிந்தாமணியும், பெரிய புராணமும் சமண சைவ இலக்கியங்களாக அவ்வச்சமய வளர்ச்சிக்குத் துணை புரியக் கண்ட வைணவர்களும் கம்பராமாயணம், வில்லிபாரதம், பாகவதம் போலும் தீந்தமிழ் இலக்கியங்களை உருவாக்கி வைணவ சமய வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்துள்ளனர்.

# 4. சமண சமயம்

மௌரியப் பேரரசனாகிய சந்திரகுப்தனோடு வந்த சமண முனிவராகிய பத்திரபாபு என்பவர், வடநாட்டில் ஏற்பட்ட கொடிய பஞ்சத்திலிருந்து உயிர் பிழைத்து வாழ் வான் வேண்டி, பல்லாயிரவரை உடன் கொண்டு சரவண பெல்கோலாவில் தங்கினார் எனச் செவி வழிச் செய்தி கூறு கிறது. இச்செய்திக்கு வரலாற்றுச் சான்று உண்டா என்பது ஐயப்பாடாகவே உளது, எனினும், தமிழகத்தின் பல்லிடங்களிலும் காணப்படும் 'பிராமி' எழுத்துக் கல் வெட்டுக்கள், சமண சமயம், தமிழகத்துள், கி. பி. இரண் டாம் நூற்றாண்டிற்கு முன்பே நுழைந்து விட்டது என்பதை உறுதி செய்ய வல்லவாம்.

"உலோச்" என்பது, சமண சமய வழிபாட்டு நிலைகளுள் ஒன்று. அப்பெயர் தாங்கிய "உலோச்சனார்" என்ற புலவர் ஒருவர் கடைச்சங்க இலக்கியப் புலவர் வரிசையில் இடம் பெற்றுள்ளார். அவர் இயற்றிய பாக்கள், அகநானூறு புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை நூல்களில் இடம் பெற்றுள்ளன. ஆகவே, கடைச் சங்க காலத்திலேயே, சமண சமயம் மக்கள் உள்ளத்தில் ஆழவேர் ஊன்றி விட்டது என்பது தெளிவாயிற்று.

சைவ, வைணவ சமயங்களாகிய வைதீக சமயங்கள், மக்களிடையே பிறப்பு காரணமான உயர்வு தாழ்வு கற் பித்தும், ஆண்டவனை வழிபடவும், அவன் அருள் பெறவும்

உயர் சாதியினர்க்கே உரிமை உண்டு; கற்கும் உரிமையும் அவரதே என்பன போலும் ஏலா மொழிகளைக் கூறியும் வந்த நிலையில். தமிழகம் புகுந்த சமணர்கள், ஏழை எளிய மக்களுக்குக் கல்வி அறிவூட்டப் பள்ளிகளை நிறுவியும், அவர் உடற் பிணி போக்க மருத்துவ நிலையங்களைத் திறந்தும், பசிப்பார்க்கு உணவு படைக்க அறச்சாலைகளை அமைத்தும் தொண்டாற்றத் தொடங்கவே, மக்கள் உள்ளம் வைதீக சமயங்களை மறந்து, சமண சமயத்தின் பால் சென்றுவிட்டது. மேலும், கடைச்சங்க காலத்தை அடுத்துத் தமிழகத்துள் புகுந்து, தமிழரசுகளை அழித்துத் தம் ஆட்சியை நிறுவிய களப்பிரர்களும், அவர்களை அடுத்துத் தமிழ்நாடு ஆண்ட பல்லவர்களும் வட நாட்டவராக, அவர்கள் இயல்பாகவே சமண சமயத்தவர்களாகவும், அதன் வளர்ச்சியில் ஆர்வம் உடையவரர்கவும் ஆகிவிடவே, சமண சமயம், அக்காலை செல்வாக்கு பெற்றுவிட்டது.

கடைச் சங்க காலத்தில் காவிரிப்பூம் பட்டினம், சமண சமயத்தின் செல்வாக்கு மிக்க இடமாகத் திகழ்ந்தது. எண்ணற்ற சமணர்கள் ஆங்கு வாழ்ந்திருந்தார்கள். அவர்கள் வாழ்விடம், சமணப் பள்ளி அல்லது அமணப்பள்ளி என அழைக்கப்பட்டது. அவர்களுடைய வழிபாட்டிடம், அருகத் தானம் எனப்பட்டது. கந்தப்பள்ளி என்றும், நிக்கந்தக் கோட்டம் என்றும் அழைக்கப் பெற்ற சமணக் கோயில் ஒன்றும்; காவிரிப் பூம்பட்டினத்தில் இருந்தது. ஊர் ஊராகச் சென்று சமண சமயத்தைப் பரப்பி வரும் பணியை மேற்கொண்டவர்கள் "சாரணர்" என்றும், சமணத் துறவிகள் "சாவகர்" என்றும், உடல் வருத்தித் தவம் ஆற்றும் துறவிகள் "சாவக நோன்பிகள்" என்றும் அழைக்கப் பெற்றனர்.

கண்ணகிக்கும் கோவலனுக்கும் துணையாகக் காவிரி பூம்பட்டினத்திலிருந்து மதுரை வரை உடன் வந்த கௌந்தி

அடிகள் ஒரு சமணத் துறவுயாவர் ! போகும் வழியில், எதிர்ப் பட்ட சாரணர்களும் பிறரும், மதுரையில் இடைக்குல மடந்தை மாதரியும் அவரிடம் காட்டிய அன்பும் அடக்கமும், சமணப் பெரியார்களுக்கு, அக்காலை இருந்த செல்வாக்கை உணர்த்துவனவாம். கோவலனும் ஒரு சாவக நோன்பி என்று கூறினாள் கண்ணகி. கூறிய இவற்றால், கடைச்சங்க காலத்திலும், அதை அடுத்த காலங்களிலும், சமண சமயம், தமிழகத்தில் பெற்றிருந்த செல்வாக்கினை ஒருவாறு உணரலாம்,

கி. பி 470ல் வஜ்ஜிர நந்தி என்பவர் திராவிட சங்கம் என்ற பெயரால் ஒரு சமண சங்கத்தை நிறுவினார். அச் சங்கத்தில் உறுப்பினர்களாக இருந்த தமிழ் அறிந்த சமணர் கள், எண்ணற்ற தமிழ் நூல்களை ஆக்கித் தமிழை வளப் படுத்தினார்கள்.

சமண சமயம் பெற்றிருந்த இச்செல்வாக்கு பல்லவர் காலந் தொடக்கத்திலேயே அழிந்து விட்டது; சமணர்கள், நந்திகணம், சேனாகணம், சிம்ம கணம், தேவ கணம் எனத் தமக்குள்ளாகவே பிரிவினை வளர்த்துக் கொண்டார்கள். அவர்கள் ஒழுகலாற்றிலும் குறை நேர்ந்துவிட்டது; அறவுள்ளம் அழிந்து மறவுள்ளம்உடையவர்களாகிவிட்டனர் இதனால், மக்களுக்கு அவர் பால் வெறுப்பு வளரத் தலைப் பட்டது; அந்நிலையில், சைவர்களும், வைணவர்களும் தங்கள் சமயங்களை, ஏழை எளிய மக்களும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் எளிமையுடையதாக ஆக்கிக் கொண்டனர்; இதனால், சைவமும், வைணவமும் மக்களி டையே செல்வாக்கு பெற்றன.

இந்த வெறுப்புணர்ச்சியின் தலையாய கட்டமே, அப்பர் சமணம் விடுத்து மீண்டும் சைவர் ஆனது. அவரைப் பின் தொடர்ந்து எண்ணற்றவர் சமணம் விடுத்து சைவர் ஆயினர்.அது பொறாத சமணர்,அக்காலை அரசனாகஇருந்த

மகேந்திரவர்மன் சமணனாக இருந்ததைப் பயன் கொண்டு, அப்பருக்குத் துன்பங்கள் பல தந்தனர்; நீற்றறையில் விட்டனர்; நஞ்சு ஊட்டினர்; கொல்யானைக் காலில் இட்டு மிதிக்கச் செய்தனர்; இறுதியாகக் கல்லோடு கட்டிக் கடலில் போட்டனர். அவ்வளவு கொடுமைகளையும் தயங்காது தாங்கிக் கொண்டு, சைவராகத் திகழ்ந்தார் அப்பர்; அது கண்டு அரசனும், மனம் மாறிச் சமணம் விடுத்துச் சைவனானான்.

பல்லவ நாட்டில் இம்மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கும் அதே சமயம், பாண்டி நாட்டில் மன்னன் சமணனாக இருப்பது பொறுக்காத அவன் மனைவி மங்கையர்க்கரசியார் திருஞான சம்பந்தரை அழைக்க, அவர் சமணரால் தீர்க்க இயலாத மன்னன் நோயைத் தீர்த்து மன்னரைச் சைவனாக்கினார்: சமணர்களை வாதிட்டு வென்றார்; தோற்ற சமணர்கள் கழுவில் ஏற்றப்பட்டனர். இவ்வாறு கி.பி. ஏழாம் நூற்றாண்டின் இடைக் காலத்திலேயே, சமணம் இத்தகைய பேரழிவிற்கு உள்ளாகி விட்டது.

இவ்வாறு பல்லவ நாட்டிலும், பாண்டி நாட்டிலும், அரசர்களின் வெறுப்புக்கே உள்ளாகி அழிவை ஏற்றுக் கொண்ட சமண சமயம், பௌத்த சமயம் போல், அறவே அழிந்து விடவில்லை: விஜயாலய சோழர் வழிவந்த சோழர் பேரரசு நடத்திய காலத்தில், அது தமிழகத்தின் பல இடங்களிலும் செல்வாக்கோடு இருந்து வந்தது என்பதை, அக் காலக் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. சிவன் கோயில்களுக்கும், வைணவக் கோயில்களுக்கும், இறை நீக்கி நில தானம் அளிப்பது போலவே, சமணக் கோயில்களுக்கும் நிலம் விடப்பட்டது அத்தகைய நிலங்கள் "பள்ளிச் சந்தம்" என அழைக்கப்பட்டன. திருச்சிராப்பள்ளிக்கு அருகில், திருமலவாடி எனும் ஊரில் குந்தவை பிராட்டியார் ஒரு சமணக் கோயிலைக் கட்டியுள்ளார்கள். குலோத்துங்கன்

பெரும் பள்ளி என்ற சமணக் கோயிலுக்கு முதலாம் குலோத்துங்கன் இறையிலி நிலம் வழங்கியுள்ளான். வெடால் விளாப்பாக்கம் ஆகிய இடங்களில் அமைந்திருந்த சமணப் பள்ளிகளைப் பற்றிய குறிப்பும் கல்வெட்டில் காணப் படுகிறது. காஞ்சி மா நகரின் ஒரு பகுதியாக திருப்பருத்திக் குன்றம் என்ற பெயரோடு இன்றும் இருக்கும்பகுதி, சமணர் களின் வாழிடமாகப் பண்டு திகழ்ந்திருந்தது; இன்று ஜீன காஞ்சி என அழைக்கப்படும் அப்பகுதியில், இன்றும் சமண சமயத்தவர் வாழ்ந்து வருகின்றனர்.

சமணர்கள் தமிழ் மொழிக்கு ஆற்றிய பணி எண்ணிக் கூற இயலாப் பெருமை வாய்ந்ததாகும். சேக்கிழார் பெருமானைப் பெரிய புராணம் பாடத் தூண்டு மாறு பண்ணிய பெருமை, சமண முனிவராம் திருத்தக்கதேவர் இயற்றிய சீவக சிந்தாமணியாகும்.

அவிநயம், செயிற்றியம், காக்கை பாடினியம் யாப் பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, நேமிநாதம் நன்னூல், முதலாம் இலக்கண நூல்களையும், சூளாமணி, உதயணன் பெருங்கதை, கலிங்கத்துப் பரணி, யசோதர காவியம் முதலாம் இலக்கிய நூல்களையும், நாலடியார் போலும் அறவொழுக்க நூல்களையும் அளித்தவர்கள் சமணப் பெரியார்களே ஆவர்; தொல்காப்பியத்துக்கு முதல் உரை கண்ட இளம்பூரணர், சிலப்பதிகாரத்துக்கு உரை கண்ட அடியார்க்கு நல்லார், நன்னூலுக்கு உரை கண்ட மயிலை நாதர் போலும்உரையாசிரியர்களையும் சமணமே தமிழுக்கு அளித்துள்ளது.

இளஞ்சிறார்கள், கணக்கியல் துறையில் சிறந்து விளங்கத் துணைபுரியும் நெல்லிலக்க வாய்பாடு, சிறுகுழி வாய்பாடு, கீழ்வாய் இலக்கம், பெருக்கல் வாய்பாடு முதலாம் சிறு நூல்களை வழங்கிய பெருமையும் சமணரையே சாரும்.

# 5. பௌத்த சமயம்

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் வடநாடு ஆண்ட, மௌரியப் பேரரசனான அசோகனுடைய பாறைக் கல்வெட்டுக்கள், தமிழ்நாட்டில், மக்களுக்கும், கால்நடைகளுக்கும் தனித்தனியே மருத்துவமனைகளை அமைத்து நோய்ப் போக்கும் பணிகளையும், பௌத்த மதப் பெரியார்களைத் தூதுவர்களாக அனுப்பி, பௌத்த மதம் பரப்பும் பணிகளையும் அசோகன் மேற்கொண்டான் எனக் கூறுகின்றன.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்து, இந்தியாவின் பல்வேறு பாகங்களையும் சுற்றிப் பார்த்து விட்டுத் திரும்பிய சீன வழிப்போக்கனாகிய யுவான்சுவாங் என்பவன், தன்னுடைய பயணக் குறிப்பில், காஞ்சிபுரத்தில் அசோகன் நாட்டிய தூண் இருந்ததையும், மதுரைக்கு அருகில், அசோகன் தம்பியாகிய மகேந்திரன் கட்டிய பௌத்த விகாரை இருந்ததையும் குறிப்பிட்டுள்ளார்.

பௌத்த பிக்குகளின் பரம்பரையைக் கூறும் பர்மா நாட்டு வரலாற்று நூல் ஒன்று, காஞ்சிபுரத்தில் அசோகன் கட்டிய விகாரையில் தர்மபாலர் என்ற பௌத்த பிக்கு வாழ்ந்து வந்தார் எனக் கூறுகிறது. மேற்கூறிய இச்சான்றுகளால், கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே, பௌத்த சமயம் தமிழகத்துள் நுழைந்துவிட்டது என்பது தெளிவாயிற்று.

எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றாகிய நற்றிணை 72வது செய்யுளை இயற்றிய இளம்போதியார் என்ற புலவர் ஒரு பௌத்தராவர் என்பது அவர் பெயராலேயே தெரிகிறது: மணிமேகலை பௌத்த காவியத்தை இயற்றியவரும், அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை நூல்களுள் இடம்பெறும் செய்யுள்களுள் பல செய்யுள்களை இயற்றியவரும் ஆகிய கூலவாணிகன் சீத்தலை சாத்தனார் ஒரு பௌத்தராவர்.

இலங்கைப் பாதபங்கய மலையைக் கண்டு வந்தவரும், காவிரிப்பூம்பட்டினத்துப் பௌத்தப் பள்ளியின் தலைவராக இருந்து, மாதவிக்கும் அவள் மகள் மணிமேகலைக்கும் தரும உபதேசம் செய்தவரும், மணிமேகலையைச் சிறை வீடு செய்தவரும், காவிரிப் பூம்பட்டினம் கடல் கொண்ட பின்னர், வஞ்சி மாநகரம் சென்று சிலகாலம் இருந்து பின்னர் காஞ்சி மாநகரம் அடைந்து, ஆங்கு வந்த மணிமேகலைக்கு அறம் உரைத்தவருமாகிய அறவண அடிகள் ஒரு பௌத்தராவர். மேலும், மணிமேகலைக் காப்பியத் தலைவியாகிய மணிமேகலை சிறந்த பௌத்த பிக்குணி ஆவள்; ஆகவே, கடைச் சங்க காலத்தில், பௌத்தம், தமிழகத்தில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்ந்து என்பது தெளிவாகிறது.

கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் தமிழகம் புகுந்த பௌத்த பிக்குகள், தமிழகத்தில் ஆங்காங்கே பௌத்த விகாரைகளையும், பள்ளிகளையும் நிறுவிக் கொண்டு, பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பித்து மக்களிடையே பிரிவுணர்ச்சியை வளர்க்காது, அவர்கள் மீது அன்பையும், அருளையும் சொரிந்து, இலவசக் கல்வியும் மருத்துவமும் அளித்தல், குருடர், செவிடர், மூடவர் போன்றார்க்கு உண்டி, உடை, உறையுள் அளித்தல் போலும் அறப்பணிகள் ஆற்றி வந்தமையால், அவர்கள் மக்கள் உள்ளத்தில் அழியா

இடம்பெற்று விட்டனர்: அதனால்தான், கடைச்சங்க காலம் வரையும் பௌத்த மதம் செல்வாக்கு இழக்காமல் சிறந்து விளங்கிற்று.

கடைச்சங்க காலத்திற்குப் பிறகு, தமிழக அரசுகளை அழித்துவிட்டு ஆட்சி புரிந்த களப்பிரர் காலத்திலும், பௌத்த சமயம், தமிழகத்தில் சிறந்தே விளங்கிற்று; கி. பி. நாலாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த அச்சுத விக்கந்தன் என்னும் களப்பிரன் காலத்தில் வாழ்ந்திருந்த புத்த தத்ததேரர் என்னும் பௌத்தப் பேராசிரியர், காவிரிப் பூம்பட்டின சிறப்பையும், ஆங்கு நிறுவப் பெற்ற பௌத்தப் பள்ளியின் பெருமையையும், தம்முடைய அபிதம்மாவதாரம் என்ற நூலில் விளங்கக் கூறியுள்ளார். மேலும், சோழநாட்டு பூதமங்கலத்தில் உள்ள பௌத்த விகாரையில் இருந்தபோது விநயவிநிச்சயம் என்ற நூலை இயற்றியதாகவும் கூறியுள்ளார்.

இவ்வாறு கி. மு. மூன்றாம் நூற்றாண்டு தொடங்கி, கி. பி. நாலாம் நூற்றாண்டு வரை, ஏறத்தாழ எழுநூறு ஆண்டுகள், தமிழகத்தில் சிறக்க வாழ்ந்த பௌத்த சமயம், பின்னர் மெல்ல மெல்ல மறையத் தொடங்கிவிட்டது. வடநாட்டிலிருந்து தமிழ்நாட்டிற்குத் தன்னோடு புகுந்த, சமண, வைதீக சமயங்களின் எதிர்ப்பு ஒருபுறமும், ஈனயானம், மகாயானம் என்பன போலும் அறுவகை உட் பிரிவுகளுக்கு உள்ளாகிவிட்டது ஒருபுறமும் ஆக, இவ்வகை யால் அது அழியத் தலைப்பட்டது.

மேலும், அறிவுப் பணி, அறப்பணிகளை ஆற்றி வந்த பௌத்தத் தேரர்கள், அந்நெறி மறந்து போக போக்கியங் களில் ஆழ்ந்து விட்டமையால், மக்களின் வெறுப்புக்கு உள்ளாயினர்: அதே நிலையில், வேள்வியில் உயிர்க்கொலை புரிதல், பிறப்பால் உயர்தாழ்வு கற்பித்தல் போலும் கொள்கைகளால், மக்களின் மதிக்கற்பாட்டினை இழந்திருந்த

வைதீக சமயம், அம்முறையைக் கைவிட்டு அருள் அறக் கொள்கைகளை மேற்கொண்டது. அது, உணவு மறுத்தல், உடலை வருத்தல் போலும் முறைகளைக் கைவிட்டு, இறைவனை, இன்பப் பாக்கள்பாடி வழிபடல் போலும் எளிய முறைகளை மேற்கொண்டது; இசையும், நாடகமும் இடம் பெற ஆண்டவனுக்கு விழாவெடுக்கும் இனிய முறையையும் கண்டது; இவ்வகைகளால், வைதீக சமயத்திற்கு மக்களிடையே மதிப்பு உயர்ந்தது.

மேலும், பௌத்த சமயத்தை எதிர்த்த வைதீக சமயம், புத்தரைக் காட்டிலும், அவருக்கு மெய்யுணர்வு ஊட்டிய, போதிமரமான அரசமரத்தை வழிபாட்டிற்கு உரியதாகவும் ஏற்றுக்கொண்டது. இவ்வகைகளால், சைவ, வைணவ சமயங்களாகிய வைதீக சமயங்களுக்கு மக்களிடையே பற்றும் பாசமும் மிக மிக, பௌத்த சமயம் மெல்ல மெல்ல மறையத் தலைப்பட்டது. கி.பி. எட்டாம் நூற்றாண்டில், அகளங்கர் என்னும் சமணர், காஞ்சியில் பௌத்தர்களை வாதில்வென்று சிங்களத்திற்குத் துரத்திவிட்டதாக வரலாறு கூறுகிறது.

களப்பிரர்களை வென்று, தமிழ் நாட்டில் தம் அரசை நிறுவிக் கொண்ட பல்லவர் காலத்தவராகிய திருஞான சம்பந்தர், சாத்தமங்கையிலும், மாணிக்கவாசகர் தில்லையிலும் பௌத்தர்களை வாதிட்டுவென்று அழித்தனர். பௌத்தர்களை வென்று பௌத்த சமயத்தை அழிப்பதில். சைவ சமயத்தவர் ஆர்வம் காட்டியது போலவே வைணவர்களும் ஆர்வம் காட்டியுள்ளனர். திருமங்கை ஆழ்வார் என்ற வைணவப் பெரியார், நாகையில் உள்ள பௌத்த ஆலயத்தில் இருந்த பொன்னால் ஆன புத்தர் சிலையைக் கவர்ந்து வந்து, அதை அழித்துப் பெற்ற பொன் கொண்டு திருவரங்கத் திருக்கோயிலுக்குத் திருப்பணி புரிந்தார்.

கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்தவனாகிய முதற்குலோத்துங்கன், நாகப்பட்டினத்தில் இருந்த சூடாமணி வர்மதேவரின் பௌத்த விகாரத்திற்குக் கடாரத்தரசன் தன் தூதுவர் மூலம் வேண்டிக் கொண்டதற்கு இணங்க, முன்னோர்கள் செய்திருக்கும் நிலதானங்களோடு தானும் பல நன்கொடைகளை வழங்கினான் என வரலாறு கூறுகிறது. என்றாலும், வைதீக சமயங்களின் முன் நிற்க மாட்டாது, சமண சமயம் அழிவதற்கு முன்பாகவே பௌத்த சமயம் அழிந்து விட்டது. பௌத்தம் அழிந்து விட்டாலும், மணிமேகலை, குண்டலகேசி போலும் இலக்கிய நூல்களும், வீர சோழியம் போலும் இலக்கண நூலும், தமிழகத்து மக்கள் உள்ளத்தில், பௌத்த சமயத்திற்கு அழியா இடம் பெற்றுத் தந்துள்ளன.

# 6. ஓவியக் கலை

தமிழ் நாட்டு ஓவியக் கலை, கடைச் சங்க காலத்திலேயே முழுமை பெற்றுத் திகழ்ந்தது. அரசர் தம் அரண்மனைகள், செல்வர் தம் மாளிகைகள் ஆகிய கட்டடங்களின் சுவர்களிலும், துணிச்சீலையிலும் வெறும் கோடுகளினாலும், கறுப்பும் சிவப்பும் மஞ்சளும் நீலமுமாகிய வண்ணங்களினாலும், மரம் செடி கொடிகள், மான் முதலாம் விலங்குகள், மலை முதலாம் இயற்கைக் காட்சிகளைக் கண்கவர் வனப்பில் வரையும் ஆற்றலை, மக்கள் அன்றே பெற்றிருந்தனர்.

புகார் நகரத்து மாடமாளிகைகளின் வெள்ளைச் சுண்ணாம்பு பூசிய சுவர்களில், தேவர், மக்கள், மாக்கள், மரம், செடி, கொடிகளின் வடிவங்களை வண்ணங்களால் வனப்புறத் தீட்டிய ஓவியங்களைத் தெருவில் போவோரும் வருவோரும் கண்டு, தம்மை மறந்து மகிழ்ந்து நிற்பதை, மணிமேகலை ஆசிரியர் அழகாக எடுத்துக் காட்டியுள்ளார்.

"சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்
மையறு படிவத்து வானவர் முதலா
எவ்வகை உயிர்களும் உவமம் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய
கண்கவர் ஓவியம் கண்டு நிற்குநரும்"

—மணிமேகலை : 3 : 127-131.

புகார் நகரத்துப் பூங்காக்களுள் ஒன்றான, உவவனத்தின் வனப்பினைக் கூறும் புலவர், பல்வகை மரங்களாலும், மலர்க்கொடிகளாலும் நிறைந்த, அந்த உவவனம், ஓவியப் புலவன் ஒருவன், தன் கை வண்ணம் எல்லாம் காட்டித் தீட்டிய ஓவியங்களால் நிறைந்த திரைச்சீலை போல் காட்சி அளிக்கும் என அழகுறக் கூறியுள்ளார்.

''வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம் போர்த்ததுவே
ஒப்பத் தோன்றிய உவவனம்''

மணிமேகலை : 3 ; 167-169

வண்ணம் கலவாமல். வெறும் நேர்க்கோடும், வளை கோடும் கொண்டு வனப்பு மிக்க ஓவியங்களைத் தீட்டவும் பழந்தமிழர் வல்லராய் இருந்தனர்.

பாண்டியன் தலையாலங் கானத்து. நெடுஞ்செழியன் போர் மேற் கொண்டு சென்று போர்க் களத்தில் பாசறைக் கண் இருக்க, அவன் அரசமாதேவி, கோப்பெருந்தேவியார், அவனைப் பிரித்த வருத்தம் மேலிட, அரண்மனையில் மெல்லணையில் வீழ்ந்து கிடக்கும் நிலையைக் காட்ட வந்த புலவர், ''புனையா ஓவியம், கடுப்ப'' (நெடுநல்வாடை ;147) இருந்தாள் என்று கூறியதும், அத்தொடர்க்கு உரை செய்த ஆசிரியர், ''புனையா ஓவியமாவது வண்ணங்களைக் கொண்டு எழுதாத வடிவம்'' எனப் பொருள் எழுதியிருப்பதும் காண்க.

ஓவியங்களைச் சுவரிலும் திரையிலும் வரைவதோடு அமையாது, அதற்கு என்றே, தனி மாடங்களை அமைத்து, அதனுள் பல்வேறு ஓவியங்களைத் திரட்டிக் காட்சிப் பொருள்களாக வைக்கவும் பழந்தமிழர் அறிந்திருந்தனர். அத்தகைய மாடங்கள் சித்திரக்கூடம் என அழைக்கப்பட்டன.

இரதி காமன் உறவு, கல் உருப்பெற்ற அகலிகை ஆகியோர் வரலாறு விளக்கும் ஓவியங்கள் நிறைந்த ஒரு சித்திரக் கூடத்தைப் பரிபாடல் நமக்கு அறிமுகம் செய்து வைக்கிறது.

> "இரதி காமன் இவள் இவன் எனாஅ,
> விரகியர் வினவ வினா இறுப்போரும்,
> இந்திரன் பூசை, இவள் அகலிகை, இவன்
> சென்ற கவுதமன், சினனுறக் கல்லுரு
> ஒன்றிய படி இது என்று உரை செய்வோரும்
> இன்ன பலபல எழுத்து நிலை மண்டபம்"
>
> பரிபாடல் ; 19 : 48—53

இத்தகைய சித்திரக் கூடங்களில், அக்கால அரசர்கள் தங்கி, அங்குள்ள ஓவியங்களைக் கண்டு இன்பம் நுகர்ந்து வந்துள்ளனர். அவ்வாறு அங்குத் தங்கி, இன்பம் நுகர்ந்திருந்தபோது, நன் மாறன் என்ற ஒரு பாண்டிய மன்னன், அங்கேயே உயிர் துறந்தமையால், அவன், சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறன் என்றே அழைக்கப்படுவதும் காண்க.

ஓவியம் தீட்டுவதில் வல்லவர்கள். தமிழ்நாட்டுப் பேரூர்களிலெல்லாம் வாழ்ந்து வந்தனர். தாம் வரைந்த ஓவியங்களைப் பார்ப்பவர் கண்கள் எல்லாம் அவ்வோவியங்களிலேயே நிலைத்து நின்று விடத்தக்க வகையில் வரையும் வல்லமை பெற்ற அவர்களுக்குக் "கண்ணுள் வினைஞர்" எனப் பெயர் சூட்டி மகிழ்கிறது பழந்தமிழ் இலக்கியம். தம் கண்ணாலும், கருத்தாலும் காணும் எவ்வகைக் காட்சியையும் உள்ளது உள்ளவாறே வரைந்து காட்டும் அக்கண்ணுள் வினைஞர், மதுரை மாநகரில் வாழ்ந்திருந்ததை மதுரைக் காஞ்சி அடிகளால் உணர்கிறோம்.

"எவ்வகைச் செய்தியும் உவமம் காட்டி
நுண்ணிதின் உணர்ந்த நுழைந்த நோக்கின்
கண்ணுள் வினைஞர்"

—மதுரைக் காஞ்சி : 516—519

தம் வாழ்க்கையில், ஒரு காலத்தே நிகழ்ந்த நிகழ்ச்சிகளைத் தம் வாழ் நாளெல்லாம் மறவாமல் நினைவில் வைத்துக் கொள்ள விரும்பிய தமிழர்கள், அந்நிகழ்ச்சிகளைத் தாம் காணும் இடத்தில் அழகிய ஓவியமாகத் தீட்டி வைக்கவும் தெரிந்திருந்தனர்.

சீவகனுடைய தாய் விசையை, தான் ஏறித் தப்பிச் செல்ல உதவிய மயிற் பொறியையும், இடு காட்டில், தான் மகவு ஈன உதவிய பெண் தெய்வத்தையும், தன் அரண்மனைச் சுவரில் ஓவியமாகத் தீட்டி வைத்தாள் என்றும், பல்லக்கு ஊர்ந்து சென்று கொண்டிருந்த குணமாலையைத் தாக்கிய மதயானை மீது பாய்ந்து அடக்கி அக்குணமாலையைக் காத்த தன் செயலையும், மதங்கொண்ட அக்களிற்றின் முன் நின்ற குணமாலையின் நடுங்கிய தோற்றத்தையும் சீவகன், திரைச் சீலையில் தீட்டி மகிழ்ந்தான் என்றும், சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்க தேவர் குறிப்பிடுவது காண்க.

"தனியே துயர் உழந்து, தாழ்ந்து வீழ்ந்த சுடுகாட்டுள்
இனியாள் இடர் நீக்கி ஏமம் சேர்த்திஉயக்கொண்ட
கனியார் மொழியாட்கும், மயிற்கும் காமர் பதி நல்கி
முனியாதுதான் காண மொய் கொள் மாடத்து
எழுதுவித்தாள்"

"கூட்டினான் மணிபல தெளித்துக் கொண்டவன்
தீட்டினான் கிழிமிசைத் திலக வாள் நுதல்
வேட்டமால் களிற்றிடை வெருவி நின்றதோர்
நாட்டமும் நடுக்கமும் நங்கை வண்ணமே"

சீவகசிந்தாமணி 2603; 1003

ஓவியத் தொழிலுக்கு அக்கால மக்கள் இட்டு வழங்கிய பெயர் வட்டிகைச் செய்தி என்பதாம். "வட்டிகைச் செய்தியின் வரைந்த பாவை!" (மணி மேகலை : 4 ; 57) என்ற தொடரைக் காண்க வட்டிகையாவது. வண்ணம் குழைத்துத் தீட்டும் துகிலிகை. செவ் வண்ணம் குழைத்த துகிலிகை பாதிரிப் பூப்போல இருக்கும் என்பார் புலவர்.

"ஓவ மாக்கள் ஒள்ளரக்கு ஊட்டிய
துகிலிகை அன்ன துய்த்தலைப் பாதிரி"

நற்றிணை : 118

புனையா ஓவியமும், வண்ண ஓவியமும் வரையும் வழி முறைகளை விளங்கக் கூறும் ஓவியம் நூலும் அக்காலத்தில் இருந்தது. அக் கலையில், அக்கால மகளிரும் சிறந்து விளங்கினர்; மணிமேகலை அக்கலையை முற்றக் கற்றவள் என்கிறார் சாத்தனார்.

"ஓவியச் செந்நூல் உரைநூற் கிடக்கையும்
கற்றுத்துறை போகிய பொற்றொடி நங்கை."

—மணிமேகலை 2 : 31-32.

இவ்வாறு சங்க காலத்தே மிகச்சிறந்து விளங்கிய ஓவியக் கலை, பல்லவர், சோழர் காலத்திலும் சிறந்து விளங்கிற்று. பல்லவர்களில் சிறந்தோனாகிய மகேந்திரவர்மனுக்கு உரிய சிறப்புப் பெயர்களுள் "சித்திரகாரப்புலி" என்பதும் ஒரு பெயராம். ஓவியம் வரைவதில் வல்லவனான அவன், ஓவிய நூலுக்கு உரை வளம் காண்பதிலும் வல்லவன் எனக் கல் வெட்டுக்கள் கூறுகின்றன.

புதுக்கோட்டைக்கு அண்மையில் உள்ள சித்தன்ன வாசலில் உள்ள குகைக் கோயிலுள் மகேந்திரவர்மன் தீட்டி வைத்திருக்கும் வண்ண ஓவியங்கள் உலகப் புகழ் பெற்றன

வாகும். பழமையும், பராமரிப்பு இன்மையும், அவ்வோவியத் பெரும்பகுதியை அழித்து விட்டன எனினும், மகேந்திர வர்மன், அவன் அரச மாதேவி, இரு நடன மகளிர் ஆகியோர் திருவுருவங்களையும், ஒரு தாமரைத் தடாகத்தை யும் சித்தரிக்கும் ஓவியங்கள் இன்னமும் கண்கொள்ளாக் காட்சிகளாய் விளங்குகின்றன.

சித்தன்ன வாசல் ஓவியத்துக்குச் சற்று பிற்பட்ட காலத்தில் கட்டப்பட்ட காஞ்சி கைலாசநாதர் கோயில் ஓவியங்களும் வரலாற்றுப் புகழ் உடையவாகும். அவை இப்போது உருத்தெரியாமல் அறவே உருக்குலைந்து போயுள்ளன.

பிற்காலச் சோழர்களுள் சிறந்தோனாகிய இராசராசன் தான் கட்டிய தஞ்சைப் பெரிய கோயில் சுவர்களில், சுந்தரர் வாழ்க்கை வரலாற்றை வண்ண ஓவியங்களாகவே தீட்டி வைத்துள்ளான். அவ்வோவியங்கள் மீது, வெள்ளைச் சுண்ணாம்பு பூசி, பிற்காலத்தில் தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்கள், வேறு ஓவியங்களைத் தீட்டிச் சோழர் கால ஓவியங்களை மறைத்து விட்டார்கள். மறைந்து போன அச்சோழர் கால ஓவியங்கள்ள நாம் காணச் செய்தவர், அண்ணாமலைப் பல்கலைக் கழக வரலாற்றுப் பேராசிரிய ராக விளங்கிய உயர்திரு. எஸ். கே. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள் ஆவார்கள்.

மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்களும் ஓவியக்கலை ஆர்வமிக்கவர்களாகவே காணப்படுகின்றனர். அவர்கள் கட்டிய மதுரை மீனாட்சி அம்மைக் கோயில் சுவர்களில் அவர்கள் தீட்டி வைத்திருக்கும் வண்ண ஓவியங்களே அதற்குச் சான்று ஆகும்.

# 7. இசைக் கலை

இயல் இசை நாடகம் என, இசைத் தமிழ்க்கு நடுவிடம் கொடுத்துச் சிறப்பிப்பது தமிழ்நாடு. "ஏழிசையாய் இசைப் பயனாய்" என இறைவனை இசை வடிவினனாகவே கொண்டு வழிபட்டவர் தமிழர்.

நண்பனின் தோள் மெலியுமளவு உடல்நலம் கெட்டதற்காம் காரணத்தை அறியத் துடிக்கும் ஒருவன், "நண்ப! மலை போன்ற உன் தோள் மெலிந்தது ஏனோ? மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் ஆராயப்படும் தமிழின் அகப்புறத்துறை ஆராய்ச்சியில் ஆழ்ந்து போனதாலா, அல்லது, ஏழிசை நுணுக்கங்களின் பயிற்சியிலும், ஆராய்ச்சியிலும் அடிமைப் பட்டோ" எனக் கேட்டதாக, மணிவாசகர் பாடும் கோவையார், ஏழிசைச் சிறப்பை எடுத்துரைப்பது காண்க.

"சிறைவான் புனல்தில்லைச் சிற்றம்பலத்தும், என்
சிந்தையுள்ளும்
உறைவான், உயர்மதில் கூடலின் ஆய்ந்த ஒண்தீந்
தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ! அன்றி, ஏழிசைச்
சூழல் புக்கோ!
இறைவா! தடவரைத் தோட்டு என்கொலாம்
புகுந்து எய்தியதே."

—திருக்கோவையார் : 20.

உயிர் எழுத்துக்களும், மெய் எழுத்துக்களும், தமக்குரிய ஒலி அளவில் மிகுந்து ஒலிப்பது, ஏழிசையோடு இணைந்த யாழ் நூல்களிலும் நிகழும் எனத், தொல்காப்பியர் கூற்றிலிருந்து தமிழிசையின் பழமையும் பெருமையும் புலப் படும்.

"அளபு இறந்து உயிர்த்தலும், ஒற்றிசை நீடலும்
உள என மொழிப, இசை யொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்."

—தொல்காப்பியம் : எழுத்து : 33

முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் பாலை என்ற ஐந்நிலங்களுக்கும் தனித்தனியான பண் வகைகளையும், பறை வகைகளையும் மேற்கொண்டவர் பழந்தமிழர்.

விடியற்காலைக்கு உரிய பண் இது; மாலைக்கு உரிய பண் இது எனக், கால வேறுபாட்டிற்கு ஏற்ப பண் வேறுபாடு களை உணர்ந்து மேற்கொண்டவர் தமிழர்.

இசைக்கு உருகாத உயிர்களே இல்லை; கொல்களிறும், நச்சரவும் இசை கேட்டு தம் கொடுந்தொழில் கைவிட்டு அடங்கி நிற்கும். இன்னிசை கேட்டு தன்னை மறந்து இன்புற் றிருக்கும் நிலையில் அவ்விசைக்கு மாறான இன்னா ஒலி கேட்ட அக்கணமே அது கேட்கப் பொறாது உயிர்விடும் நுணுகிய உள்ளுணர்வு வாய்ந்த உயிரினம் ஒன்றும் தமிழகத் தில் பண்டு இருந்தது. அசுணமா என்று அழைக்கப் பெறும் அவ்விலங்கின் இவ்வியல்புணர்ந்த மக்கள் அதைக் கைப்பற்ற முனையும்போது, அது வாழும் இடம் தேடிச் சென்று யாழ், குழல் போலும் இன்னிசைக் கருவிகளை இயக்கி இன்னிசை எழுப்ப அது கேட்டு அது தன்னை மறந்து இன்புற்றிருக்கும் நிலையில் திடுமென பறை கொட்டிக் கடும் ஒலி எழுப்ப அது கேட்கப் பொறாது மயங்கி விழ அதனைக் கவர்ந்து வரும்

செயலை நற்றிணைப் பாடல் ஒன்று நமக்கு நினை வூட்டுகிறது.

"அசுணம் கொல்பவர் கைபோல் நன்றும்
இன்பமும் துன்பமும் உடைத்து."

—நற்றிணை : 304

கொலைத் தொழில் வல்ல களிறுகளை அடக்கிப் பணி கொள்ளும் இசை வல்லமையினைப் பழந்தமிழ்ப் பெண்டிர் பண்டே பெற்றிருந்தனர். பெரும் பசியோடு தினைப்புனம் புகுந்த ஒரு களிறு, அப்புனத்தைக் காவல் புரிந்து கொண் டிருந்த குறக் குலப் பெண், குறிஞ்சி என்ற பண்ணைப் பாடத் தொடங்கியதும் அவ்விசைக்கு மயங்கி, தன் பசியை யும் மறந்து, மெய்ம்மறந்து நின்ற காட்சியை அகநானூற்றுப் பாடல் ஒன்று படம் பிடித்துக் காட்டுகிறது.

"ஒலியல் வார்மயிர் உளரினள் கொடிச்சி
பெருவரை மருங்கில் குறிஞ்சி பாடக்
குரலும் கொள்ளாது, நிலையினும் பெயராது
படாஅப் பைங்கண் பாடுபெற்று ஓய்யென
மறம்புகல் மழகளிறு உறங்கும்."

—அகநானூறு ; 102

கொலைத் தொழிலே தம் குலத் தொழிலாகக் கொண்டு வாழும் கொடியவர்களின் கொடுங் குணத்தை மாற்றவல்ல படைக்கலமாகப் பண்டைத் தமிழர் இசையினையே மேற் கொண்டனர். வழிப் போக்கர்களைக் கொன்று, அவர் உடைமைகளைக் கொள்ளையடித்து வாழும் கொடியவர் களாகிய ஆறலைக் கள்வர்களை, இடைவழியில் கண்டதுமே, வழிப் போக்கர்களில் இசை அறிந்தவர்கள், உடனே தம் கையில் படைக்கலம் ஏந்துவதற்குப் பதிலாக யாழை எடுத்து, அதில், அந்நிலத்துக்கு உரிய பாலைப் பண்ணை இசைக்கத்

தொடங்கி விடுவராயின் அவ்விசை இன்பத்தால் தம்மையே மறந்து போகும் அக்கள்வர், தம் கையில் தாங்கியிருந்த வாளும் வில்லும் போலும் கொடிய படைக் கலங்களையும் கைசோர விட்டு நிற்கும் காட்சியைப் பொருநராற்றுப் படை ஆசிரியர் காட்டியுள்ளார்,

"ஆறலை கள்வர் படைவிட அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவில் பாலை."
—பொருநராற்றுப்படை : 21—22

வாய்ப்பாட்டிற்குமேலும் இனிமை ஊட்ட, தோல் கருவி, துளைக் கருவி, நரம்புக் கருவி, கஞ்சகக் கருவிகளால் ஆன பின்னணி இசைகளை உடன் இசைக்கும் முறையினையும் தமிழகம் பண்டே அறிந்திருந்தது. "வண்ணப் பாடல் ஒன்று நான் பாடுகின்றேன். நீங்கள் எல்லாம் முழவு, யாழ், தூம்பு, எல்லரி, ஆகுளி, பதலை ஆகிய இசைக் கருவிகளை உடன் இயக்குங்கள்" எனப் பாணன் ஒருவன் கூறியதாக வரும் புறநானூற்றுச் செய்யுளை நோக்குங்கள்.

"பாடுவல் விறலி! ஓர் வண்ணம்; நீரும்
மண்முழா அமைமின்; பண்யாழ் நிறுமின்;
கண்விடு தூம்பின் களிற்றுயிர் தொடுமின்;
எல்லரி தொடுமின்; ஆகுளி தொடுமின்;
பதலை ஒரு கண் பையென இயக்குமின்."
—புறநானூறு : 152

குழல் ஓசையும், யாழ் ஓசையும், முழவு ஓசையும், தனித் தனி ஒலிக்கக் கேட்கினும் இனிமை தரும் என்றாலும் அவ் விசைக் கருவிகள் பலவும் இணைந்து ஒலித்து எழுப்பும் இசை, பேரின்பம் பயப்பதாகும் என்பதையும் தமிழர் பண்டே அறிந்திருந்தனர். முற்றி உலர்ந்து ஆடும் மூங்கிலில் வண்டு துளைத்து ஆன துளை வழியே, விரைந்து அடிக்கும்

கோடைக் காற்று நுழையும் வழி எழுப்பும் ஓசை, குழல் இசையாகவும்; காட்டாற்றில் தெளிந்து ஓடும் அருவி எழுப்பும்ஓசை, முழவோசையாகவும்; மான்கூட்டம் எழுப்பும் ஒலி, பெருவங்கிய இசையாகவும்; வண்டுகளின் ரீங்காரம் யாழ் ஓசையாகவும்; இவ்வகையால் பல்வேறு இசைகளும் கலந்து ஒலிக்கும் இசை இன்பத்தை, மந்தியும் மெய் மறந்து கேட்டு இன்புறும் இனிய காட்சியைக் கபிலர் காட்டி மகிழ்வது காண்க.

"ஆடமைக்குயின்ற அவிர்துளை மருங்கில்
கோடை அவ்வளி குழல் இசையாகப்,
பாடின் அருவிப் பனிநீர் இன்னிசைத்
தோடமை முழவின் துதைகுரலாகக்
கணக்கலை இகுக்கும் கடுங்குரல் தூம்பொடு
மலைப் பூஞ்சாரல் வண்டு யாழாக.
இன்பல் இமிழிசை கேட்டுக் கலி சிறந்து
மந்தி நல்லளவ மருள்வன நோக்க,'

—அகநானூறு ;02

ஆகுளி. உடுக்கை, குடமுழா, தடாரி, தண்ணுமை, துடி. தூம்பு, பதலை, பறை, பேரிகை, மத்தளம், முரசு, முழவு முதலாம் தோற் கருவிகளையும், குழல்,கொம்பு, கோடு முதவாம் துளைக் கருவிகளையும், சீறியாழ், பேரியாழ், மகரயாழ் முதலாம் நரம்புக் கருவிகளையும் கஞ்சதாளம், எல்லரி முதலாம் கஞ்சகக் கருவிகளையும் இசைக்கும் இசை வளத்தைத், தமிழர் பண்டே கற்றுத் தெளிந்திருந்தனர்.

பழந்தமிழர் காலத்தில், இசை பாடுவதை மட்டுமே தொழிலாகக் கொண்ட ஒரு தனி இனம் தமிழரிடையே இருந்து வந்தது. பாணர் என்ற பெயரால் அழைக்கப்பட்ட அம்மக்கள், வள்ளல்களையும், வேந்தர்களையும் கண்டு

அவர்கள் தம் வெற்றிப் புகழ்களை விளங்கக் கூறும் பாக்களைப் பண்ணில் இயைத்துப் பாடிப் பரிசில் பெற்று வாழ்ந்து வந்தனர். அப்பாணர்கள் யாழ்வாசிப்பதில் வல்லவர்கள். யாழும், அது கொண்டிருக்கும் நரம்புகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப' சிறிய யாழ் என்றும், பெரிய யாழ் என்றும் அழைக்கப் பெற்றன. சிறிய யாழ் ஏழு நரம்பு களைக் கொண்டது. இது செங்கோட்டு யாழ் என்றும் அழைக்கப் பெறும், பெரிய யாழ் இருபத்தொகு நரம்பு களை உடையது. சிறிய யாழ் வாசிப்பவர் சிறு பாணர் என்றும், பெரிய யாழ் வாசிப்பவர் பெரும்பாணர் என்றும் அழைக்கப் பெற்றனர்.

திருஞான சம்பந்தருடன் பண்பாடிய திருநீலகண்ட யாழ்ப்பாணரும், திருமால் அடியவரான திருப்பாணாழ் வாரும், திருவிளையாடல் புராணத்தால் அறியலாகும் பாணபத்திரரும் அவ்விசைப் பாணர் குடியில் வந்த பெரியார் களாவர்.

நில வேறுபாட்டிற்கு ஏற்ப வேறுபடும் இசைகளையும், கால வேறுபாட்டிற்கு ஏற்ப வேறுபடும் இசைகளையும் உணர்ந்திருந்த தமிழர், அவ்விசை வேறுபாட்டினைப், பண் என்ற சொல்லால் குறித்தனர். அது, இக்காலம் இராகம் என அழைக்கப்படுகிறது, பண் என்ற சொல் திருவள்ளுவர் காலத்திலேயே பெரு லழக்கில் இருந்த பழமை வாய்ந்தது. "பண் என்னாம் பாடற்கு இயையு இன்றேல்" என்ற குறளைக் காண்க,

பண் அறிந்த தமிழர், அப்பண்ணோடு இயைந்து பாடு தற்குத் துணை நிற்கும் பல இசை நூல்களையும் அவ் விசைத் திறங்களை இனிதே விளக்கும் பல இசை இலக்கண நூல்களையும் பண்டே பெற்றிருந்தனர். இறையனார் அகப்பொருள் உரையாசிரியர் அறிமுகப்படுத்தும் பரிபாடல் முதுநாரை, முதுகுருகு, சிற்றிசை, பேரிசை முதலாம் நூல்

களும், சிலப்பதிகாரத்திற்கு உரை கண்ட அடியார்க்கு நல்லார் அறிமுகப்படுத்தும் பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம். பஞ்ச மரபு, இசை நுணுக்கம், இந்திர காளியம் முதலாம் நூல்களும், சிலப்பதிகார அரும்பத உரை யாசிரியர் அறிமுகப்படுத்தும் பதினாறுபடலம் என்ற நூலும், யாப்பருங்கல விருத்தி உரையாசிரியர் அறிமுகப்படுத்தும் வாய்பியம் என்ற நூலும், யாப்பருங்கலக் காரிகை ஆசிரியர் அறிமுகப் படுத்தும் இசைத் தமிழ்ச் செய்யுள் துறைக் கோவை என்ற நூலும், தமிழகத்தில் பண்டு வழக்காற்றில் இருந்த இசை நூல்களாம்.

சிலப்பதிகாரத்தில் வரும் கானல்வரி, வேட்டுவ வரி, ஊர் சூழ்வரி முதலாம் வரிப் பாடல்களும், ஆய்ச்சியர் குரவை குன்றக் குரவை முதலாம் குரவைப் பாடல்களும் இசைப்பாடல்களாகும்.

# 8. பாசணம்

நிலம் வளம் பெற நீர் இன்றியமையாதது என்பதை உணர்ந்து, எண்ணற்ற ஏரிகளை அமைத்து மழை நீரைத் தேக்கியும், ஆறுகளின் குறுக்கே அணைகளை அமைத்துப் பெருக்கெடுத்து ஓடும் வெள்ளநீரை, வெட்டிய வாய்க் கால்கள் வழி ஏரிகளுக்குக் கொண்டு சென்று தேக்கியும், ஏரிகளில் மதகுகள் அமைத்தும், கரைகள் உடைப்பெடுக் காவாறு காவல் அமைத்தும், காவலையும் கடந்து உடைப் பெடுத்தவழி உடைப்பு அடைத்தும், வெள்ளம் கொண்டு வந்து விடும் மண் மேடு அகற்றியும், செப்பம் செய்தும், நீர் வளம் காணும் பாசன முறைகளைத் தமிழகம் பண்டே கண்டிருந்தது என்பதைக் கல்வெட்டு அளிக்கும் செய்திகள் உறுதி செய்கின்றன.

மூன்றாம் குலோத்துங்கனுடைய இருபதாம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்றும், இருபத்து நான்காம் ஆண்டுக்கல்வெட்டு என்றும். அருங்குன்றக்கிழான் நாற்பத்தெண்ணாயிரம் பிள்ளையும், தமக்கை மங்கையர்க்கரசியாரும், பஞ்ச காலத்தில் காசுக்கு உழக்கரசி விற்கக்கே, பூண்டபொன்னும் தேடின அர்த்தமும், நெல்லும் அடைய இட்டு, அண்ணர் நாட்டு எல்லையில் (திரு வண்ணாமலைக்கு அண்மையில்) திருந்திகையாற்றை அடைத்து, ஏரிவெட்டித் தும்பு அமைத்து, நிலம் திருத்திப்பயிர் செய்த நிகழ்ச்சியைக் குறிப் பிடுகின்றன.

—கல்: தொகுதி 8 எண் 83 : 151

செய்யாறு வட்டம், மாமண்டூருக்கு அணித்தாக உள்ள நரசமங்கலக் குன்றில், ஏரிக்கரையில் உள்ள ஒரு கல்மீது, சகம் 1550ல், சென்னப்ப நாய்க்கர் மகன் வெங்கடப்பநாய்க்கர், தன் தந்தை பெயரால் சென்னசாகரம் என்ற ஏரியைக்கட்டி, அதற்குப் பாலியாற்றிலிருந்து கால்வாய் வெட்டிய செய்தி தெலுங்கு மொழியிலும், தமிழ் மொழியிலும் வெட்டப்பட்டுள்ளது.

—வ. ஆ. 243, 245, 246

இறந்தவர் நினைவாக, ஏரிகளில் மதகு அமைக்கும் முறை ஒன்றும் இருந்து வந்துள்ளது. போளூர்வட்டம், தச்சாம்பாடியிற் காணப்படும் கல்வெட்டொன்று, "பல் குன்றக் கோட்டத்துப் பாடாநாட்டு ஏரியில், பாடா நாட்டுத் தலைவன் ஐயாற்றடிகள் மகள், சேரிப்பெருமானார் மனைவியும், பூதனார் நம்பி எழுவனாருடைய மகளுமான மஞ்சக்கணாள் இறந்தமையின் அவள் நினைவாக திருமலைப் பாடி என்ற மதகு கட்டின செய்தி பொறிக்கப்பட்டுள்ளது.

—கல். ஆண் : 158 / 1941-42

கட்டிய ஏரிகளுக்கு நீர் கொணர்வான் வேண்டி அணித்தாக ஓடும் ஆறுகளிலிருந்து கால்வாய்கள் வெட்டுவது அவ்வாறு வெட்டப்பட்டு பண்டு தொட்டே ஓடிக் கொண்டிருக்கும் கால்வாய்களிலிருந்து, புதுக்கால்வாய் வெட்டிப் புதிய பாசனத்திற்கு வழி செய்வது, அவ்வாறு வெட்டப்படும் கால்வாய்களுக்காக நிலம் வாங்குவது ஆகிய நிகழ்ச்சிகளும் பண்டே நிகழ்ந்துள்ளன.

வேலூர் வட்டம் திம்ம சமுத்திரம் ஏரிக்கரையில் உள்ள கல்வெட்டொன்று "பிருதிவி கங்கரையனும், அவன் மனைவி இலாடப் பெருந்தேவியும், தம்முடைய மகளான ஐயக் குட்டியின் தானமாகப் பாலாற்றிலிருந்து விழுப்பேரரையன்

வாய்க்கால் என ஒரு வாய்க்காலை வெட்டி ஏரிக்கு நீர் வருவாய் செய்ததைக் கூறுகிறது.

—கல். ஆண் : 174 / 1938-40

வந்தவாசி வட்டம் சீய மங்கலத்தில் காணப்படும் முதல் இராசராசனுடைய பத்தொன்பதாம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று, "காடுவெட்டுவித்துக் கட்டை பறித்து மேடு கல்லிக், குழி தூர்த்துக் கரம்பறுத்து வரம்பு அட்டித் திருத்தின செறுவுக்கு நீர்பாயப், பேரேரியினின்று வரும் அம்பலத்தாடி வாய்க்காலில் பிரித்து ஒரு வாய்க்கால் வெட்டி, அதற்கு வெண்காட தேவ வாய்க்கால் எனப் பெயரிட்டதைக் கூறுகிறது.

—கல், தொகுதி=7 எண்: 440

வாலாஜா வட்டம் கனியனூரில் வெள்ளம்மை அகரத்து ஏரிக்குக் கால்வாய் ஒன்று வெட்ட நிலம் வாங்கிய செய்தியை ஒரு கல்வெட்டு உணர்த்துகிறது.

—கல். ஆண் : 5/ 1940-41

இவ்வாறு எடுக்கப்பட்ட ஏரிகள், பெருமழை காலங்களில் உடைப்பெடுத்து விடாதவாறு விழிப்பாக இருந்து காக்கவல்ல காவலர்களை நியமிப்பதும் உண்டு.

போளூர் வட்டம் அனந்தபுரம் ஏரி, அடிக்கடி உடைப்பெடுத்து வயல்களை அழிப்பது கண்டு, ஊரவர், விண்ணப்பிக்க, மண்டலேசுரரான தேவராய மகாராயர், வயிச்சியப்பன், பள்ளிப் பெருமாள் என்ற இருவரைக் காவலராக நியமித்ததை, ஒரு கல்வெட்டு உணர்த்தியது.

—கல்-ஆண் : 707/1942-43

ஏரிக்கரையும், கலிங்கமும், மதகும் பழுதுற்றுப் போகா வண்ணம், அவ்வப்போது மராமத்து செய்யப்பட வேண்டு

வது இன்றியமையாதது. அரசு, அதை ஓரோவழி மறந்த வழி, பொதுமக்கள் முறையீடு செய்வதும், அதுகேட்டு அரசு அதைச் செய்வதும், மராமத்துச் செலவிற்காக எனச் சில நிலங்களை விட்டு, அவற்றின் வருவாய் கொண்டும், ஏரிக்கீழ் உள்ள நிலங்களுக்கு விதிக்கப்படும் வரி கொண்டும், அம்மராமத்துப் பணி செய்யப்படுவதும் கல்வெட்டுக்களால் தெளிவாக்கப்படுகின்றன.

போளூர் வட்டத்தில், சேயாற்றின் கரைக்கண் உள்ள ஆத்தூரைச் சேர்ந்த ஊரவர் முறையிட, அந்நாளில் ஆட்சி நடத்திய வீரபொக்கண்ண உடையார், கி.பி. 1370ல் ஏரி பழுது பார்த்தற்கென தனி ஏற்பாடு செய்துள்ளார்.

—கல்-ஆண் : 147/1941-42

குடியாத்தம் வட்டம், ஒட்டத்தாங்கல் ஊரவர், முதல் பராந்தகன் காலத்தில், ஏரிப்பட்ட என்ற பெயரால், நிலம் விட்டு, அந்நிலங்களின் வருவாய் கொண்டு, ஏரிக்குக் கரையமைத்தல், தூர் எடுத்தல் ஆகியன செய்ய விதி வகுத்தனர்.

—கல்-ஆண் : 206/1927

திருத்தணி வட்டம், தரணிவராகபுரம் ஊரில் காணப்படும் கல்வெட்டு ஒன்று, நாராயணவரம் சீர்மையைச் சேர்ந்த சிறுத்தணி சீர்மையை ஆளும் பங்காரு நாயக்கர், சிறுத்தணி ஏரி பராமரிப்புக்காக அதன் கீழுள்ள நிலங்களுக்கு வரி விதித்த நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறது.

—கல்-ஆண் : 112/1942-43

ஏரியை மராமத்து செய்ய நிலவரி மட்டுமே அல்லாமல், ஏரிக்கரை மரங்கள், ஏரி மீன் ஆகியவற்றின் வருவாயும் பயன்படுத்தப்பட்டது.

கி. பி. 17ஆம் நூற்றாண்டில் விசயநகர வேந்தரான வேங்கடபதி மகாராயர் காலத்தில் போளூர் வட்டம், ஓதலவாடி ஏரிக்கரையில் உள்ள வேல மரங்கள், ஏரி மீன் ஆகியவற்றின் வருவாயைக் கொண்டு ஏரியைச் செம்மைப் படுத்திக்கொள்ளுமாறு. திம்ம நாயக்கரையன் காரிய கருத்தனார் பள்ளி முகுந்தரெட்டி உத்திரவு செய்துள்ள நிகழ்ச்சியை ஒரு கல்வெட்டு கூறுகிறது

—கல் ஆண் 142/1941-42

வீரப்பிரதாப சக்கரவர்த்தி. வீரபோசள, வீர ராமநாத தேவர் மகாப்பிரதானி, கொப்பைய தண்ணாயக்கர் என்பார், ஆரணி வட்டம் விண்ணமங்கலமான, விக்கிரம சோழச் சதுர்வேதி மங்கலத்து ஏரியில் மீன் விற்ற பொன்னை கொண்டு ஆண்டுதோறும் ஏரியை ஆழப்படுத்தல் வேண்டும் எனக் கல்வெட்டு நட்டுக்கொடுத்த நிகழ்ச்சி, ஒரு கல்வெட்டில் காணப்படுகிறது.

—கல்-தொகை-6 : எண் : 459

மராமத்துப் பணிகள், ஆண்டு தோறும் மேற்கொள்ளப் பட்டாலும், ஆற்று வெள்ளம் பாய்வதால் கால்வாய்களும், ஏரிகள் உடைப்பெடுத்துக் கொள்வதால் விளை நிலங் களும் மண்மேடிட்டுப் போகும்போதும், அரசும் தனியார் களும் மண் அகற்றிச் செப்பம் செய்து தருவதும் ஆகிய நிகழ்ச்சிகளும் பண்டுதொட்டே நடைபெற்று வந்துள்ளன.

ஒரு காலத்தில் பாலியாற்றில் வெள்ளம் பெருகி வந்த போது, வேப்பூர் பகுதிக்குச் செல்லும் வாய்க்கால் மணல் நிறைந்து தூர்ந்துபோகவே, விட்டப்பர் என்ற செல்வர் பெரும் பொருட்செலவில், மணல் அகற்றிச் செம்மைப்படுத்தி ஏரியையும் ஆழப்படுத்தினராக, அவருக்கு இறைவன் திருவருள் பெருக வேண்டி, விரிஞ்சீபுரம் வழித்துணை நாயனார் கோயில் பண்டாரத்தார் கூடி, மூன்று நுந்தா

விளக்கு எரிய ஏற்பாடு செய்த நிகழ்ச்சியை விரிஞ்சிபுரம் கல்வெட்டொன்று கூறுகிறது.

— கல்-ஆண் : 198/1939-40

இரண்டாம் குலோத்துங்கனின் மூன்றாம் ஆண்டுக் கல்வெட்டொன்று, வந்தவாசி வட்டத்தில் உள்ளதும், வெண்குன்றநாட்டுச் சோழ கேரளபுரம் எனக் கல்வெட்டுக்களில் காணப்படுவதும் ஆகிய சளுக்கையின் வீரசோழ ஏரி நீர் வீழ்ந்து மூன்று வேலி நிலம் மண்படிந்து மேடிட்டதாக, மணப்பாக்கிழான் றக்கண்டன் தேவனான குலோத்துங்க சோழ தேவன் கலியன் என்பான் மண்போக்கிச் செம்மை செய்ததைக் கூறுகிறது.

—கோ. சா. பாகம் : 1, எண் 119

சகம் 1306ல், திருவோத்தூர் பெரும் வெள்ளக்கேட்டுக் குள்ளாகிய நால் நிலங்கள் பாழ்படக் கண்டு, சாளுவ நரசிங்கய்ய தேவ மகாராயர் பிரதானிகளான மாதிராச ஜென்னையாகவும், சொக்கநாயினாரும், ராயரிடம் தெரிவிக்க, அவர், வரி வருவாயில், நூற்றியைம்பது பொன் கொடுத்து நிலங்களைப் பழுதுபோக்கிச் செம்மை செய்தார்

கல்-ஆண்! 103/1939-40

அரசுக்கு உரிமையுடைய ஏரிகள் சில இருக்க, சில ஏரிகள், தனியார் சிலரால் அமைக்கப்பட்டு. அவர்களா லேயே மராமத்துச் செய்யப்பட்டு வருவதும், அப்பணியை அவரால் செய்யஇயலாது போகும் நிலையில், அப்பணியை ஏற்க முன்வருவார் தமக்கு, அவர்கள், அவ்வேரிக்கீழ் உள்ள தம் நிலங்கள் சிலவற்றைவிற்று, அப்பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தலும் நிகழ்ந்துள்ளன.

மூன்றாம் இராசராசனின் இருபதாம் ஆண்டுக் கல்வெட்டொன்று, அருங்குன்றம் கிழான் நாற்பத்தெண்ணாயிரம் பிள்ளையும், தமக்கை மங்கையர்க்கரசியாரும், அண்ணாநாட்டு எல்லையில் ஆற்றை அடைத்து, ஏரி வெட்டத்தூம்பு அமைத்துச் சீ. மாகேசுரநல்லூர் என்று பெயரிட்டுச் சிறிது நிலம் திருத்தி எல்லைவரம்பிட்டுப்பயிர் செய்து வரும் நிலையில், மங்கையர்க்கரசியார் இறந்துபோக நாற்பத்தெண்ணாயிரம் பிள்ளை தளர்ச்சி எய்தினார். ஏரியும் உடைந்தது ஆற்றில் அணையும் உடைந்துபோயிற்று அப்பகுதி நெடுநாள் பாழ்பட்டுக் கிடந்தது.

அவர்களால் ஒன்றும் செயற்படாமல் போகவே அவர்கள் மருமகனான காங்கேயர் மகள், தொண்டைமான் நாச்சியார், ஏரியை அடைத்து, ஆற்றணையைச் செம்மை செய்து தரக்கடவளாக அவளும் அது செய்ய மாட்டாளாயினள், வேந்தனது பத்தொன்பதாம் ஆண்டில், நாற்பத்தெண்ணாயிரம் பிள்ளையின் மக்கள், குன்றம் பல்லவரையனும் கம்பன் நாற்பத்தெண்ணாயிரம் பிள்ளையும், மற்றும் அவர்களை உள்ளிட்டாரும் தம்மிற்கூடி, எங்களால் ஆறும் அடைத்து, ஏரியில் மடைகளும் அடைத்து கலிங்கும் இடமுடியாது. நீங்கள் உங்கள் பொருளை இட்டு இவ்வேரி மடைகளும் ஆறும் அடைத்துக்கலிங்கும் இட்டு, நாங்கள் முன்பு செய்ததற்கு, எல்லைக்கொல்லை காடு கழனியில் மூன்றில் ஒன்று எங்களுக்கு விட்டு, இருகூறு நீங்கள் அனுபவியுங்கள் என வேறு சிலர்க்கு எழுதித்தந்து இசைவு தீட்டிக்கல்லில் வெட்டித்தந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறது.

—கல். தொ. 8: எண்;83.

விளை நிலங்கள் வெள்ளத்தால் பாழுறுவதும், பெரும் பொருள் செலவிட்டு அதைச்செம்மைப் படுத்துவதும் அடுத்

தடுத்து நிகழ்வதால், நிலத்தை மேலும் செம்மைப்படுத்த இயலாத நிலையில், அந்நிலங்களை விற்றுவிடுவதும் உண்டு.

சகம் 130ல், திருப்பனங்காட்டு ஏரி உடைப்பெடுத்துக் கொண்டமையாலும், அதன்கீழ் நிலங்கள் பல்லாண்டு களாய்ப் பயிரேறாமையாலும், ஏரியைச் செம்மை செய் வதற்கு வேண்டும் பொருள் இல்லாமையாலும், கோயில் தானத்தார் சில நிலங்களை விற்ற வரலாற்றை ஒரு கல்வெட்டு கூறுகிறது.

—வ. ஆ. 265

ஒரு ஆற்றில் இன்ன இடத்தில் அணைகட்டலாம்; இன்ன இடத்தில் அணைகட்டக்கூடாது; இந்தக்கால்வாய், இந்த ஊர் ஏரி நிறைந்த பின்னரே, இந்த ஏரிக்குச்செல்ல வேண்டும்; இந்தக்கால்வாய், இந்த ஊருக்கு இத்தனை நாட்களுக்கு ஒரு முறையே நீர்பாய வேண்டும் என்பன போலும் பாசன விதிமுறைகளும் பண்டுதொட்டே இருந்து வந்துள்ளன.

அரியப்பன் காலில், சம்புவராயனல்லூர் எல்லைக்குள் அணையிடலாகாது என ஒரு கல்வெட்டும்; செழிய தரையன்பட்டு ஏரியிலிருந்து புதிதாக வெட்டப்பட்டுவரும் கால்வாய் அவ்வூர்ப்பாசனத்துக்குப் பாய்ந்தபின், காமக்க நல்லூர் ஏரியில்விடப்பட்டுச் சம்புவராயநல்லூருக்குப்போக வேண்டும் என ஒரு கல்வெட்டும்; காமக்கநல்லூர் ஏரியில் அரியப்பன்காலில் எட்டு நாளைக்கு ஒரு நாள் தண்ணீர் விடப்படவேண்டும் என ஒரு கல்வெட்டும் கூறுகின்றன.

—கல்ஆண் 101, 102, 103/1940—41

வெள்ளம் பாய்ந்து பாழ்பட்டுப்போகும் விளைநிலங்களுக்கு வரிவிலக்கு அளிப்பதும் உண்டு.

வாலாசா வட்டம் குடிமல்லூரில் உள்ள ஒரு கல்வெட்டு' சகலலோக சக்கரவர்த்தி இராசநாராயணன் என அழைக்கப்படும் சம்புவராய மன்னனின் ஏழாம் ஆண்டுக்கல்வெட்டு, கலவைப்பற்றில் ஆற்றுவெள்ளத்தால் கெட்டழிந்த நிலங்கட்கு வரி விலக்களித்து, அச்செய்தியைத் திருவல்லம், குடிமல்லூர், கவலை ஆகிய ஊர்களில் கல்லில் வெட்டுமாறு ஆணையிட்ட செய்தியைக் கூறுகிறது.

— வ. ஆ. கல்—624

# இலக்கியம்

# 9. தாமரையும் தும்பியும்

அமைதி நிலவிய ஒரு நாட்டில், மக்கள் மகிழ்ந்து வாழ்ந்திருந்தனர். ஒரு நாள் பகையரசன் படையொன்று அந்நாட்டில் திடுமெனப் புகுந்து பாழ் செய்யத் தொடங்கி விட்டது. அந்நாட்டில், நல்வாழ்வு வாழ்தல் இனி இயலாது எனக் கருதிய அந்நாட்டுக் குடிமக்களில் சிலர், அந்நாட்டை விட்டகன்று, நல்லாட்சி நிலவுவதாகக் கருதிய வேறு ஒரு நாட்டைத் தேடி அடைந்து ஆங்கு வாழ்வு மேற்கொண்டு விட்டனர். நாட்கள் சில கழிந்தன. அழிந்த நாட்டிற்கு உரிய அரசன், தன்னை விட்டு அகலாதிருந்த படை துணையால் பகைவரை வென்று ஓட்டி விட்டான். நாட்டில் மீண்டும் நல்லாட்சி மலர்ந்தது. அது அறிந்த, ஓடிய குடிமக்கள், மீண்டும் அந்நாடடைந்து வாழ்வு மேற்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியை நினைவூட்டும் இயற்கைக்காட்சி ஒன்று. ஓர் ஊரில் ஒரு குளம். குளம் நிறைய மலர்ந்திருந்த தாமரை மலர்களில், தும்பிகள் தத்தம் பெடைகளோடு தேன் உண்டு மகிழ்ந்து வாழ்ந்திருந்தன. ஒரு நாள், அக்குளக்கரையை உடைத்து விட்டு வெள்ளம் உட்புகுந்து விட்டது: தாமரை மலர்கள் எல்லாம் தண்ணீருள் மறைந்து விட்டன. அதனால், அங்கு வாழ்வதற்கு இனி இயலாது என அறிந்த அத்தும்பிகளுள் சில, அக்குளத்தை விட்டு நீங்கி, அதை அடுத்திருந்த நீர் நிறைந்த வேறு குளத்தைத் தேடிச் சென்று, அதில் உள்ள தாமரை மலர்த்தேனை உண்ணத் தொடங்கி விட்டன.

இதற்கிடையில், முன் கூறிய குளத்திற்கு உரியவன், உடைப்பையும் அடைத்து, அதிக நீரையும் அகற்றிவிடவே, தாமரை மீண்டும் மலர்விடத் தொடங்கி விட்டது. அது அறிந்த ஓடிப்போன தும்பிகள் மீண்டும் இக்குளத்திற்கே வந்து தாமரை மலர்களில் தேன் உண்ணத் தொடங்கி விட்டன.

இவ்வினிய காட்சி அளிக்கும் கலித்தொகைப் பாடல் இதோ;

"பன்மலர்ப் பழனத்த பாசடைத் தாமரை,
இன்மலர் இமிர்பு ஊதும் துணைபுணர் இருந்தும்பி,
உண்துறை உடைந்த பூப்புனல் காய்ப்பப் புலந்து ஊடி,
பண்புடை நன்நாட்டுப் பகை தலை வந்தென,
அதுகைவிட்டு அகன்று ஓரீஇக், காக்கிற்பான் குடைநிழல்,
மதிபடர்ந்து இளவு கொள்ளும் குடிபோலப் பிறிதும் ஒரு
பொய்கை தேர்ந்து அலமரும்பொழுதினாள்; மொய்தப
இறை பகை தணிப்ப, அக்குடிபதிப் பெயர்ந்தாங்கு,
நிறை புனல் நீங்க, வந்து, அத்தும்பி, அம்மலர்ப்
பறை தவிர்பு அசைவிடு உம் பாய் புனல்"

—மருதக்கலி ; 13

# 10. ஆநாண் விடையும், துணை புணர் ஏறும்

ஆனிரையில் ஆக்களும் ஆனேறுகளும் கலந்தே இருக்கும் என்றாலும், அந்நிரையுள், ஆனேறுகளுள் தலைமையுடைய தாக ஆனேறு ஒன்றே காணப்படும். அது அந்நிரையில் உள்ள ஏனைய ஆனேறுகள் அனைத்தும் தனக்கு அடங்கியதாகவே இருக்க வேண்டும், தன்னைக் காணவும் அணுகவும் அஞ்சி நடுங்குவனவாக இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பதும், அதற்கு மாறாக, தன்னிலும் மிக்கதாகவோ, அல்லது தனக்கு நிகருடையதாகவோ ஏதேனும் ஒரு ஏறு நடந்து கொள்ளக் காணின் பொறுக்காது, அதோடு மோதி அதனை அழித்து விட்டு அவ்வெற்றிக் களிப்பில் கோடு நிமிர்ந்து முகம் மாந்து உலா வருவதும் அதன் இயல்பாகும்,

அந்நிரையுள் ஆக்கள் எண்ணிலாதன இடம் பெற்றிருந் தாலும், அவற்றோடு பிறந்த நாள் தொட்டே பழகிவிட்ட தனால், அவற்றின் எதன் மீதும் அதற்குக் காதல் உணர்வு பொதுவாக எழுவதில்லை. அதற்கு மாறாக, அது போகும் இடத்தில், அந்நிரையில் சேராத புதிய ஆ ஒன்று வரக்கண்டு விட்டால், அவ்வளவே அதன் மீது அதற்குப் பெருங்காதல் உண்டாகி விடும்.

காதல் உணர்வு என்பதினும், காதல் வெறி என்றே அதைக் கூற வேண்டும்; தன் நிரையை மறந்து விடும். நிரையை விட்டு வெளியேறி அதன்பின் தொடர்ந்து விடும். அது செல்லுமிடமெல்லாம் அதன் நிழல் போல் தொடர்ந்து

செல்லும். அதன் விளைவால், ஆவும் ஆனேறும் ஒன்றுபட்டு விட்டால், அதன் பின்னர், அதை, அந்த ஆவினின்றும் பிரித்து விரட்டித் துரத்துவது எவர்க்கும் இயலாது. ஆ, அண்டையில் உள்ள வேற்றூர் ஆயின், அவ்வேற்றூர்க்கே குடிபோய்விடும்; ஏன், அதன் மனைக்கே கூடச் சென்றுவிடும்: இது கொல்லேற்றின் இயல்பு.

தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லா உயர்நிலை பெற்றுச் செம்மாந்திருந்தபோது, வேட்டை முன்னிட்டுக் காட்டுக்குச் சென்றவிடத்தே, புதியவள் ஒருத்தியைக் கண்ணுற்று அவள் வயத்தனாகி, அவள் பின் சென்று கிடந்து, அவள் காதலைப் பெற்றுவிட்ட நிலையில், அவளை, அவள் மனைவரையும் விடாதே சென்று திரும்பும் இளையோன் ஒருவன் செயலை விளக்க, குறிஞ்சிப் புலவர் கபிலர் அவர்கள், அவனுக்கு உவமையாகக் கொல்லேற்றினைக் கூறியுள்ள நயம், எண்ணுந்தொறும் எண்ணுந்தொறும் இனிக்கிறது:

"மாறு பொருது ஓட்டிய புகல்வின் வேறுபுலத்து
ஆகாண் விடையின் அணிபெற வந்து"

135-136.

"துணை புணர் ஏற்றின் எம்மொடு வந்து
துஞ்சா முழவின் மூதூர் வாயில்
உண்துறை நிறுத்துப் பெயர்ந்தனன்"

235-237

முதல் சந்திப்பின் போது, வெறும் காட்சிக்கு மட்டுமே இடமாதலின், காண்பதை மட்டும் அடையாக்கி 'காண்விடை'' என்றும், இருவர் உள்ளமும் ஒன்று கலந்து, விட்டநிலையில் புணர்ச்சியும் இடம் பெற்றுவிட்டதனால் 'புணர்ச்சியை அடையாக்கி "புணர் ஏறு" என்றும் சொல்லாட்சி புரிந்து நம்மைச் சொக்கவைத்துள்ளார் புலவர்.

# 11. வாடும் மஞ்சையும் ஆடும் தோகையும்

அச்சத்திற்கு ஆட்பட்டு விட்ட நிலையில், அறிவு செயல் இழந்துபோக, அவ்வச்சம் ஆட்டியபடியெல்லாம் ஆடத் தலைப்பட்டு விடுதல் அனைவர்க்கும் இயல்பு. தினைப் புனத்துள் புகுந்து தினையைப் பசியாறத் தின்று தீர்க்கலாம் என்ற பசி வேட்கையோடு புனத்துள் புகுந்த காலை, கானவர் ஊர் கூடிவந்து பறையொலி எழுப்பியும், அம்புகள் ஏவியும் துரத்த, உண்பதும் கெட்டு ஊறுபடவும் நேர்ந்தமை, யால் கொண்ட கடுஞ் சினத்தை, எதிர்ப்படும் எதுவாயினும் அதன்மீது போக்கி வஞ்சம்தீர்த்துக் கொள்ளும் வெறி கொண்டு விரைந்து பாயும் வேழத்தின்முன் எதிர்ப்பட்டு விட்டாள் ஓர் இள நங்கை.

அச்சத்திற்கு ஆளாகிவிட்ட அவள், அந்நிலையில் அக்களிற்றினைத் துரத்தித் தன்னைக் காக்க வல்லவன் ஆங்கு எதிர்ப்பட்ட ஓர் இளைஞனைத் தவிர்த்து வேறு எவரும் இல்லை என்ற நிலை ஏற்பட்ட போதும், தன்னைக் காத்துக் கொள்ளவும் அயலான் ஓர் இளைஞன் பால் அடைக்கலம் புகுவது கூடாதே என்ற அறிவு செறிவு வழி செயல்பட மாட்டாது, அடிமை கொண்டுவிட்ட அவ்வச்ச உணர்வு ஆட்டியவாறே செயல்பட்ட நிகழ்ச்சிக்குத்,

தெய்வம் ஏறப் பெற்ற மயில் தன் ஆடல்களை மறந்து, ஏறிய தெய்வம் ஆட்டியபடியெல்லாம் ஆடி நடுங்கும் நிகழ்ச்சியை உவமையாக்கிய அணி அழகு, அம்மம்ம! பாராட்டற்குரியது.

"மையில் வேழம் மடங்கலின் எதிர்தர
உய்விடம் அறியேமாகி, ஒய்யெனத்
திருந்து கோல் எல்வளை தெழிப்ப, நாணுமறந்து
விதுப்புறு மனத்தேம் விரைந்து அவற்பொருந்திச்
சூடுறு மஞ்சையின் நடுங்க."

கலி—168—169

# வாழ்வியல்

# 12. காதலும் கடமையும்

ஒருவனும், ஒருத்தியும்; அவர் மக்களும் ஒன்றுகூடி வாழும் வாழ்வே ஒரு குடியாம். அத்தகைய குடி பல சேரின் ஓர் ஊராம். ஊர்கள் பலவற்றைத் தன்னகத்துக் கொண்டதே ஒரு நாடாம். ஆகவே ஒரு நாட்டின் வாழ்வு, அந்நாட்டு மக்களின் வாழ்விற்கேற்ப அமையும். மக்கள் வாழ்வு வளம் செறிந்து அமைதி பெற்ற நல்வாழ்வாயின், அந் நாட்டு நிலையும் நன்றாம். மக்கள் வறுமையால் வாடி, அதன் காரணமாய் வழுக்கி வீழ்ந்த வாழ்வினராயின் அந்நாடும் வாழ்விழந்து போகும். "அரசனும் இல்வாழ்வார் இல் வழி இல்" என நான் மணிக்கடிகை கூறுவது காண்க.

தன் நாட்டு மக்கள் நல்வாழ்விற்காம், பொருளிற்குப் பிற நாடுகளை எதிர்நோக்காத நாடே சிறந்த நாடு. அத் தகைய வளம் செறிந்த நாட்டில் வாழ்வார், அவ் வளம் பெருக வழி செய்யும் தம் அரசும், அவ்வரசை அளிக்கும் அரசனும் அழியாது வாழ விரும்புவர். அவர்க்குக் கேடுண்டாம் என்று அறியின், அவரை இழந்து வாழ்வதினும் அழிந்து மறைவதே மாண்புடையதாம் என்ற உள்ள முடையராக் களம் புகுவர். அவ்வெண்ணம் உடையார் தம் உள்ள உரனை அழிக்கும் ஆற்றல், உலகில் எத்துணைச் சிறந்த படையாளர்க்கும் இல்லை.

பழந்தமிழ் நாடு, பண்டு பாரெல்லாம் போற்றும் பெரு வாழ்வு பெற்றுத் திகழ்ந்தது என்றால், அதற்குக் காரணம்

அந்நாட்டில், அன்று குடிவாழ்ந்த ஒவ்வொருவரும் தத்தம் கடனறிந்து வாழ்ந்தமையேயாகும்' மக்களைப் பெற்று, அவர் உடலுக்கு உரம் ஊட்டி ஓம்புதல் தன் கடனாம் என உணர்ந் திருந்தாள் தாய். அம்மக்களுக்கு அறிவும் ஒழுக்கமும் ஊட்டி, உயர்ந்தோராக்குதல் தன் கடன் என்பதை உணர்ந் திருந்தான் தந்தை. அம் மக்கள் அறநெறி நிற்கும் ஆன்றோ ராய் வளர்தற்குத் தன் நல்லாட்சியே காரணமாம் என அறிந்திருந்தான் அரசன். தாயும், தந்தையும், தம் நாட்டு அரசனும் தத்தம் கடமையில் தவறாது நின்று வளர்த்த தாங்கள், அவர் கனவு நினைவாகுமாறு, போரில் புறங் கொடாது, வேழங்களை வெட்டி வீழ்த்தி வெற்றி பெறுதல் முதலாம் தொண்டுகளில் தவறாமை தம் கடனாம் என்று அறிந்திருந்தனர் அம்மக்கள்;

அம்மக்கள், நாடு காவல் முதலாம் அவர் கடமைகளைக் குறைவற முடித்து வெற்றி பெறுதற்கு வேண்டும் வேல்படை முதலாம் வகை வகையான படைக்கலங்களை படைத் தளித்துத் துணை புரிதல் தம் கடமையாம் என்று அறிந்திருந் தனர், கொல்லன் போலும் அந்நாட்டுத் தொழில் புரி மக்கள்.

"ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே;
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே;
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே;
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே."

இவ்வாறு, ஒவ்வொருவரும் தம் தம் கடமையுணர்ந்து வாழ்ந்தமையால், அவர்களிடையே பகை தோன்றவில்லை, ஒற்றுமை வளர்ந்தது. அனைவரும் அன்பால் கட்டுண்டு கிடந்தனர். ஒன்று கூடி வாழ்ந்தமையால் அவர் குடிநிலை

உயர்ந்தது. குடிநிலை உயரவே கோன் நிலையும் உயர்ந்தது. தமிழ்நாடு, உலக நாடுகள் அனைத்திலும் உயர்ந்து விளங்கிற்று.

இவ்வாறு தம் நாட்டை உலக மன்றத்தின் உயர்ந்த அரியணையில் இருக்கச் செய்தவர் கணவனும் மனைவியுமாய் கூடி வாழ்ந்தோரே யாதலின், அறிவும், ஒழுக்கமும், காதலும் கடமையும் குன்றா அவர் வாழ்க்கை வளப்பினை அறிந்து பயன் கொள்வோமாக.

ஒருவனும் ஒருத்தியும் உள்ளம் கலந்து ஒன்றுபட்டு வாழும் இல்வாழ்க்கை, காதற்பண்பு வாய்ந்து விளங்குதல் வேண்டும். அவ்வாழ்க்கை காதல் மயமாய்க் காட்சி அளித்தல் வேண்டும். வாழ்க்கை வேறு, காதல் வேறு என்ற வேறுபட்ட நிலை ஆங்கு இடம் பெறுதல் கூடாது.

அவர் காதல் வாழ்வில் கடமையுணர்வு கருக்கொள்ளா தாயின், அக்காதல் பயனற்றுப்போம். காதல், அவர் வாழ்வின் பண்பாயின், கடமை அதன் பயனாதல் வேண்டும்;

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

என விதி வகுக்கும் வள்ளுவர் வாய்மொழியும் காண்க.

ஓர் ஆணும் ஒரு பெண்ணும் தனித்தனியே நின்று ஆற்றும் கடமைகளால் உலகம், கருதிய பயனைப் பெற்று விடாது; அவர் இருவரும் கணவனும் மனைவியுமாய்க் கலந்து, ஒருவர்க்கு ஒருவர் துணையாய் நின்று கடனாற்றும் பொழுதே, உலகம் நிறை பயன் பெறும். இவ்வுண்மையை உணர்ந்தே, உலகியல், ஒருவனும் ஒருத்தியும் ஒன்று கூடி வாழும் காதலை உருவாக்கி அளித்துள்ளது. ஆகவே

கடமையை வளர்க்கக் காதல் வேண்டும்; காதல் கடமையை வளர்க்கும் விழுத்துணையாய் வாழ்தல் வேண்டும். கடமைக்குக் காதலே அன்றி காதலுக்குக் கடமை அன்று கடமையை மறந்த காதல் காதலாகாது. காதல் கடமையை வளர்க்க வேண்டுமேயல்லாது, அக்கடமையுணர்வை அழிப்பதாதல் கூடாது,

எனக்காக நான் வாழ என்பதினும். என் காதலைக் கொள்ளை கொண்ட இவருக்காக, இவர் இன்புற்று வாழ நான் கடமையாற்றுதல் வேண்டும் என்ற விருப்பம் ஒருவர் உள்ளத்தில் இடம் பெற்ற வழி. அவர் ஆற்றும் கடமையே நிறைந்த பயன் தரும்.

# 13. போரும் போராட்டமும்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய பழந்தமிழ் நாட்டு வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டும் தொல்காப்பியர், புறத்திணை இயலில், பழந்தமிழ் மக்கள் மேற்கொண்டு நடத்திய போர் பற்றிய விளக்கங்களை அளித்துள்ளார், அத்தொல்காப்பியத்துக்கு உரை கண்ட பழைய உரையாசிரியர்களும், புதுப்புது விளக்கம் காணும் இன்றைய ஆராய்ச்சியாளரும், அன்றைய தமிழகத்தின் சூழ்நிலைகளைப் பின்னணியில் கொண்டு உரை காணத் தவறி விட்ட காரணத்தால், தமிழர்கள் அறநெறி மறந்தவராகி, வலியார் மெலியார் மேல் செல்வது போல பிறரைச் சென்று தாக்கும் அழிவுப் போரும் மேற்கொண்டனர் எனக் கொண்டு, அதற்கேற்ப உரை வகுத்துள்ளனர்.

புறத்திணை இயலை, அவ்வுரைகளின் அடியொட்டிச் செல்லாமல், அக்காலத் தமிழ் மக்களின் வாழ்க்கை நிலையை உணர்வில் கொண்டு ஆராய்வார்க்கு, அவ்வுரைகள் உண்மையுரைகள் ஆகா; புறத்திணை இயல் விளக்கும் பழந்தமிழ்ப் போர்கள் சென்று தாக்கும் போர்கள் ஆகா! மாறாக, நின்று தாக்கும் போர்களே என்பது தெளிவுறப் புலனாகும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய அப்பழங் காலத்தில், வாழ்விலும் வளத்திலும், அறிவிலும் ஆண்மையிலும் தமிழினத்தை மிஞ்சிய இனம் வேறு இல்லை. ஆகவே, தம் வறுமையும், பிறர் வளமையும் காரணமாக எழும்

காழ்ப்புணர்வு கொண்டு பிறர் மீது யோரிட்டு எழ வேண்டிய நிலை, பழந்தமிழர்க்கு உண்டாகவில்லை. மாறாக தாம் பெற்றிருந்த வளமார் பெருவாழ்வு பெற்றி ராத பிறர், தம் வளம் கண்டு கொண்ட காழ்ப்புணர்வு காரணமாகத் தம்மீது போர் தொடுத்து வந்த காலை, அவ்வாறு வந்தாரை வென்று ஓட்டுவதற்கே அவர்கள் போர் மேற் கொள்ள வேண்டியிருந்தது. ஆகப் பழந்தமிழர் கொண்ட போரெல்லாம் நின்று தாக்கிய போரே அல்லது சென்று தாக்கிய போர் அன்று.

நன்செய் போலும் வயல் வளம் மிகுந்த நாடுகளில் வாழப் பெற்ற மக்கள், வற்றாப் பேரின்ப வாழ்வுடைய ராயினர்; களர் நிலமும், கல் நிலமும் போலும் நாடுகளில் வாழப் பெற்றவர், வறுமையிற் கிடந்து உழன்று வாழ்வின் பயன் பெறாராயினர். வளமும் வறுமையும், இவ்வாறு, வாழும் நிலத்தின் வளம், வளமின்மைகளுக்கு ஏற்ப அமைந்ததாகவும், அந்நிலையைத் தம் உழைப்பால் மாற்றி அமைக்கலாம் என்ற உணர்வோ, அது அவரவர் வாழும் நில இயல்பிற்கேற்ப வந்து வாய்த்துள்ளது; அது அவரவர்க்கு கிடைத்ததை அவரவர் நுகர்வதே நில இயல்பு போலும் என எண்ணி அடங்கும் உள்ள நிறைவோ, மக்களுக்கு உண்டாகவில்லை.

அதனால், வறுமையில் கிடந்து வாழ்வின் பயன் காணாத மக்கள், வளம் கொழிக்கும் நிலத்தாரின் நிறைவைக் காணுந்தோறும் காழ்ப்புணர்வு மிகுந்தனர்; அப்பெரு வாழ்வு தமக்கும் வேண்டும் என ஆசை கொண்டது அவர் உள்ளம். அவ்வாசையை நிறைவேற்றிக் கொள்ள எதற்கும் துணிந்து நின்றார்கள் அம்மக்கள்; ஆனால், தாம் பெற்ற அவ்வின்ப வாழ்வை, அவர்க்குப் பகிர்த்தளிக்கும் விரிந்த உள்ளம் மேனிலை மக்களுக்கு உண்டாகவில்லை, அப் பேரின்ப வாழ்வு, இயற்கை, தமக்கு மட்டுமே வரைந்து வழங்கியுள்ளது என்று எண்ணினார்கள். அதனால், அவ்விரு

திறத்தார்க்குமிடையே மனவேறுபாடு இடங்கொண்டது, அவ்வாறு தொடக்கத்தில் தளிர்விட்ட அம் மனவேறுபாடு. பின்னர்ப் பகையாகவும் அதன் பயனாம் போராகவும் உருவுக் கொண்டு உலக அமைதியை உருக்குலைக்கத் தொடங்கியது,

பகுத்துணரும் அறிவாற்றலை சிறிது முன்னர்ப் பெற்ற ஒருவன் அவ்வறிவு பெறும் வாய்ப்பின்றித் தன்னோடு வாழும் பிறரும், அதைப் பெற வேண்டும், அவர் அவ்வறிவு பெறத், தான் துணை புரிதல் வேண்டும் என்று எண்ணாமல், அவர்கள் அறிவின்மையைப் பயன் கொண்டு, அவர்களை ஏமாற்றிப் பிழைக்க எண்ணிய காரணத்தால், அவ்வாறு எண்ணிய காலத்தில் உருப்பெற்றது போர்.

இயற்கையிலேயே, சிறிது மிக்க வலிவு பெற்ற ஒருவன், வலிவு குறைந்து தன்னோடு வாழும் பிறரைப் பாதுகாத்தல் தன் கடன் என்று கொள்வதற்கு மாறாக, அவர் தம் வலிவற்ற நிலையையும், தன் வன்மையையும் பயன் கொண்டு அம்மிகப் பலரை அத்தனியொருவன் ஆட்டிப் படைக்கத் தொடங்கிய அத்தொல்லூழிக் காலத்தில் தோற்றம் கொண்டது இப்போர்.

வாழ்வின் மேட்டிலே இருக்கும் ஒருவன் அதன் பள்ளத்தில் இருப்போனும், தன்னோடு மேனிலைக்கு வருவானாக என்ற நல்லெண்ணம் கொண்டு கை கொடுத்துத் தூக்கி விடுவதற்கு பதிலாக, அவன் மீது கல்லையும், மண்ணையும் வீசி, அப்பள்ளத்திலேயே அவனுக்கும் கல்லறை காணத் தொடங்கிய காரணத்தால், அக்காலத்தில் தோன்றிற்று இப்போர்.

போர், விரும்பத் தகாத ஒன்று, வேண்டாததும் கூட என்றாலும், போர் நிகழாத நாடு உண்டா? இல்லை, அது நிகழாத காலத்தைக் காண முடியுமா? இயலாது. போர்

புரியாத உயிரினம் எதுவேனும் உண்டா? இல்லை! பனி தவழும் உலகின் கோடியிலும் போர்; இருள் தவழும் பெருங் காட்டு நிலமாம் உலகின் இடைப்பகுதியிலும் போர். உலகம் தோன்றிய நாள் தொட்டு, போர் தொடர்ந்தே வருகிறது. காட்டுக் கொடு விலங்கினங்களும் போர் புரிகின்றன; நாட்டில் வாழும் நாகரிக நெறி கற்ற மக்கள் இனமும் போர் புரிகின்றனர்.

இன்று நாம் காணும் இவ்வுலகமே மக்கள் இனம், மற்ற இனங்களோடும் இயற்கையோடும் ஓயாது நடத்திய போராட்டத்தின் உறுபயன் ஆகும். காய் கனி தின்று, காட்டாற்று நீர் குடித்து வாழ்ந்த மக்கள் இனம், சுவை ஆறே என்றாலும் ஆயிரம் ஆயிரம் வகையாக ஆக்கி உண்கிறது இன்று. அதற்கு, அது மேற்கொண்ட போராட்டம் எத்தனை எத்தனையோ?

மலையிலும், மலைக் குகையிலும், மரங்களின் செறிவிலும், மறைந்து வாழ்ந்த மக்களினம், பனியின் குளிரும், வெயிலின் வெப்பமும் தன்னை அணுகாதவாறு வாய்ப்புப் பல கொண்ட மாடி வீடு கட்டி மகிழ்ந்து வாழ்கிறது இன்று. இவ்வுயர் நிலை பெற இம்மக்களினம் மேற்கொண்ட போராட்டம் ஒன்றா? இரண்டா? ஆயிரம்! ஆயிரம்!

மானின் தோலும், மரத்தின் இலையும் கொண்டு, தன் மேனியை மறைத்து, மானத்தைக் காத்துக் கொண்ட மக்களினம், பட்டாலும், மயிராலும், பருத்தி நூலாலும் ஆன கொட்டைக் கரையபட்டு உடைகளையும், கால் உறை, மெய்யுறை முதலாம் சட்டைகளையும் அணியக் கற்றுக் கொண்டுளது இன்று. எத்தனை எத்தனைப் போராட்டங் களுக்குப் பின்னர்க் கிடைத்த பலன் இது?

பண்டு, காடும், மலையும், கட்டாந்தரையுமாக இருந்த இந்நிலம், இன்று, நாடாகவும், நகரங்களாகவும், நெல்விளை நன்செய் புன்செய் நிலங்களாகவும், சிறியவும் பெரியவுமாய தொழில் நிலையங்களாகவும் காட்சி அளிக்கிறது. இக் காட்சியை அளிக்க மக்கள் இனம் மேற் கொண்ட போராட்டங்களின் எண்ணிக்கையினைக் கணக்கிட்டுக் காணல் கூடுங் கொல்?

ஊரை விட்டு ஒரு காத தூரம் செல்ல, ஒரு மாத காலத்தை வீணாக்கிய மனிதன், இன்று ஒரு சில நாட்களுக்குள் உலகத்தையே வலம் வந்து விடுகிறான்; வானிலே பறக்கிறான்; வான் வெளியையும் கடக்கிறான்; கடலிலே மிதக்கிறான்; நிலத்தில் காற்றினும் கடுகிச் செல்கிறான்; இவ்விரைவும் வசதியும் போராடாமலா கிடைத்தன?

ஆழ் கடலடியில் அடங்கியிருந்த முத்து, பவளம்; கண்ணொளி புகாக் காடுகள் செறிந்த மலைப் பிளவுகளில் மண்டிக் கிடந்த மாணிக்கம்; மண்ணுக்கடியில், மண்ணோடு மண்ணாகக் கலந்து கிடந்த பொன; இவற்றைக் கொண்ட அழகிய அணி ஆக்கித்தர அம்மனித இனம் ஆற்றிய போராட்டப் பெருமையை அளவிட முடியுமா?

நீரோடும், நெருப்போடும், காற்றோடும், மற்ற இயற்கைப் பொருள்களோடும், காட்டில் வாழும் கொடு விலங்குகளோடும் நடத்திய இப்போராட்டங்களில், மக்களினம் ஓரளவு வெற்றி பெற்று விட்டது. மக்களினம் இயற்கைக் கூறுகளோடு நடத்திய இவை போலும் போராட்டங்களை விரும்பாத நாடு, உலகில், எங்கும், எப்போதும் இருந்ததும் இல்லை. இனியும் இராது, மாறாக, அத்தகைய போராட்டம் தொடர்ந்து நடைபெறுவதிலேயே தம் வாழ்வின் வளர்ச்சி அடங்கியுள்ளது என்பதை உணர்ந்து, அப்

போராட்ட வெற்றிக்காக, ஒவ்வொரு நாடும், ஓயாது அரும்பாடுபடுகிறது.

மக்களின் இயற்கையின் கூறுகளோடும்; பிற உயிரினங் களோடும் போராடுவது இயல்பு. மக்களினம் நடாத்திய, நடாத்திக் கொண்டிருக்கும் அவ்வாக்கப் போர் எல்லோ ராலும் விரும்பப்படுவது. ஆனால், மக்களினம், மக்களினத் தோடேயே போராடுவது இயற்கையோடு மாறுபட்டது. விரும்பத் தகாதது; அழிவிற்கு வழி கோலுவது; என்றாலும் அப்போர் ஓயாமல் நடைபெற்றுக் கொண்டேயுளது, உலகம் உள்ளவரை நடைபெற்றுக் கொண்டேயிருக்கும்!

# 14. அறிவுச் செல்வம்

மாணவப் பருவம்! ஒருவன் எதிர்காலத்தில் வளத்தோடும் வளமார் புகழோடும் வாழ்வதற்கு உறுதுணை புரியும் ஒரே கருவியாம் கல்வியைப் பெறவேண்டிய பருவம் இந்த மாணவப் பருவந்தான். இந்தப் பருவத்தில் தான் கல்வியை முழுமையாகப் பெறமுடியும். இப்பருவத்தில் அதைப் பெறத் தவறிவிட்டால் பிற்கால வாழ்க்கையில் எவ்வளவு முயன்றாலும் அதைப் பெற முடியாது.

வாழ்நாட் பருவத்தில் மிகச் சிறப்புடைதான இம் மாணவப் பருவம் மனித உள்ளம் தூண்டிவிடப்படும், உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டுப் போகும் இயல்புடையது தான். அவ்வாறு உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டுக் கிளர்ந்தெழும் உள்ளத்தை ஒரு நெறிப்படுத்துவது அரிதினும் அரிது தான் ஆயினும் அத்தகைய சூழ்நிலையினும்: உள்ளத்தை, அது ஓடத் துடிக்கும் இடத்திற்கு ஓடி விட இடந்தந்து விடாது எதிர்கால வாழ்க்கைக்கு இடையூறு விளைவிக்கும் உணர்வுகளுக்கு அடிமைப்படுத்தி விடாது ஆக்கம் தரும் உணர்வில் தடுத்து நிறுத்துதல் வேண்டும். அதுதான் அறிவுக்கு அழகு: கல்வி கற்பதன் பயன்.

சென்ற இடத்தால் செலவிடாது, தீது ஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு"

உழைத்துப் பிழைக்கும் எளிய குடும்பத்தினரான பெற்றோர், "நம் குடும்பத்தில் இவன் ஒருவனாவது

கல்லூரிக்குச் செல்லட்டும்; பட்டம் பெறட்டும்; பெரிய பதவியில் அமரட்டும்' அதன் பயனாய் நம் குடும்பத்தில் வழி வழியாகத் தொடர்ந்து வரும் வறுமை தொலையட்டும்: எதிர்காலத்தில் வர இருக்கும் அந்த நல்ல காலத்தை அடைவதற்காக இப்போது நாம் அடையும் இடர்ப்பாட்டினைத் தாங்கிக் கொள்ளுவோம்'' என்ற உணர்வோடுதான் தம் பிள்ளையைக் கல்லூரிக்கு அனுப்பிவைக்கின்றனர். தம் உடலுரத்திற்கும் மேற்பட உழைத்துத் தங்கள் வயிற்றைக் கட்டி, வாயைக் கட்டி தம் பிள்ளை கேட்டதை எல்லாம் அளித்து வருகின்றனர். அப்பெற்றோர்களின் கனவு நனவாவது பிள்ளையின் கையில்தான் உள்ளது.

"சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே'' என்ற முதுமொழிக்கேற்ப, தம் பிள்ளையைச் சான்றோன் ஆக்க பெற்றோர் தங்கள் கடனை முழுமையாக ஆற்றுகின்றனர். தம் பெற்றோர் ஆற்றிய அம்பெருந்தியாகத்திற்கு பிள்ளை ஆற்ற வேண்டிய நன்றிக்கடன் அவர்கள் விரும்பியவாறு, கற்பன கற்றுத் தேர்வது ஒன்றே.

கல்லூரியில் பயிலும் காலத்தில் காலையில் கண்விழித்தெழுந்ததும், ஒரு சிறிது நேரம் இரு கண்களையும் மூடிக் கொண்டு, தன்னைக் கல்லூரிக்கு அனுப்பிவிட்டு, கல்லூரியில் தனக்குக் குறையேதும் நேராவண்ணம் காலந்தவறாமல் தான் கேட்பதையெல்லாம் கொடுப்பதற்காகத் தன் குடும்பத்தினர் மேற்கொண்டிருக்கும் கடினமான உழைப்பு, அவ்வாறு கடினமாக உழைப்பதற்குக் காரணமான அவர்கள் ஆசைக்கனவு, அக்கனவு நினைவாக்க வேண்டிய தன் கடமை ஆகியவைகளைச் சிறிது நேரம் தன் உளத்திரையில் ஓட விட்டுச் சிந்திப்பதை வழக்கமாக நாள்தோறும், ஒவ்வொரு மாணவனும் கொண்டு விடுவனாயின், மாணவர் உள்ளத்தில் கல்வியைத் தவிர்த்து வேறு எவ்விதக் கிளர்ச்சி உணர்வும் தலை தூக்காது. அத்தகைய சிந்தனை மாணவர்களின் இன்றியமையாக் காலைச் கடன்களில் ஒன்றாக அமைய வேண்டும்.

கல்லூரியில் கால் வைத்த அளவிலேயே அறிவு மாணவனை வந்து அடைந்து விடாது. அதை ஆசிரியர்கள் அளித்தால்தான் மாணவர்களால் அடைய முடியும். ஆசிரியர்கள் தங்கள் வீடுகளிலும், கல்லூரி நூல் நிலையங் களிலும் அடுக்கி வைத்திருக்கும் நூல்களில் மாணவர் தாம் விரும்பும் நூல்களை ஆசிரியரைக் கேளாமலே, அவர் அறியாமலே எடுத்து வந்து விடலாம். ஆனால், ஆசிரியர்கள் தங்கள் உள்ளத்தில் தேக்கி வைத்திருக்கும் அறிவுச் செல்வத்தை அவர்கள் கொடுத்தால் அல்லது எந்த மாணவரும் கொள்ள முடியா, ஆகவே, அறிவுச் செல்வத்தை ஆசிரியர்கள் தாமே விரும்பி முன்வந்து அள்ளி அள்ளித்தரும் வகையில் மாணவர்கள் நடந்து கொள்ளுதல் வேண்டும்.

இந்த மாணவர்கள் நல்லவர்சள், இவர்களுக்கு நாம் பெற்றுள்ள அறிவுச் செல்வத்தையெல்லாம் வாரி வழங்க வேண்டும் என்ற நல்லுணர்வு ஆசிரியர்களுக்கு இயல்பாகவே உண்டாகும் வகையில் நடந்து கொண்டாலல்லது மாணவர் களுக்கு அறிவுச் செல்வம் கிட்டாது. இந்த உண்மையை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உணர்ந்து,

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே"

எனக் கற்கும் முறைக்கு இலக்கணம் வகுத்தனர் நம் தமிழ் மூதாதையர்.

ஆசிரியர்களை நையாண்டி செய்வது, அவர்களை எதிர்த்துப் பேசுவது, அவர்கள் ஆணைக்கு அடிபணிய மறுப்பது போலும் செயல்களால், ஆசிரியர்களின் வெறுப் பினைத் தேடிக் கொள்ளும் மாணவன், அம்முழு அறிவையும் பெறத் தவறியவனாவன். பெருஞ்செல்வர் வீடுகளைத் தேடி அடைந்து, அவர்முன் கைகட்டி, வாய் புதைத்து நின்று தன் வறுமைக் கொடுமையை விளங்கக் கூறிக் கையேந்திக் காசு பெறும் வறியவர் போல் ஆசிரியர்களிடம் பணிவோடு

நடந்து கொள்ளும் மாணவனே தலையாய மாணவனாவன். அவன் ஒருவனால் மட்டுமே அறிவுச் செல்வத்தை முழுமையாகப் பெற இயலும்.

"உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்"

என்பது வள்ளுவர் வாக்கு!

கற்ற கல்வியும் பெற்ற பேரறிவும், கற்ற ஒருவனை மட்டும் வாழவைக்குமளவே அமைந்துவிடுதல் கூடாது.

"தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது"

என்றார் வள்ளுவர். அந்த அறிவு ஊருக்கு உதவ வேண்டும், நாட்டிற்கு உதவ வேண்டும், ஏன் உலகிற்கே உதவ வேண்டும்.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்"

"இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்"

"தாயெழிற் றமிழை, என்றன்
தமிழரின் கவிதை தன்னை
ஆயிரம் மொழியிற் காண
இப்புவி அவாவிற் றென்ற
தோயுறும் மதுவின் ஆறு
தொடர்ந்தென்றன் செவியில் வந்து
பாயுநாள் எந்த நாளோ
ஆரிதைப் பகர்வார் இங்கே?"

என பாரதியும் பாரதிதாசனும் காட்டிய வழிச்சென்று பணியாற்றி வீட்டிற்கும் நாட்டிற்கும் புகழ் ஈட்டித் தருதல் வேண்டும்.

வேற்றுமொழி வழங்கும் நாடுகளில் வளர்ந்து வரும் அறிவுச் செல்வங்களை நம்முடையவாக ஆக்கிக் கொள்ள வும், நம்நாட்டு ஆக்கங்களை அவ்வேற்று நாட்டவரோடு பகிர்ந்து கொள்ளவும், மாணவர்கள் அறிவியல் துறை, மொழித்துறை ஆகிய இரு துறைகளிலும் ஒருசேர, சிறந்த அறிவினைப் பெற்றவர்களாகத் திகழ்தல் வேண்டும்.

"அறிவுடையார் எல்லாம் உடையார்" என்ற உண்மை உணர்ந்து சிறந்த அறிவுடையராதல் இன்றியமையாது வேண்டப்படுவதொன்றாகும். ஆனால், அவ்வறிவு மட்டுமே ஒருவனை உயர்ந்தவனாக ஆக்கிவிடாது. அவனை முழு மக்கட்டன்மை உடையவனாக உயர்த்த அறிவோடு வேறு ஒன்றும் தேவைப்படுகிறது. அதுதான் நாகரிகம், பண்பாடு.

மிக உயர்ந்த மாடமாளிகைகளில் வாழ்வது, விலை உயர்ந்த ஆடை அணிகளை அணிந்து கொள்வது, விரைந்த வாகனங்களில் உலாவருவது, எண்ணற்ற எடுபிடி ஆட்களைக் கொண்டிருப்பது ஒவ்வொருவருக்கும் தேவைதாம் என்றா லும் இவை மட்டுமே நாகரிகமாகிவிடாது. இவையெல்லாம் அறிவும் உழைப்பும் துணைநிற்க நம் முயற்சியின் பயனாய் வந்துற்றவை. தம்மோடு ஒன்று கூடி வாழும் பிற உயிர் களுக்கு இன்னல் நேரக் கண்ட அளவே, அவ்வின்னலைத் தமக்கு வந்ததாகக் கொண்டு உளம் துடிக்கும் உயர்ந்த உணர்வு உடையராதல் வேண்டும். அவ்வுணர்வுடைமை ஒன்றுதான் நாகரிகம் என்ற சொல்லால் உணர்த்தப்படும் தகுதியுடையதாகும்.

"நெடியமொழிதலும், கடிய ஊர்தலும்
செல்வம் அன்று; தன் செய்வினைப் பயனே;
சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே"

என்ற நற்றிணையின் நல்லுரை காண்க.

பிறர் துயரை தம் துயராகக் கொள்ளும் பண்பாளர்கள் வாழ்ந்தால்தான் நாடு வாழும்.

"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்"

என்றார் வள்ளுவர்.

"தமக்கு என முயலா நோன்தாள் பிறர்க்கு என
முயலுநர் உண்மையான் உண்டால் அம்ம இவ்வுலகம்"

என்றார் புறநானூற்றுப் புலவர்.

அத்தகைய பண்பாட்டினைப் பெறாமல் அறிவுச் செல்வத்தை மட்டும் அளவிறந்து பெறுவது விரும்பத்தக்கதன்று. பண்பாடு கலவாத அறிவு பயன் அற்றது.

"அரம் போலும் கூர்மைய ரேனும் மரம் போல்வர்
மக்கட் பண் பில்லாதவர்"

"அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தந்நோய் போல் போற்றாக்கடை"

என்ற வள்ளுவர் அறிவுரைகளை உளம் கொள்வோமாக.

# 15. இறைவன் இருக்கும் இடம்

கடவுள் எங்கே இருக்கின்றார்?

கதிர்காமத்திலேயும், மற்றத் தலங்களிலுமா கடவுள் குடிகொண்டுள்ளார்?

இல்லவே இல்லை என்கிறது சுவையான ஆங்கிலக் கவிதை ஒன்று!

கடமைகளைச் சரிவரச் செய்பவன் ஒருவன் தேவதூதன் ஒருவரைச் சந்திக்கின்றான். அச்சமயத்தில் தேவதூதன் கையிலே ஒரு புத்தகம் இருக்கின்றது.

"அப் புத்தகம் என்ன" என்று தேவதூதனை அவன் கேட்கிறான்.

"கடவுளை நித்தமும் வணங்குபவர்களின் பெயர்ப் பட்டியல்தான் அது" என்கிறார் தேவதூதர்.

"அப்படியா! என் பெயர் அப்புத்தகத்தில் உண்டா? பார்த்துச் சொல்வீர்களா?" என்று அம்மனிதன் கேட்கிறான்.

"பொறுத்துக்கொள்! பார்த்துச் சொல்லுகின்றேன்" என்று சொன்ன தேவதூதன், கையில் இருந்த பெயர்ப் பட்டியலைப் பக்கம் பக்கமாகப் புரட்டிப் பார்த்துவிட்டு 'உன் பெயர் இதில் இல்லையே" என்றார்.

இச்சொல் அம்மனிதனுக்குக் கவலையைக் கொடுத்தது. அந்நேரத்தில் இன்னொரு பட்டியலை எடுத்தார் தேவதூதர்.

"அது என்ன" என்று கேட்டான் அம்மனிதன்.

"இதுவா! இந்தப் பட்டியலில்தான் கடவுள் தன் அன்பர்களின் பெயர்களை எழுதிவைத்துள்ளார்" என்றார் தேவதூதர்.

"அதிலாவது என் பெயர் இருக்கிறதா என்று பாருங்கள் என்று பரிந்து தேவதூதனைக் கேட்டான், கடமைகளைத்தவறாது செய்து வரும் அம்மனிதன்.

பட்டியலைப் பிரித்த தேவதூதன், உடனே "உன் பெயர் தானே முதலாவதாக இருக்கின்றது" என்றார்.

—கருத்துப் பொதிந்த இந்த ஆங்கிலக் கவிதை எதனைக் குறிக்கின்றது?

கடமைகளைச் சரிவரச் செய்பவனிடத்தில்தான் கடவுள் இருக்கின்றார் என்பதைத்தான் இது வெளிப்படுத்துகின்றது. இதை வள்ளுவரும்,

"மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்
தாளுளாள் தாமரையினாள்"

என்ற குறளில் விளக்கியுள்ளார்.

பாடங்களை சரிவர ஒழுங்காகப் படிக்காது, "என்னைச் சோதனையில் சித்தி யெய்தவை' நான் உனக்குத் தேங்காய் உடைப்பேன். கூடம் கொளுத்துவேன்" என்று கோயில் முன் நின்று கும்பிட்டால் சோதனையில் சித்தி எய்தி விட முடியுமா?

இலட்சுமி படத்தை வீட்டில் வைத்து தினமும் வணங்கி "என்னைச் செல்வன் ஆக்கிவிடு" என்று துதித்தால் செல்வனாகி விட முடியுமா?

கடமையைச் சோம்பலின்றி செய்பவனிடத்தில் செல்வம் தானாக வந்து சேர்கின்றது என்று வள்ளுவர் இக்குறளில் விளக்கியுள்ளார்.

வள்ளுவர் கடமையைச் சரிவரச் செய்தார். இன்று அவரை நாம் நிறை குடம் வைத்து சூடம் கொளுத்தி கடவுளை வணங்குவது போல் துதிக்கின்றோம்.

பேரறிஞர் அண்ணாவும் தமது கடமைகளை நாட்டுக்கு மொழிக்குக் குறைவின்றிச் செய்தார். இன்று அனைத்துப் பிரிவு மக்களும் அவரைப் போற்றி வணங்குகின்றனர். இதையே வள்ளுவரும்,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்" என்று சொல்லியுள்ளார்

தினபதி நாளிதழ், கொழும்பு
13- 9- 1969

# 16. புலி நிகர் மாந்தர்

> "வசை ஒழிய வாழ்வாரே வாழ்வார்; இசை
> ஒழிய வாழ்வாரே வாழாதவர்"

என்று கூறுவர் வள்ளுவர். உலகிற் பிறந்தாருள் உயர் புகழ் பெற்று வாழ்ந்தாரே உண்மையிற் பிறந்து வாழ்ந் தார் எனப் போற்றப்படுவர். ஆனால், அப்புகழ் பெற்று வாழ்ந்தாரோ உலகில் மிகச் சிலராவர்!

உலகிற் பிறந்தார் பெருந்தொகையினராவர்: அவர் தொகையினை எண்ணிக் காணல் இயலாது; அவர்கள் புகழ் பெற்று வாழாமையால் அவரைப் பிறந்தாராகவே பேணார் பெரியோர்: கணங் கணம் தோன்றிக் கணங் கணம் மறையும் பல்பிணங்களாம் அவை என்றே பழிப்பர்: ஆதலில், உலகிற் தோன்றுவார் புகழோடு தோன்றுதல் வேண்டும்; ஆனால் அப்புகழ் எளிதில் எய்துவதன்று. உயர்குடிப் பிறப்போ, நிறை பெருஞ் செல்வமோ புகழ் அளிப்பன ஆகா; புகழ் பெறுதற்காம் பெருங்குணம் அமையப் பெறல் வேண்டும். அது அமையப் பெற்று புகழ் பெற்றார், இம்மையிலும், மறுமையிலும் மாறாப் பெரு நிலையுற்றுப் பெருக வாழ்வர்.

ஆதலின், உலகிற் பிறந்தார் ஒவ்வொருவரும் உயர் பெரும் புகழ் பெற்றுப் பிறர் போற்ற வாழ்தல் வேண்டும். தாம் பிறந்ததும், இறந்ததும் பிறர் எவரும் அறியாவாறு

மாண்பிலராகி மறைந்த வாழ்வினராதலின், வாழாமையே நன்று:

"தோன்றின் புகழொடு தோன்றுக! அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

உழவர் உழுது பயிர் செய்தாராக, விளைந்து முற்றி வளைந்த கதிர்களை அவ்வுழவர் அறியா வண்ணம் சிறுகச் சிறுக, கொண்டுச் சென்றுத் தன் வளையினுள்ளே சேர்த்து வைக்கும் இயல்புடையது எலி.

தன் பெரும் பசியைப் போக்கிக் கொள்ள வேண்டிக் கொழுத்த பன்றியொன்ற அடித்தக்கால், அது தனக்கு இடப்பக்கத்தே வீழ்ந்ததனை உண்ணாத தன் உறுதியே முன் நிற்க, அதை உண்ணாது விட்டுச் சென்று, மறுநாள் முழையினின்றும் வெளிப்போந்து பெரிய ஆண் யானையொன்றை அடித்து வலப்பக்கத்தே வீழ்த்தி தன் பசியாறும் பண்புடையது புலி.

எலியொத்த இழிவுள்ளம் உற்றாரும், புலி நிகர் பேருள்ளம் பெற்றாருமாய் இருவகையினர், மக்களிலும் வாழக் காண்கிறோம், எலியொத்தவர் தம் தோள்வலி கொண்டு உழைத்துப் பெறாது, பிறர் உழைத்துச் சேர்த்த பொருளை, அவர் அறியா வண்ணம் சிறிது சிறிதாகக் கைப் பற்றி, அதையும் ஆர உண்டு மகிழாமல், உண்ணாதே சேர்த்து வைக்கும் சிறுசெயலினராவர்.

புலி நிகர் மாந்தர்,

"ஈன்றாள் பசிகாண்பா ராயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை"

என்ற உயர் நோக்குடையராய்த், தம் புகழ் கெடவரும் செல்வம், பெருஞ் செல்வமேயாயினும், அதைப் பொருளென மதியாப் பேருள்ளம் உடையவராவர்.

இவ்விரு வகை மக்களுள், முந்தையோர் உள்ள உயர்வு அற்றவர்; அத்தகையார் பெரும் பொருளினராயினும் அவருடன் நட்பு கொள்வதை அறிவுடையோர் விரும்பார்; விரும்புதல் கூடாது.

"பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை"

என்பவாகலின், பின்னையோர் நட்பினையே சான்றோர் பெரிதும் பேணி வரவேற்பர்.

வாணிகத் தொழிலின் வளம், வணிகர் தம் நல்லொழுக்கத்தை அடிப்படையாய்க் கொண்டது. அவர் தம் வருவாயே குறியாய்த் தம் வணிகப் பொருளின் வளத்தினைக் கருதாராயின் வாணிகம் வீழ்ந்துபோம்; அவ்வாறன்றித் தம் வருவாயினும், வாணிகப் பொருள்களின் நேர்மையே பெரிது எனப்பேணும் அறிவினராயின், அவர்கள் வாணிகம் வளரும்,

இந்நுட்த்தை அறிந்தவர் சங்க காலத் தமிழ் நாட்டு வணிகர். அவர்கள் நீதி தவறா நெஞ்சுடையவர்; தமக்கும் தம் தொழிலுக்கும் உண்டாம் பழிகண்டு அஞ்சும் பண்புடையவர்; என்றும் வாய்மையே வழங்கும் வாழ்வுடையவர். தம் பொருள் போன்றே பிறர் பொருளையும் பேணும் பேரறம் படைத்தவர். கொள்ளும் சரக்கைத் தாம் கொடுக்கும் பொருட்கு மிகையாகக் கொள்ளார்; தாம் கொடுக்கும் சரக்கைத் தாம் வாங்கும் பொருட்குக் குறைத்துக் கொள்ளார். இத்தகைய வாணிக நெறியால் வந்த வளத்தால் அவ்வணிகர் சிறந்தார்.

செல்வம் உடையார் பால் கல்வி நில்லாமையும், கல்வி உடையார் பால் செல்வம் நில்லாமையும் உலகில் இயல்பாகி விட்டது.

"இரு வேறு உலகத்து இயற்கைத் திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு."

என்ற குறள் மொழி காண்க.

இந்நிலை உலகில் வாழும் எவர்க்கும் நன்மை விளைவிப்பதாகாது; மக்களிடையே பணம் வளருகின்ற அளவு, மனமும் வளர்தல் வேண்டும். மனம் வளர்தலின்றித் தான் மட்டும் வளர்ந்த பணம் பாழ் பல செய்யும் இன்றைய உலகின் நிலை இதுதான்.

செல்வம் நில்லா இயல்பினை உடையது. நில்லாத செல்வத்தை நிலையுடைத்து என்று உணர்தல் புல்லறிவு. அப்புல்லறிவால், அதைப் பெருகப்பிடித்துப் பேணி வைத்தல் பெருங்கேடாம். எங்கும் நில்லாது இயங்கிக் கொண்டே இருக்கும் இயல்புடைய செல்வத்தைச் சேர்த்துப் பிணித்து வைப்பதால் உலகில் கேடுறுவார், அதை பெற மாட்டாப் பல்கோடி மக்கள் மட்டும் அன்று; அதைப் பேணி வைத்திருக்கும் தனக்கும் கேடாம்.

"ஆழ அமுக்கி முகத்தினும் நாழி முகவாது நானாழி" என்ப

பெரும் பொருளைச் சேர்த்து வைத்தார், அச்செல்வத்தாலாய முழுப் பயனையும் பெற்று விடுவர் எது எண்ணுவது இயலாது; செல்வம் குறைந்துவிடுமே என்ற அச்சம் அவரை அனுபவிக்க விடாது. நுகர விரும்பிய வழி இடையூறுகள் பல வந்து சேரும்.

"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது"

என்பர் வள்ளுவர்.

இஃது இயற்கை முறை. இவ்வியற்கைக்கு மாறாகச் சென்றால் எண்ணற்ற துயர்வுற வேண்டும். இந்த உண்மைகளைச் செல்வம் படைத்தோர் உணர்தல் வேண்டும். அவர்கள் உணர்ந்து விட்டால், உலகிற்குக் கேடே இல்லையாம், ஆனால், திருவினை உடையராகிய அவர்கள் தெள்ளியரல்லர். அதனால் அதை உணர முடியவில்லை. இந்நிலையில் அறியாத அவர்க்கு அறிவூட்டும் நல்லோர் நாட்டிற்குத் தேவை. அந்நல்லோர் கூறும் அறிவுரையே, நாட்டிற்கு உண்டாகும் கேடுகளைப் போக்க வல்லது.

# அரசியல்

# 17. மக்களாட்சியின் மாண்பு

சென்னை மாநிலத்தலைமை அமைச்சராக திரு. இராச கோபாலாச்சாரியார் அவர்கள் 1938ஆம் ஆண்டில் பொறுப் பேற்றுக்கொண்டிருந்த போது, தமிழ்நாட்டு மாணவர்கள் இந்திமொழியைக் கட்டாயமாகப்படிக்க வேண்டும் எனச் சட்டம் கொண்டுவந்த அந்தநாள் தொடங்கி, திராவிட இயக்கம் மேற்கொண்டு வந்த, வரும், இந்தி எதிர்ப்புப் போராட்டங்களின் ஒரு கட்டமாக, 1986ஆம் ஆண்டு, "தேவநாகரி வடிவில் அமைந்த இந்திதான், இந்தியாவின் ஆட்சிமொழி" என்ற தொடர் அடங்கிய இந்திய அரசியல் சட்டம் 343/1 பிரிவு நகலைத்தீயிட்டுக்கொளுத்திய தற்காகத் தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கானவர், கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

அவ்வாறு சிறையில் அடைக்கப்பட்டவர்களுள், தமிழகசட்டமன்ற உறுப்பினர்களும் பலர் இருந்தனர் "இந்தியை இந்தியாவின் ஆட்சி மொழியாக்கும் அரசியல் சட்டத்தின் பிரிவைக் கொளுத்தியது அரசியல் சட்டத்தை அவமதித்ததாகும் அரசியல் சட்டத்தை மதிப்போம் என உறுதிமொழி எடுத்துக்கொண்டு சட்டமன்ற உறுப்பினர் ஆனவர்களின் இச்செயல் சட்டமன்ற மரபை மீறியதாகும்" என்று கூறி 1996ஆம் ஆண்டு நவம்பர் 24ஆம் நாள் பேராசிரியர். க. அன்பழகன் உள்ளிட்ட ஏழு சட்டமன்ற உறுப்பினர் பதவிகளைப்பறித்து தீர்ப்பளித்து விட்டார் சபாநாயகர்.

சட்டத்தை எரித்தவர்கள் சட்டமன்ற உறுப்பினர் தகுதியை இழந்து விட்டனர் என சபாநாயகர் தீர்ப்பு அளித்துவிட்ட பின்னரும், 1986 டிசம்பர் 5 ஆம் நாள், மதுராந்தகம் ஆறுமுகம், அரக்கோணம் இராஜீ, ஆபிரகாம் ஆகிய மூன்று சட்டமன்ற உறுப்பினர்கள் இந்திதான் இந்தியாவின் ஆட்சிமொழி என்ற சொற்றொடர் அச்சிட்ட தாளைக்கொளுத்தினர். அவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

சட்டமன்றம் தொடர்பான தீர்ப்பு வழங்கும் அதிகாரம் சபாநாயகருக்கு சட்டசபை நடந்து கொண்டிருக்கும் நாட்களில் மட்டுமே அல்லாது, அது நடைபெறாத நாட்களிலும் உண்டு ஆகவே. முன்பு ஏழு சட்டமன்ற உறுப்பினர்களில் பதவியைப்பறித்து சபாநாயகர் உத்தரவிட்டது போல, இம்மூவரின் பதவிகளையும் பறித்து உத்தரவு பிறப்பித்திருக்கலாம். ஆனால், அது செய்யப்படவில்லை. அதற்கு மாறாக, 1986 டிசம்பர் 22ஆம் நாள், சட்டசபையின் அவசரக் கூட்டத்தைக் கூட்டி, முந்தைய ஏழு பேரோடு, இம்மூவரையும் சேர்த்து பத்து சட்டமன்ற உறுப்பினர்களின் பதவி பறிக்கப்பட்டது. அது முந்தைய ஏழுபேர் பதவியைப் பறித்த சபாநாயகர் உத்தரவு போல் அல்லாமல், சட்ட மன்றத்தீர்மானம் மூலம் நிறைவேற்றப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தான் ஒரு சிக்கல். சபாநாயகர் உத்தரவின்படி பேராசிரியர் உள்ளிட்ட அந்த ஏழுபேர், 1986 டிசம்பர் 22ஆம் நாள் அன்று சட்டமன்ற உறுப்பினர் பதவியை இழந்து விட்டதாகக் கொள்ளலாம். ஆனால், ஆறுமுகம், இராஜு, ஆபிரகாம் ஆகியவர்களைப்பற்றி சபாநாயகர் பதவி இழப்புத் தீர்ப்பு வழங்காமையால் அம்மூவரும் 22-12-86 வரை சட்டமன்ற உறுப்பினர்கள் தான் 22-18-86 அன்று கூட்டப்பட்ட சட்டமன்றக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் முழு உரிமை பெற்றவர்கள்

ஆனால், அவர்களுக்கு அந்த வாய்ப்பு அளிக்கவில்லை, அவர்களுக்கு அந்த வாய்ப்பு கட்டாயமாக அளிக்கப்பட்டு இருகக வேண்டும்.

சட்டசபைக் கூட்டம், அதற்குச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு அனுப்புவது குறித்து அரசியல் அமைப்புச் சட்டம் 208 (1)பிரிவின்படி இயற்றப்பட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகள் என்ன கூறுகின்றன.

அதிகாரம் 2 விதி 3, பேரவை கூட்டுதல் பற்றிக் கூறுகிறது அது வருமாறு,

(அ) பேரவையை ஆளுநர் கூட்டும் போதெல்லாம், பேரவைக் கூட்டத்துக்கான நாள், நேரம், இடம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு அறிவிப்பு ஒன்றினை அரசிதழில் வெளியிடவேண்டும்.

(ஆ) செயலாளர் ஒவ்வொரு உறுப்பினர்க்கும் பேரவைக் கூட்டத்திற்கென குறிக்கப்பெற்ற நாள், நேரம், இடம் ஆகியவற்றை அறிவிக்க வேண்டும்.

மேலும், பேரவைக் கூட்டம் குறுகிய முன்னறிவிப்புடனோ அல்லது அவசரமாகவோ கூட்டப்பெரின்ஒவ்வொரு உறுப்பினர்க்கும் தனித்தனியே அழைப்பாணைகள் அனுப்பப்பெற வேண்டுவதில்லை. ஆனால், கூடும்நாள், இடம் ஆகியவற்றை அரசிதழிலும், செய்தித்தாள்களிலும் வெளியிட வேண்டும். மேலும் உறுப்பினர்களுக்குத் தந்தி மூலமாகவோ அல்லது வேறு வகையிலோ தெரிவிப்பதோடு வானொலி வாயிலாகவும் தெரிவிக்க வேண்டும். "Shall be informed" என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஒரு உறுப்பினர், ஒரு குற்றச்சாட்டின் பேரில் அல்லது ஒரு குற்றம் செய்ததற்காகக் கைது செய்யப்பெற்றாலும் அல்லது இந்தியாவின் எந்தப் பகுதியிலும் உள்ள ஒரு நீதிமன்றத்தினால் சிறை தண்டனை விதிக்கப் பெற்றாலும்

அல்லது மத்திய, மாநில அரசின் நிர்வாக ஆணைப்படி காவலில் வைக்கப் பெற்றாலும், தண்டிக்கும் நீதிபதி குற்றவியல் நீதிபதி (மாஜிஸ்ட்ரேட்) அல்லது நிர்வாக அதிகாரி அதுபற்றிய செய்தியைப் பேரவைத் தலைவருக்கு உடனே தெரிவிக்க வேண்டும். அதில், முறையே கைது செய்ததற்கான, அல்லது காவலில் வைத்திருப்பதற்கான அல்லது தண்டித்ததற்கான காரணங்களையும் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

மேலும், அவ்வுறுப்பினர் எவ்விடத்தில் காவலில் வைக்கப்பெற்று உள்ளார் என்கிற விவரத்தையும் பேரவைத் தலைவரால் வரையறுக்கப் பெற்றுள்ள பொருத்தமான படிவங்களில் (இணைப்பு அ அல்லது ஆ) தெரிவிக்க வேண்டும் எனத் தமிழ்நாடுசட்டமன்றப் பேரவைவிதி 314-தெளிவாகக் குறிப்பிடுகிறது. கைது செய்யப்பட்ட அம்மூன்று சட்டமன்ற உறுப்பினர்களும் எந்தச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர் என்ற விவரம் அன்றே சபாநாயகருக்கு நீதிபதிகளாலும் சிறை அதிகாரிகளாலும் தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளுக்கு செய்தித்தாள்கள் வழங்கப்படுவது இல்லை. வானொலி வசதியும் இல்லை. இந்த நிலையில் விதி 3 (அ)-வின்படி வெளியிடப்பட்ட அரசிதழ்களோ, (ஆ)-2வது பத்தியின்படி கொடுக்கப்பட வேண்டிய தந்திகளோ, சிறைக் கண்காணிப்பாளர் அல்லது சிறை அதிகாரி மூலம் அந்த மூன்று உறுப்பினர்களுக்கும் அனுப்பப் பெற்றிருக்க வேண்டும். ஆனால் சிறையில் இருந்த அம்மூன்று உறுப்பினர்களுக்கும் அரசிதழோ, தந்தியோ அனுப்பப் பெறவில்லை.

**செல்லுபடி ஆகாத சட்டமன்றக் கூட்டம் :**

234 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சட்டமன்றத்தில் ஒரு உறுப்பினர்க்கு ஒரு கூட்டத் தொடர் நடைபெறு

வதையே அறிவிக்காமல் சட்டமன்றத்தைக் கூட்டுவது முறை யாகாது. அவ்வாறு கூட்டிய கூட்டம் தமிழ்நாடு சட்டமன்ற விதிகளின்படி முறையாகக் கூட்டப்படாத கூட்டம் ஆகும் அக்கூட்டத்தில் நடைபெறும் எந்த நிகழ்ச்சியும், நிறை வேற்றப்பட்ட எந்தத் தீர்மானமும் செல்லுபடி ஆகாதன ஆகும்.

மேற்படி முடிவை உறுதி செய்யும் வலுவான ஆதாரங் கள் சிலவும் இருக்கின்றன. நாடாளுமன்ற நடைமுறை மரபுகளுக்கு வழிகாட்டி நூலாகக் கொள்ளப்படுவது; நாடாளுமன்றத்தில் செயலாளர்களாகப் பல்லாண்டு பணி புரிந்து அத்துறையில் முதிர்ந்த அறிவு பெற்றவர்களாகிய திருவாளர்கள் எம். என். கவுல் என்பாரும், திருவாளர் எஸ். எல். ஷக்தர் என்பாரும் எழுதிய "பாராளுமன்றத்தின் பழக்கவழக்கமும் நடைமுறை ஒழுங்கும்" (Practice and Procedure of Parliament) என்ற நூலாகும்.

அதில் பின்வரும் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. "செய லாளர் உறுப்பினர்களுக்குத் தனித்தனி அழைப்பாணை அனுப்புவார். கூட்டம் நடைபெறுவதற்கு முடிவெடுத்த நாளுக்கும் கூட்டம் கூட்டப்பட வேண்டிய நாளுக்கும் இடை யிலான காலம், மிகக் குறுகியதாக இருப்பின், அத்தொடர் கூட்டம் தொடங்கப் பெறுவதை உறுப்பினர்களுக்கு அறிவித்துவிடலாம்: அழைப்பாணைகள் செய்தித் தாள் கள், வானொலி மற்றும் தந்திகள் மூலம் செய்யப்பட வேண்டும்."

அழைப்பாணை அடங்கிய பதிவு அஞ்சல் உறை, ஓர் உறுப்பினர்க்குப் பட்டுவாடா செய்யப்படாமல் போய் விடுமாயின், அவ்வுறுப்பினரோடு தொடர்பு கொள்ளத்தக்க அவரின் தற்கால முகவரி சட்டமன்ற செயலகத்தவரால் கண்டுபிடிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு, அந்த முகவரிக்கு அழைப்பாணை அனுப்பப் பெறவேண்டும். [1]

நம் பாராளுமன்றம், மற்றும் சட்டமன்றங்களுக்கும், அவற்றின் உறுப்பினர்களுக்கும், அவற்றின் குழுக்களுக்கும் நம் அரசியல் சட்டம் வழங்கியிருக்கும் அதிகாரம், உரிமை சட்டக் „காப்புரிமை முறையை வகுத்துக்கூறும் அரசியல் சட்டத்தின் 105 மற்றும் 194 பிரிவுகளின் 3-ஆம் பகுதியில் இவற்றில் கூறப்படாத அதிகாரம், உரிமைகள் தேவைப்படும் போதெல்லாம், உரிய சட்டங்களை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். அதுவரை இங்கிலாந்து நாட்டுப் பாராளுமன்றத்து மக்களவை விதிகளே பின்பற்றப்பட வேண்டும் என வரை யறுத்து வைத்தார்கள், அரசியல் சட்டத்தை வகுத்துத் தந்த ஆன்றோர்கள்.

இந்தியப் பாராளுமன்ற நடைமுறைக்கு வழிகாட்டியாக மேற்கொள்ள வேண்டிய ஒன்று என அரசியல் நிர்ணய சபை ஆன்றோர்களால் மதிக்கப்பட்ட, இங்கிலாந்து நாட்டு பாராளுமன்றத்தின் வழிகாட்டி நூல், திருவாளர். எர்ஸ்கின் மே என்பார் எழுதிய "பாராளுமன்றத்தின் சட்டம், உரிமை கள், நடைமுறைகள், பழக்க வழக்கங்கள்" (Erskine Mays Treaitse on the Law, Privileges, proceedings and usage of parliament) என்ற நூலாகும்.

அந்நூல், பாராளுமன்ற நிகழ்ச்சிகளில் உறுப்பினர்கள் பங்கு கொள்ள வேண்டிய உரிமை குறித்துப் பின்வருமாறு கூறுகிறது.

"ஓர் உறுப்பினரை, அவையிலிருந்து வெளியேற்றும் ஆணை பிறப்பிப்பதற்கு முன்னர், அப்போது அவ்வுறுப்பினர் அவைக்கு வராதிருந்தால், அவைக்கு வந்து, அவர் இருக்கை யில் இருந்து, தன்னுடைய முறையிட்டினை எடுத்துக் கூற வாய்ப்பு அளிக்கும் வகையில் அவைக்கு வருமாறு உத்தரவு பிறப்பிப்பது வழக்கமாகும்.

அவையில் இருக்க வேண்டும் என ஒரு உறுப்பினர்க்கு ஆணை பிறப்பித்து விட்டால், அவையின் அந்த ஆணை அவருக்கு முறைப்படி கொண்டு சேர்க்கப்பட வேண்டும். சேர்க்கப்படவில்லையேல், அப்படி சேர்க்கப்படுவது இயலாத ஒன்று என்பதை உறுதிப்படுத்தும் சான்று கொடுக்கப்பட வேண்டும்.

அந்த உறுப்பினர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தால். அந்த உறுப்பினர் அவை நிகழ்ச்சியில் கலந்துகொள்ள விரும்பினால், தக்க பாதுகாப்போடு, அந்த உறுப்பினரை அவைக்குக் கொண்டு வருமாறு, சிறை அதிகாரிக்கு ஆணை யிடுவது நடைமுறை வழக்கமாகும்.

ஏமாற்று மோசடிக் குற்றத்திற்கான சதியில் ஈடுபட்டார் என்பதற்காக, லார்டு கோக்ரான் (Lord Cochrane) என்பவர் தண்டிக்கப் பெற்று சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அவர் பாராளுமன்ற விருப்பத்திற்கிணங்க, காவல் துணையோடு அவைக்குக் கொண்டுவர அனுமதிக்கப் பட்டார். அது மட்டுமல்லாமல், லார்டு கோக்ரன் அவையில் தன்னுடைய இருக்கையில் இருந்து தான் குற்றம் அற்றவர் என்று வாதிடவும் பேரவைத் தலைவர் விரும்பி அனுமதித் தார்.[3]

பொய்க் கையெழுத்திட்ட குற்றத்திற்காகத் தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்பட்ட பேக்கர் (Baker) என்ற நாடாளுமன்ற உறுப்பினர்க்கு, அவைக்கு வருவதற்கான அழைப்பு அனுப்பப் பெறவில்லை. ஆயினும் 'அவரை அவையிலிருந்து நீக்குவதற்கான தீர்மானம் அவையில் கொண்டுவர இருக்கிறது. இது குறித்து ஏதேனும் எழுத வேண்டுமாயின் பேரவைத் தலைவருக்கு முறையிட்டுக் கொள்ளலாம் என்ற கடிதம் ஒன்று உள்துறைச் செயலாளர் மூலம் அவருக்கு அனுப்பப்பட்டது. அது குறித்து, அவைத்

தலைவருக்கு எழுதிய கடிதம், அவரை நீக்கும் தீர்மானம் நிறைவேறுவதற்கு முன்னர் அவைக்கு அறிவிக்கப்பட்டது.[4]

பாராளுமன்ற உறுப்பினராகும் தகுதியை இழந்து விட்டவர் எனக் கருதப்பட்டவர்களுக்கும், அவர்களைப் பதவி இழக்கப் பண்ணும் தீர்மானம் அவையில் நிறைவேறுவதற்கு முன்னர், அவர்கள் அவைக்கு வரவும், வந்து தம் பதவி இழப்புத் தீர்மானம் நிறைவேற்றப்படக் கூடாது என்பதற்கான காரண காரியங்களைக் கூறி வாதிடவும் வாய்ப்பளிக்கும் இங்கிலாந்து நாட்டுப் பாராளுமன்றத்து உயர்ந்த மரபுதான் என்னே:

தண்டனை பெற்ற கைதியாகச் சிறையில் இருக்கும் ஒரு சட்டமன்ற உறுப்பினர்க்கு சட்டப் பேரவைச் செயலகத்தோடும், பேரவைத் தலைவரோடும், கடிதத் தொடர்பு கொள்ள உரிமை உண்டா என்ற கேள்வி எழுந்த போது, சென்னை உயர்நீதி மன்றம் பின்வரும் தீர்ப்பினை வழங்கியிருப்பதையும் திருவாளர் கவுல் அவர்கள் தம்முடைய நூலில் எடுத்துக் காட்டியுள்ளார்.

தண்டனை பெற்ற ஒரு கைதி, தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராக இருந்து, அதற்கான சம்பளமும் பெற்றுக் கொண்டு, சட்டப் பேரவை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்கான அழைப்பையும் பெற்றுக் கொண்டு வரும் வரை, அவர் சட்டப்பேரவை செயலகத்தோடு கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளலாம். பேரவைத் தலைவருக்கும் உரிமைக்குழு தலைவருக்கும் முறையீடு செய்து கொள்ளலாம். அக்கடிதப் போக்குவரத்தினை எந்த அதிகாரியும் தடுத்து நிறுத்தக் கூடாது, இந்த உரிமை 'அய்யோ பாவம்'' எனக் கருதிக் கொடுத்த நீதி அன்று, மாறாக பேரவையில் தொடர்ந்திருக்கும் உறுப்பினர் என்ற உரிமையில் அரசியல் சட்டம் 194(3)ன் கீழ் உரிமை பெற்ற நீதி ஆகும்.[5]

இத்தீர்ப்பினை எடுத்துக் காட்டியதோடு இன்றைய நிலையில் சென்னை உயர்நீதி மன்றத்தீர்ப்பே பின்பற்றத் தக்கதாகும் என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார்.[6]

மேலும் தண்டனை பெற்ற கைதியாகச் சிறையில் இருக்கும் ஓர் உறுப்பினர், சட்டப் பேரவை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் உரிமை மட்டும் அல்லாமல் சிறையில் இருந்தவாறே சட்டமன்ற உறுப்பினர் பணிகளை ஆற்றும் உரிமையும் உண்டு என்றும் கூறி. அதற்கான உயர்நீதி மன்றத் தீர்ப்பு ஒன்றையும் எடுத்துக் காட்டியுள்ளார் திருவாளர் எம். என். கவுல் அவர்கள்.[7]

சென்னை உயர்நீதி மன்றத்தின் இத்தீர்ப்பின் விளைவாக, தமிழ்நாடு அரசு, "சென்னைக் காவல் கைதிகள் விதிகள் 1950இல்" காவல் கைதிகளாகச் சிறையில் இருக்கும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தாம் உறுப்பினராக இருக்கும் அவைத் தலைவருக்கோ, அவைக் குழுவுக்கோ அனுப்பும் அனைத்துக் கடிதங்களையும் உறுப்பினர்களின் அவை உரிமைக்கு என்ற நடவடிக்கை அரசு எடுத்துக் கொள்ள வாய்ப்பு அளிக்கும் வகையில், அரசுக்கு உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும் எனச் சிறை அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பிக்கும் பிரிவைச் சேர்த்துச் கொண்டனர்" எனவும் அதே நூலில் கூறியுள்ளார்.[8]

சிறையில் தண்டனைக் கைதியாக இருக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கான எந்த உரிமையும் இல்லை என வாதிட, கீழே கொடுக்கப்பட்டுள்ள சென்னை உயர்நீதி மன்ற, உச்சநீதி மன்றத் தீர்ப்புகளைக் காட்டி வாதிடக் கூடும்.

இங்கிலாந்து பாராளுமன்றம் தன் உறுப்பினர்களுக்கு, தடுப்புக்காவலுக்கு எதிராகவோ, அன்றி சட்டமன்ற அதிகாரத்தின்படி அளிக்கப்படும் ஆணைக்கு எதிராகவோ

எந்தத் தனிச் சலுகையையும் வற்புறுத்தவில்லை. அப்படி ஒரு தனிச் சலுகை இல்லாத போது, அப்படிப்பட்ட எந்த தனிச் சலுகையையும் இங்கிலாந்து நாட்டில் வற்புறுத்தப் படாதபோது அதையொட்டி இந்தியாவிலும் அப்படிப்பட்ட தனிச்சலுகை எதுவும் தற்சமயம் இல்லை என்பது பெறப் படுகிறது.[0]

ஒரு சட்டமன்ற உறுப்பினர், எந்த ஒரு தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ், விசாரணை செய்யம்படாமலே கூட, கைது செய்யப்பட்டு, சிறையில் வைக்கப்பட்டிருப்பின், இப்போதுள்ள சட்டப்படி, அவர் சட்டமன்ற நடவடிக்கை களில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார் என்பதில் ஐயம் ஏதுமில்லை.[19]

இதைப் போன்ற நிலை குறித்து உச்சநீதி மன்றம் நாடாளுமன்ற உறுப்தனர்க்கு, நாடாளுமன்ற கூட்டத்தில் கலந்து கொள்ளவும், நடவடிக்கைகளில் பங்கேற்கவும், வாக்களிக்கவும் அளிக்கப்பட்டுள்ள உரிமைகள், ஆராய்ந்து நோக்கும் போது அரசியல் அமைப்பின்படி அளிக்கப்பட்ட உரிமைகள் அல்ல, அவை அடிப்படை உரிமைகள் அங்ல... கைது செய்து சிறையில் வைக்கப் பிறபிக்கப்பட்ட ஆணை யைப் பொருத்தமட்டில், நாடாளுமன்ற உறுப்பினர் எவரும் சாதாரண குடிமகனுக்குள்ள தகுதியை விட தனித் தகுதி எதையும் கோர முடியாது.[11]

ஆனால் இத்தீர்ப்புகள் எல்லாம், நாட்டு நலனுக்குக் கேடு விளைவதைத் தடுக்கும் எண்ணத்தோடு, தடுப்புக் காவல் சட்டம் (Preventive Detention Act) பொதுநல பராமரிப்புச் சட்டம் (Maintenance of Public order Act) ஆகியவற்றின் கீழ்க் கைது செய்யப்பட்டவர்கள் மீது வழங்கப்பட்ட தீர்ப்புகள் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

இதத தீர்ப்பில், அவ்வாறு தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் சட்டமன்ற உறுப்பினர்க்குச் சட்டமன்றம் செல்ல அனுமதி மறுக்கப்பட்டாலும் சட்டமன்ற கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான அழைப்புகள் அவருக்கும் அனுப்பப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

சென்னை உயர்நீதி மன்றத்தின் முன் வந்த ஒரு வழக்கில், பொதுநலம் பராமரிப்புச் சட்டத்தின் கீழ்க் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள, ஒரு சென்னை சட்டமன்ற உறுப்பினர், அவருக்கு சட்டமன்ற கூட்டத்தில் கலந்து கொள்ள அழைப்பாணை கிடைக்கப் பெற்ற போது, சென்னை சட்டமன்றக் கூட்டத்தில் கலந்து கொள்ள தனக்குள்ள உரிமைகளை நிலைநாட்டவும், செயல் படுத்தவும். ஆணை பிறப்பிக்க முறையிட்டார், என அத் தீர்ப்பில் கூறப்பட்டிருப்பது காண்க.[12]

ஆக, சிறையில் எந்தச் சட்டத்தின் கீழ் அடைக்கப் பட்டிருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சட்ட மன்றக் கூட்டத்திற்கான அழைப்பாணை அனுப்பப் பெற வேண்டியது இன்றியமையாதது. அது, அவ்வுறுப்பினரின் உரிமை. அது அனுப்பாமல் நடைபெறும் சட்டமன்றக் கூட்டம் சட்டப்படி செல்லும்படியாகாத திட்டமே ஆகும்.

**குடிமகனின் அடிப்படை உரிமையா?**
**சட்டமன்ற உரிமையா?**
**முதலிடம் எதற்கு? உச்சநீதி மன்றம் தந்த தீர்ப்பு!**

ஓர் உறுப்பினர்க்கு அழைப்பு ஆணை அனுப்பாமல் சட்டசபைக் கூட்டம் தொடங்கப்படுதல் கூடாது. அவ்வாறு நடைபெறும் சட்டசபைக் கூட்டம் செல்லாது, அக் கூட்டத்தில் நடைபெற்ற செயல் எதுவும் செல்லாது, என்ப

தைப் பாராளுமன்ற, சட்டமன்ற நடைமுறைகள் குறித்து வழங்கப்பட்ட பல்வேறு தீர்ப்புச் சான்றுகள் உறுதி செய்கின்றன என்பது உண்மை.

ஆனால், அக்காரணம் காட்டி, பத்து உறுப்பினர்களின் பதவி இழப்புத் தீர்மானம் நிறைவேற்றிய சட்ட்சபைக் கூட்டம் செல்லாது என நீதிமன்றம் செல்ல முடியுமா? அரசியல் சட்டம் 105 (2); 194 (2) பிரிவுகள், நாடாளுமன்ற, சட்டமன்ற செயல்பாடு குறித்து, யாரும், எந்த வழக்கு மன்றத்திலும் முறையீடு செய்யக் கூடாது என்றும், அரசியல் சட்டம் 122வது மற்றும் 212வது பிரிவுகள் பாராளுமன்றத்து எந்தச் செயல்பாடு குறித்தும் வழக்கு எதையும் எந்த நீதிமன்றமும் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்றும் தெளிவாகக் கூறியிருக்கும் போது இது குறித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கலாமா என்ற கேள்விகள் முறையானவையே.

ஆனால், பாராளுமன்ற, சட்டமன்ற நடவடிக்கை குறித்து விசாரிக்கும் உரிமை நீதிமன்றத்திற்கு இல்லை எனக் கூறும் நம் அரசியல் சட்டத்திலேயே, பாராளுமன்ற, சட்டமன்ற முறை கேடுகள் சில குறித்து நீதிமன்றம் விசாரிக்கலாம் என்பதற்கும், அவ்வகையில் விசாரிக்கப்பட்டுள்ளன என்பதற்கும், ஏராளமான முன் மாதிரிகளும் உள்ளன: அவற்றுள் சில :

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பேச்சுரிமை அரசியல் சட்டம் 105 (1) பிரிவிலும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கான பேச்சுரிமை அரசியல் சட்டம் 194 (1) பிரிவிலும் வழங்கப்பட்டிருப்பது போலவே. இந்தியக் குடிமகன் ஒவ்வொருவனுக்குமான பேச்சுரிமை, அரசியல் சட்டம் 18 (எ) பிரிவில் வழங்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் பேசப்பட்ட பேச்சு, நிகழ்ந்த செயல்பாடு குறித்து எந்த நீதி மன்றமும் விவாதிக்கக்

கூடாது என அரசியல் சட்டம் 105 (1) பிரிவும், அதே போல் சட்டமன்றத்தில் பேசப்பட்ட பேச்சு, நிகழ்ந்த செயல்பாடு குறித்து எந்த நீதிமன்றமும் விவாதிக்கக் கூடரது என அரசியல் சட்டம் 194 (2) பிரிவும் தடை விதித்து இருக்கின்றன.

ஆனால், அரசியல் சட்டம் 19 (எ) பிரிவின் கீழ் இந்தியக் குடிமகன் ஒருவனுக்கு வழங்கப்பட்ட உரிமையை நிலை நாட்டிக் கொள்ள உச்சநீதிமன்றம் செல்ல, குடிமகனுக்கு அரசியல் சட்டம் 32 பிரிவு உரிமை வழங்கியுள்ளது.

எம்.எஸ்.எம். சர்மா என்பவருக்கும், கிருஷ்ண சின்ஹா என்பவருக்கும் இடையிலான வழக்கு ஒன்றில் உச்சநீதி மன்றம், "அரசியல் சட்டம் 10 (3), மற்றும் 194 (3) பிரிவுகள் முறையே பாராளுமன்ற, சட்ட மன்றங்களால் இயற்றப் பட்ட சாதாரணச் சட்டங்கள் அல்ல; அவை அரசியல் அமைப்புச் சட்டங்களாகும்" என்றும், "அவை, அடிப்படை உரிமைகள் சம்பந்தப்பட்ட அரசியல் சட்டப் பிரிவுகளைப் போலவே முழுமை பெற்றனவாம்" என்றும் தீர்ப்பு வழங்கியுள்ளது.[13]

இதை, கவுல் அவர்களும், ஷக்தர் அவர்களும் "பாராளு மன்ற பழக்க வழக்கங்களும், நடைமுறைகளும்" என்ற தம்முடைய நூலின் 232ஆம் பக்கத்தில் எடுத்துக் காட்டியுள்ளனர்.

இந்த அரசியல் சட்டப் பின்னணியில் பாராளுமன்ற சட்டமன்ற உரிமைகளுக்கும், குடிமகனின் அடிப்படி உரிமை களுக்கும் மோதல் வரும்போது என்ன நிலைமை என்பதைப் பார்க்கவேண்டும்.

அதற்கான விளக்கத்தையும் உச்ச நீதி மன்றம் தன்னுடைய தீர்ப்பு ஒன்றில் வழங்கியுள்ளது. 1954-இல் கேசவசிங் என்பவர் சட்டமன்ற உறுப்பினர் ஒருவரைப்

பற்றிக் கூறிய கருத்து சட்டமன்றத்தையே அவமதித்ததாகக் கொண்டு உத்திரப்பிரதேச சட்டமன்றம் அவருக்கு ஏழு நாள் சிறைத் தண்டனை விதித்து சிறையில் அடைத்து விட்டது. கேசவசிங் அலகாபாத் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தார். நீதி மன்றம் வழக்கை ஏற்றுக் கொண்டு அவரை ஜாமீனில் விடுதலை செய்தது. இதற்கிடையில் அவர் ஆறுநாள் சிறை தண்டனை அனுபவித்தும் விட்டார்.

உத்திரபிரதேச சட்டசபை, அலகாபாத் உயர்நீதி மன்றத்தின் செயல் உரிமை மீறியதாகும், எனக்கொண்டு கேசவசிங், அவர் வழக்கறிஞர், வழக்கை ஏற்றுக் கொண்ட நீதிபதி ஆகியோரைக் கைது செய்து கொண்டு வருமாறு தீர்ப்பளித்தது; உயர்நீதி மன்றம் சட்ட மன்றத்தின் அச்செயற்பாட்டிற்குத் தடை விதித்து விட்டது. சட்ட மன்றத்திற்கும், நீதி மன்றத்திற்கும் மோதல் வரவே, குடியரசுத் தலைவர், அரசியல் சட்டம் 143வது பிரிவின் கீழ், இதில் உச்ச நீதிமன்றத்தின் கருத்தறிய உச்சநீதி மன்றத்திற்கு அனுப்பி வைத்தார்.

உயர்நீதிமன்றம், இந்திய அரசியல் அமைப்பு ஒரு குடிமகனுக்கு வழங்கியிருக்கும் அடிப்படை உரிமைக்கு ஊறு நேரும் போது, அவனுக்கு நீதிமன்றம் செல்ல அரசியல் அமைப்புச் சட்டம் அனுமதி அளித்துள்ளது. அடிப்படை உரிமைக்கும், சட்டமன்ற உரிமைக்கும் மோதல் வரும்போது, அடிப்படை உரிமையே முதல் இடம் பெறும், ஆகவே, கேசவசிங் வழக்கை ஏற்றுக் கொண்ட அலகாபாத் நீதி மன்றச் செயல் முறையானதே எனத் தீர்ப்பு வழங்கி விட்டது.[14]

உச்சநீதி மன்றத்து இத்தீர்ப்பை திருவாளர் கவுல் அவர்களும் திருவாளர் ஷக்தர் அவர்களும் தம்முடைய நூலின் 232வது பக்கத்தில் எடுத்துக் காட்டியுள்ளனர்.

இதே தீர்ப்பை, இந்திய நாடாளுமன்ற, சட்டமன்றப் பேரவைத் தலைவர்களின் 50வது ஆண்டு நிறைவு விழாவை யொட்டி வெளியிட்ட விழாமலரிலும் முன்னாள் மக்களவை துணைத்தலைவர் திரு ஜி. ஜி. ஸ்வெல் அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்.[15]

உச்ச நீதிமன்றக் கருத்து இதுவாகவே, அரசியல் சட்டத்தையே திருத்த வேண்டுமென்று உத்திரப்பிரதேசச் சட்டமன்றம் கருதியது. இதற்கிடையில் கேசவசிங் வழக்கை ஏற்று விசாரித்த அலகாபாத் உயர்நீதி மன்றம், சட்டமன்றத் தீர்ப்பு, அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு முரணானது அன்று. ஆகவே கொடுத்த தண்டனை முறையானதே எனத் தீர்ப்பளித்து விட்டது. இந்நிகழ்ச்சியால் உத்திரப்பிரதேச சட்டமன்றம் கேசவ சிங்கிற்கு வழங்கிய தண்டனை நிறைவேற்றப்பட்டது என்றாலும் — "இந்தியக் குடிமகனின் அடிப்படை உரிமைக்கும் சட்டமன்ற உரிமைக்கும் மோதல் வரும்போது, அடிப்படை உரிமைக்கே முதலிடம் உண்டு. அவ்வகையில் அடிப்படை உரிமை பாதிக்கப்பட்டவர், சட்டமன்றத்தை எதிர்த்து வழக்கு தொடுக்கலாம். உயர்நீதி மன்றம் அவ்வழக்கை ஏற்றுக் கொள்ளலாம் என உச்சநீதி மன்றம் வழங்கிய தீர்ப்பு மாற்றப்படாமல் அப்படியே நிற்கிறது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

இந்நிலையில், 1965 சனவரி 11, 12 தேதிகளில் பம்பாயில் கூடிய நாடாளுமன்ற, சட்டமன்ற சபாநாயகர்களின் மாநாடு, உத்திரப்பிரதேச சட்டமன்றத்திற்கும் அலகாபாத் உயர்நீதி மன்றத்திற்கும் இடையில் ஏற்பட்ட மோதல் குறித்து, உச்சநீதிமன்றம் தெரிவித்த கருத்தினை விரிவாக ஆராய்ந்து, அரசியல் சட்டம் 105, மற்றும் 194 பாராளு மன்றத்திற்கும், மாநில சட்ட மன்றங்களுக்கும் வழங்கியுள்ள உரிமைகள் எந்த வகையிலும் பாதிக்காத வகையில் அவ்விரு சட்டங்களும் திருத்தப்பட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தது.

அவ்வாறே, கீழ்வரும் தீர்மானத்தையும்நிறைவேற்றினர் "உச்சநீதி மன்றம் வழங்கிய கருத்து, பாராளுமன்ற சட்ட மன்றங்களைத் தரத்தில் குறைந்த நீதிமன்ற நிலைக்குத் தள்ளிவிட்டதன் பயனாக, பாராளுமன்றம் மற்றும் சட்ட மன்றங்கள் தங்கள் பணிகளைத் திறமையாகவும், நியாய மாகவும், கண்ணியமாகவும் நிறைவேற்றத் தடையாகிவிடும், ஆதலின்

பாராளுமன்ற, சட்ட மன்றங்களுக்கும் அவற்றின் உறுப்பினர்களுக்கும், அவற்றின் பல்வேறு குழுக்களுக்கும் உள்ள அதிகாரம், உரிமை, சட்டப் பாதுகாப்பு ஆகியன அரசியல் சட்டத்தின் எந்தப் பிரிவுக்கும் கீழ்ப்பட்டதாகவோ அவற்றால் நடவடிக்கை எடுக்கக் கூடியதாகவோ இருத்தல் கூடாது என்று, அரசியல் சட்டத்தை உருவாக்கியவரின் நோக்கம் ஐயத்திற்கு அப்பாற்பட்டது என்பதை நிலை நாட்டும் வகையில் அரசியல் சட்டம் 105 மற்றும் 194க்கும் பொருத்தமான திருத்தங்கள் கொண்டு வரவேண்டும் என இம்மாநாடு தீர்மானிக்கிறது.[16]

இந்தியப் பாராளுமன்ற, சட்டமன்றப் பேரவைத் தலைவர்கள் மாநாடும், உச்சநீதி மன்றத் தீர்ப்பின் விளைவாக பாராளுமன்ற, சட்டமன்ற உரிமைகள் பறிக்கப் படுவதைத் தடுக்க அரசியல் சட்டத்திற்குப் பொருத்தமான திருத்தங்களைக் கொண்டு வரவேண்டும் என்று தான்கருத்து தெரிவித்ததே ஒழிய அடிப்படை உரிமைக்கும், பாராளுமன்ற சட்டமன்ற உரிமைக்கும் மோதல் வரும் போது, அடிப்படை உரிமைக்கே முதல் இடம் என்றும், பாராளுமன்ற சட்டமன்ற உரிமைகள் அடிப்படை உரிமைக்கு விட்டுக் கொடுக்க வேண்டும் என்றும் அது நடவாத போது, அடிப்படை உரிமை பாதிக்கப் பெற்றவர் பாராளுமன்றம், சட்டமன்றங் களை எதிர்த்து நீதி மன்றம் செல்லும் உரிமை படைத்தவ ராவார் என்றும் கூறிய உச்சநீதிமன்றத் தீர்ப்பு தவறானது என்று தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உச்ச நீதிமன்றத்தின் இத்தீர்ப்பு குறித்து "பாராளு மன்றங்களும் நடைமுறைகளும் (Parliamentary Institutions and Procedures) என்ற தம்முடைய நூலில் தனியே விரிவாக விவாதித்த திரு. எம். என். கவுல் அவர்களும், "இதில் எழுப்பிய பிரச்சனை அவ்வாறே இருக்கிறது. பொருந்தும் வகையில் தீர்க்கப்படவில்லை: பாராளு மன்றத்தின் ஒரு செயல்பாட்டு மூலம், தெளிவாகச் சொல்வதானால், சம்பந்தப்பட்ட சட்டங்களைப் பொருந்தும் வகையில் திருத்தி, பாராளுமன்ற, சட்ட மன்றங்களை அவமதிப்போரை ஜாமீனில் விடும் அதிகாரம் நீதி மன்றங்களுக்கு இல்லை என்பதை ஐயத்திற்கு இடம் இல்லாத வகையில் செய்வது ஒன்றே, நேர்ந்து விட்ட தவறினைத் திருத்த இயலும்" என்றுதான் கூறியுள்ளார்.[17]

திரு. கவுல் அவர்களும், உச்சநீதிமன்றத் தீர்ப்பின் விளைவைத் தவிர்க்க, அரசியல் சட்டத்தின் சில பிரிவுகளுக்குத் திருத்தங்கள் கொண்டு வர வேண்டும் என்றுதான் கூறியுள்ளாரே ஒழிய; அடிப்படை உரிமைகள் பாதிக்கும்போது, பாதிக்கப்பட்டவர், பாராளுமன்ற, சட்டமன்றங்களை எதிர்த்து நீதி மன்றம் செல்லலாம்" என்ற உச்சநீதி மன்றத் தீர்ப்பு தவறானது எனச் சொல்லவில்லை என்பதும் குறிப்பித்தக்கது.

இந்தியப் பாராளுமன்றச் சபாநாயகர், பல்வேறு மாநிலங்களின் பேரவை, மேலவைத் தலைவர்கள் உள்ளிட்ட அனைத்துச் சபாநாயகர்களும் கூடி, தீர ஆராய்ந்து, பாராளுமன்ற, சட்டமன்ற உரிமைகள் பறிக்கப்படாத வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என 1965ஆம் ஆண்டிலேயே முடிவு செய்தனர் என்றாலும், அரசியல் சட்டம் அவ்வகையில் திருத்தப்படவில்லை.

**சட்டமன்ற கூட்டத்திற்கு அழைப்பாணை அனுப்பாததை எதிர்த்து ஒரு சட்டமன்ற உறுப்பினர் நீதிமன்றத்தில் வழக்குப் போட உரிமை உண்டா?**

பாராளுமன்ற, சட்டமன்ற நிகழ்ச்சிகளில் நீதி மன்றங்கள் தலையிடக் கூடாது என்ற உணர்வு பேரவைத் தலைவர்களிடையே இவ்வளவு ஆழமாகப் பதிந்திருக்கும் நிலையிலும், 1969 ஆம் ஆண்டு மற்றுமொரு நிகழ்ச்சி நிகழ்ந்து விட்டது.

பஞ்சாப் மாநிலத்துச் சட்டப் பேரவை 1968—69 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையினை விவாதித்து அனுமதிப்பதற்கு முன்பாகவே. சபாநாயகர், சட்டப் பேரவையை இரண்டு மாதங்களுக்கு ஒத்தி வைத்து விட்டார். சட்டமன்றம் செயலற்றதாகி விட்டது. வேறு வழியின்றி சபாநாயகர் செயலை எதிர்த்து, அரசு மூலமாக சட்டமன்றமே உச்சநீதி மன்றத்திற்குச் சென்றது. உச்சநீதி மன்றம்—

''பேரவையை மார்ச்சு 31-க்குப் பிறகு ஒத்தி வைத்த தன் மூலம் அரசின் நிதித்துறை செயலற்றதாகி விட்டது. மக்களாட்சி முறையும் சிதறுண்டு போய் விட்டது. ஆகவே சட்டப் பேரவை செயல்படா வகையில் பேரவை ஒத்தி வைக்கப்படல் கூடாது'' என்று தீர்ப்பை வழங்கி விட்டது.[18]

சட்டமன்ற நிகழ்ச்சிகளில், நீதி மன்றங்கள் தலையிடக் கூடாது என்பதில் தீவிரம் காட்டும் சட்டமன்றமே தன் குறைதீர, அரசு மூலம் உச்சநீதி மன்றத்திற்குச் செல்ல நேர்ந்தது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்ற, சட்டமன்ற நிகழ்ச்சிகளில், உயர்நீதி மன்றங்களும், உச்சநீதி மன்றமும் தலையிட்டுத் தீர்ப்பு வழங்கியதற்கான சான்றுகள் மேலும் உள்ளன.

1969-ஆம் ஆண்டு பூரி கோவர்த்தன பீடம் சங்கராச்சாரியாரின் ஒரு கருத்து, செயல் குறித்து, நாடாளு மன்றத்தில் கொண்டு வரப்பட்ட ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது அவையில் கூறப்பட்ட சொற்களால் மனம் புண்பட்ட, அம்மடத்தைச் சேர்ந்த தேஜ்கிரான் ஜெயின் என்பவர் மக்களவை சபாநாயகர் மீது டெல்லி உயர்நீதி மன்றத்தில் வழக்கு கொடுத்தார். நீதி மன்றம் வழக்கை ஏற்றுக் கொண்டு, சபாநாயகர். உள்துறை அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு விளக்கம் கேட்டுக் கடிதம் அனுப்பியது. கடிதம் மறுக்கப் பட்டாலும், வழக்கின் முடிவை எதிர்நோக்கி நாடாளு மன்றம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதற்கிடையே, டெல்லி உயர்நீதி மன்றம் வழக்கைத் தள்ளுபடி செய்து விட்டது என்றாலும், உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடுக்க அனுமதித்தது. வழக்கை ஏற்றுக் கொண்ட உச்சநீதி மன்றமும் பாராளுமன்ற சபா நாயகர் உள்ளிட்ட மூவருக்கும் விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பியது. பாராளுமன்ற சபாநாயகர் கடிதத்தைப் பெற மறுத்து விட்டார். இதற்கிடையில் உச்சநீதி மன்றமும் வழக்கைத் தள்ளுபடி செய்து விட்டது.

பாராளுமன்றம், ஜெயினின் இச்செயல் உரிமை மீறியதாகும் எனக் கருதி, உரிமைக் குழுவுக்கு அனுப்பியது. உரிமைக் குழு, இதுதான் முதன்முறை என்பதாலும், நீதி மன்றங்கள் வழக்கை ஏற்றுக் கொண்டிருந்தாலும், இறுதியில் பாராளுமன்ற நிகழ்ச்சியில் தலையிட உரிமை இல்லை என தெரிவித்து விட்டமையாலும், இத்துடன் விட்டு விடலாம். மேற்கொண்டு எந்தவித நடவடிக்கையும் தேவையில்லை எனக் கூறி முடித்து விட்டது.

இந்நிகழ்ச்சி குறித்து 'பேரவைத் தலைவர்கள் மாநாட்டு' மலரில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.[19]

பாராளுமன்றம் தன்னை, உயர்நீதி மன்றத்திற்குக் கொண்டு சென்ற தேற்கிராஸ் ஜெயின் மீதுதான் உரிமைப் பிரச்சனை எழுப்பி உரிமைக்குழுவிற்கு அனுப்பிவைத்ததே அல்லாது, சபாநாயகரையும், மன்ற உறுப்பினர்களையும் வரப்பணிந்து கடிதம் அனுப்பிய டெல்லி உயர்நீதி மன்றத்தின் மீதோ, உச்சநீதிமன்றத்தின் மீதோ எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்றமோ, சட்டமன்றமோ தமக்கு வரையறுத்துக்கொடுத்துள்ள உரிமைகளை மீறிச் செயல்படும் போது, அவற்றின் அச்செயல் குறித்து நீதிமன்றங்களுக்குச் செல்லலாம் என்பது இதனால் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அதேபோல் 1971-ஆம் ஆண்டு கோலக்நாத் என்பவர் பஞ்சாப் மாநில அரசு மீது தொடுத்த வழக்கில் உச்சநீதி மன்றம் 11 நடுவர்களைக் கொண்ட ஒரு தனி பெஞ்சாக (Special Bench) அமர்ந்து ஆராய்ந்து ஆறு நடுவர்கள் (பெரும்பான்மை) "அரசியல் அமைப்புச் சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை, திருத்தங்கள் மூலம் அறவே நீக்கவோ, உரிமைகளைக் குறைக்கவோ (to take away or abridge) மக்களவைக்கு அதிகாரம் இல்லை" என்று தெளிவான தீர்ப்பினை வழங்கி விட்டது.[20]

உச்சநீதிமன்றம் இத்தீர்ப்பு வழங்கியதற்குக் காட்டிய பல்வேறு காரணங்களில் தலையாயன இரண்டு. ஒன்று அரசியல் அமைப்புச் சட்டம் 3-ஆம் பகுதியில் தனக்கு வழங்கப்பட்ட அடிப்படை உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ள உச்சநீதிமன்றம் செல்லும் உரிமையை வழங்கும் அரசியல் அமைப்புச் சட்டம் 32-வது பிரிவு தெளிவாக உள்ளது என்பது. அந்த உரிமைகளை அறவே நீக்கவோ, குறைக்கவோ சட்டங்களை அரசு இயற்ற முடியாது என்பது.[21]

இரண்டாவது காரணம், அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்படவேண்டுமாயின், ,பாராளுமன்றம் மற்றொரு அரசியல் நிர்ணய சபையை அமைக்க சட்டமியற்றியாக வேண்டும் என்பது.[22]

உச்சநீதி மன்ற இம்முடிவுக்கு மாறான கருத்தைத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர்கள், "மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்களாக 768 உறுப்பினர்களைக் கொண்ட இப்போதைய பாராளுமன்றத்தில், மக்களவை உறுப்பினர்கள் 525 பேர் மக்களால் நேரடியாகத் தேர்ந் தெடுக்கப்பட்டவர்கள். ஆகவே, அவர்கள், மறைமுகத் தேர்தல் வழி, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் அமைப்பு நிர்ணயசபை உறுப்பினர்களாகிய 296 பேரைக் காட்டிலும் மிக அதிகமாக பிரதிநிதித்துவம் வாய்ந்தவர்கள் ஆவர்" என்று மட்டுமே கூறமுடிந்தது.[23]

ஆனால் அடிப்படை உரிமைகளில் கைவைக்கும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு இல்லை. கைவைத்தால், பாதிக்கப்பட்டவர், பாராளுமன்றத்தை எதிர்த்து, உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடுக்கலாம் என்ற உச்ச நீதி மன்றத் தீர்ப்பு குறித்து மறுத்து ஒரு சொல்லும் சொல்லவில்லை.

அடிப்படை உரிமைக்கும், பாராளுமன்ற உரிமைக்கும் மோதல் வரும்போது, அடிப்படை உரிமைக்கே முதல் இடம், அடிப்படை உரிமை பாதிக்கப்படும்போது, பாதிக்கப்பட்டது, பாராளுமன்ற சட்டமன்ற உரிமைகளால் என்றாலும், அம் மன்றங்களை எதிர்த்து, அடிப்படை உரிமை பாதிக்கப் பட்டவர் நீதி மன்றங்கள் செல்லலாம் என்ற உரிமை 1971 ஆம் ஆண்டு வரை மறுக்கப்படவில்லை.

1971-ல் பொதுத்தேர்தல் வந்தது. அரசியல் சட்டத்தை யும் திருத்துவதற்கு தேவைப்படும் பெரும்பான்மையோடு காங்கிரஸ் வெற்றி பெற்றது. அதன் பயனாய் தன் அரசியல்

குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ள பல்வேறு திருத்த களை அரசியல் சட்டத்தில் கொண்டுவந்து நிறைவேற்றிற்று அவ்வாறு திருத்தப்பட்ட திருத்தங்களில் ஒன்றான 24—வது திருத்தம், அடிப்படை உரிமை உட்பட அரசியல் அமைப்புச் சட்டத்தின் எந்தப் பகுதியையும் திருத்தும் உரிமையைப் பாராளுமன்றத்திற்கு அளித்தது.[24]

தன் உரிமையை நிலைநிறுத்திக்கொள்ள பாதிக்கப் பட்டவர் உச்சநீதி மன்றம் செல்லலாம் என்ற உரிமையை வழங்கும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் 32 வது பிரிவு உட்பட உள்ள, அடிப்படை உரிமை பற்றிய பிரிவுகளையும் திருத்தும் உரிமையை பாராளுமன்றம் 24வது திருத்தம் மூலம் பெற்றுக்கொண்டிருக்கும்போது, ஓர் உறுப்பினர்க்கு, சட்டப் பேரவைக் கூட்டத்திற்கான அழைப்பாணை அனுப்பாமலே சட்டப்பேரவை கூட்டப்படுமாயின், இவ்வாறு கூட்டப்பட்ட சட்டப் பேரவைக் கூட்டம் செல்லாது என நீதி மன்றம் செல்ல முடியுமா? செல்வதற்கு அரசியல் சட்டத்தில் வகையிருக்கிறதா என்பதற்கான விளக்கம் பின்னர் தரப்படும்.

பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அவை நடவடிக்கையில் கூறிய சொற்கள், செயல்பாடுகள் குறித்து எந்த நீதி மன்றத்திற்கும் பதில் சொல்லத் தேவையில்லை. என, முறையே அரசியல் சட்டத்தின் 105, மற்றும் 194வது பிரிவுகள் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அவற்றின் அதிகாரிகளுக்கும் பாதுகாப்பும், பாராளுமன்ற, சட்டமன்ற நடைமுறைகளில் நிகழும் முறைகேடுகள் குறித்து விசாரிக்க எந்த நீதி மன்றத்திற்கும் அதிகாரம் இல்லை என அரசியல் சட்டத்தின் 122 மற்றும் 212வது பிரிவுகள் நீதி மன்றங்களுக்குத் தடையும் விதித்திருக்கும் நிலையில் ஒரு சட்டமன்ற உறுப்பினர்க்குச் சட்டமன்றக் கூட்ட அழைப் பாணை அனுப்பாமல் கூட்டப்படும் சட்டமன்றக் கூட்டம்

செல்லாது என்ற காரணத்தை முன் வைத்து, நீதிமன்றம் செல்லும் உரிமை அந்த உறுப்பினர்க்கு உண்டா? அவர் வழக்கை ஏற்று விசாரிக்கும் உரிமை நீதி மன்றத்திற்கு உண்டா என்ற கேள்வி, நியாயமான கேள்வியே.

இந்தக் கேள்விக்கு விடைகாண, நாடாளுமன்ற, சட்ட மன்றங்களுக்கு அந்த உரிமையையும், நீதி மன்றங்களுக்கு அந்தத் தடையையும் விதிக்கும் சட்டப் பிரிவுகளில் ஆளப் பட்டிருக்கும் சில சொற்றொடர்கள், அச்சொற்றொடர் களுக்கான பொருள் விளக்கங்களைக் காண்பதும், ஓர் உறுப்பினர்க்குக் கூட்டத்திற்கான அழைப்பாணை அனுப் பாதது அச்சொற்றொடர்கள் உணர்த்தும் பொருள் வளை யத்துக்குள் வருமா என்பதை ஆராய்வதும் இன்றியமையா தனவாம்.

பாராளுமன்றத்திற்கும், அதன் உறுப்பினர்களுக்கும், அதன் அதிகாரிகளுக்குமான அதிகாரம், உரிமை, சட்டப் பாதுகாப்பை வலியுறுத்தும் அரசியல் சட்டத்தின் 105 மற்றும் 105 (2) பிரிவுகளும், சட்டமன்றத்திற்கும், அதன் உறுப்பினர்களுக்கும், அதன் அதிகாரிகளுக்குமான அதிகாரம் உரிமை, சட்டப் பாதுகாப்பை வலியுறுத்தும் அரசியல் சட்டத்தின் 194 மற்றும் 194 (2) பிரிவுகளும் முறையே பாராளுமன்ற நடவடிக்கை முறைகளை, சட்டமன்ற நட வடிக்கை முறைகளை யொட்டி உறுப்பினர்களுக்குப் பேச்சுரிமை வழங்கப்படுகிறது என்றும் பாராளுமன்றத் திலோ, சட்டமன்றக் குழுக்களிலோ, பேசிய பேச்சு, அளித்த வாக்குரிமை போலும் பாராளுமன்ற, சட்டமன்ற நடை முறைகள் குறித்து எந்த நீதிமன்ற நடவடிக்கைகளுக்கும் அவர்கள் கட்டுப்பட்டுள்ளவர்கள் அல்லர் என்றுதான் கூறி யுள்ளன.

பிரிவு 105 :

பாராளுமன்றம், அதன் உறுப்பினர்கள், அதன் குழுக்களின் அதிகாரம், உரிமை, சட்டப் பாதுகாப்பு பற்றி கூறுவது.

1. பாராளு மன்ற நடைமுறைகளை (Pro cedure of Parliament) நெறிப்படுத்தும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் விதிகள், ஆணைகளுக்கு உட்பட்டு பாராளு மன்றத்தில் பேச்சுரிமை வலியுறுத்தப்படுகிறது.

2. அதன்படி, பாராளு மன்றத்திலோ, அதன் குழுக்களிலோ, பேசிய பேச்சு, அளித்த வாக்குரிமை குறித்து எந்தப் பாராளு மன்ற உறுப்பினரும் எந்த நீதி மன்ற நடவடிக்கைகளுக்கும் கட்டுப்பட்டவர் அல்லர்.

பிரிவு 194 :

சட்ட மன்றம், அதன் உறுப்பினர்கள், அதன் குழுக்களின் அதிகாரம், உரிமை, சட்டப் பாதுகாப்பு பற்றி கூறுவது.

1. மாநில சட்ட மன்ற நடைமுறைகளை (Procedure of the Legislature) நெறிப்படுத்தும் அரசியல் அமைப்புச சட்டத்தின் விதிகள், ஆணைகளுக்கு உட்பட்டு மாநில சட்ட மன்றங்களில் பேச்சுரிமை வலியுறுத்தப்பட்டுள்ளது.

2. அதன்படி மாநில சட்ட மன்றங்களிலோ, அதன் குழுக்களிலோ பேசியபேச்சு, அளித்த வாக்குரிமை குறித்து எந்த சட்ட மன்ற உறுப்பினரும் எந்த நீதி மன்ற நடவடிக்கைகளுக்கும் கட்டுப்பட்டவர் அல்லர்.

பிரிவு 122 :

பாராளு மன்ற நடவடிக்கைகளைக் (Proceedings of Parliament) குறித்து எந்த நீதி மன்றமும் விசாரணை மேற்கொள்ளக் கூடாது.

1. நடைமுறைகளைப் பின்பற்றுவதில் முறை கேடுகள் நடந்துள்ளன என்ற குற்றச்சாட்டின் பேரில், பாராளு மன்றத்தின் எந்த நடவடிக்கையையும் செல்லுமா, செல்லாதா என்ற கேள்வி எழுப்பப்படக் கூடாது;

2. பாராளு மன்ற நடைமுறைகளை நெறிப் படுத்த அல்லது, பாராளு மன்ற நடவடிக்கைகளை செயல்படுத்த அல்லது பாராளு மன்றந்தில் சட்டம் ஒழுங்கை பராமரிக்க, அரசியலமைப்புச் சட்டத்தின் படி உரிமை அளிக்கப்பட்ட, அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர், அல்லது பாராளுமன்ற அதிகாரி, தம் அதிகாரத்தை செயல்படுத்தியதை யொட்டி எந்த நீதி மன்றத்தின் நடவடிக்கைகளுக்கும் கட்டுப்பட்டவர் அல்லர்.

பிரிவு : 212

சட்டமன்றங்களின் நடவடிக்கைகளைக் குறித்து (Proceedings of the Legislature) எந்த நீதிமன்றமும் விசாரணை மேற்கொள்ளக்கூடாது.

1. நடைமுறைகளைப் பின்பற்றுவதில் முறைகேடு கள் நடந்துள்ளன என்ற குற்றச் சாட்டின் பேரில், எந்த மாநில சட்டமன்றத்தின் எந்த நடவடிக்கையையும் (Proceedings in the legislature) செல்லுமா செல்லாதா என்ற கேள்வி எழுப்பக் கூடாது.

2. மாநில் சட்டமன்ற நடைமுறைகளை நெறிப் படுத்த அல்லது சட்டமன்ற நடவடிக்கைகளைச் செயல் படுத்த அல்லது, சட்டமன்றத்தில் சட்டம் ஒழுங்கை பராமரிக்க அரசியலமைப்புச் சட்டத்தின் படி உரிமை அளிக்கப்பட்ட அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் அல்லது சட்டமன்ற அதிகாரி, தம் அதிகாரத்தை செயல்படுத்தியதையொட்டி எந்த நீதிமன்றத்தின் நடவடிக்கைகளுக்கும் கட்டுப்பட்டவர் அல்லர்.

ஆக, இப்பிரிவுகள் அனைத்திலும். முறையே பாராளுமன்ற நடவடிக்கைமுறை (Procedure of parliament proceedings of parliament; proceedings in parliament) சட்டமன்ற நடவடிக்கை முறை (Proeedure of the legislature; proceedings of the legisture; proceedings in the legislature) என்ற தொடர்களே திரும்ப திரும்ப ஆளப் பட்டிருப்பது குறிப்பிடதக்கது.

உரிமை பறிக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர உரிமையுண்டு.

பாராளுமன்றம் சட்டமன்றம் குறித்த அரசியல் சட்டப் பிரிவுகளில் காணும் இடம் எல்லாம், அவை நடவடிக்கை (Proceedings of the House) என்ற தொடர் ஆளப்பட்டிருந் தாலும் அத்தொடருக்கானத் தெளிவான விளக்கத்தை அரசியல் அமைப்புச் சட்டத்தின் எந்தப் பகுதியும் விளக்கவில்லை.

நம் அரசியல் அமைப்புச்சட்டத்தில் கூறப்படாத, விளக்கம் பெற முடியாதனவற்றிற்கெல்லாம், வழிகாட்டி நூல் இங்கிலாந்து நாட்டுப் பாராளுமன்றம் பின்பற்றும் நூலாம் என நம் அரசியல் சட்டத்தாலேயே ஏற்றுக் கொள்ளப்பட்ட, பெருமைக்குரிய எர்ஸ்கின் மே Eriskine

May) என்பார் எழுதிய அந்த நூலும் 'பாராளுமன்றத்து நடைமுறைகள்' (Proceedings in Parliamint) என்ற தொடருக்கு இதுதான் தெளிவான பொருள் என்று திட்ட வட்டமாகக் கூறவில்லை அது. கூறும் விளக்கம் வருமாறு.

"பாராளுமன்றத்திற்கே உரிய சட்ட நுணுக்கச்சொல் லாம் "நடைமுறைகள்" (Proceedings) என்பதற்கான மூலப்பொருள் (குறைந்தது 17—வது நூற்றாண்டு வரை அது கொண்டிருந்த பொருள்), முறையான சில செயல் பாடுகள், வழக்கமாகப் பாராளுமன்றம் தன்னுடைய ஒருங் கிணைந்த கூட்டுத்தன்மையில் எடுக்கும் முடிவு என்பதே ஆம். இப்பொருள் இயற்கையாகவே பாராளுமன்றம் எடுக்கும் செயல்பாடுகளுக்கு ஆதாரமான அவை அலுவல் களின் முறைகளையும், பாராளுமன்றத்து மொத்த நடை முறையினையும், அவற்றுள்ளும் தலையாயதான, இறுதியில் எடுக்கும் முடிவினுக்கு வழிவகுக்கும் அவையின் வாதத்தை தையும் குறிக்கும் வகையில் விரிவாக்கப்பட்டது."[25]

பாராளுமன்ற நடைமுறைகளில் திளைத்து எழுந்து முதிர்ந்த அறிவு பெற்றவர்களாகிய திருவாளர்கள் கவுல், ஷக்தர் ஆகிய இவர்களாலும், 'பாராளுமன்ற நடைமுறை' (proceedings in parliament) என்றத் தொடருக்குத் தெளிவான பொருளைக் கூற முடியவில்லை.

"பாராளுமன்ற பழக்கங்களும் நடைமுறைகளும்" என்ற தம் நூலில் ஒரு பத்தியின் தொடக்கத்தில்" பாராளுமன்றத்தின் நடைமுறைகள் (proceedings in-parliament) என்ற தொடருக்கோ, "பாராளுமன்றத்தில் சொல்லப்பட்ட எந்தப்பொருளும்" (Anything said in-parliament) என்ற தொடருக்கோ சட்டங்களை ஆராய்ந்து முடிவு கூறும் நீதிமன்றங்களால் தெளிவான பொருள் உணர்த்தப்படவில்லை" என்று முதல் வாக்கியத்தை

முடித்துவிட்டு அடுத்து எர்ஸ்கின்மே அவர்கள் கூறியதாக மேலே எடுத்துக்காட்டிய பகுதியை, எழுத்துப்பிசகாமல் அப்படியே எடுத்துக்கூறி முடித்துவிட்டு, அடுத்த பத்தியில் பின்வருமாறு கூறியுள்ளார்கள்.

"பாராளுமன்றத்தின் நடைமுறைகள்" என்ற தொடர் கேள்வி கேட்பது, அக்கேள்வியை எழுத்து மூலம் அறிக்கையாகக் கொடுப்பது ஆகிய இரண்டையும் உள்ளடக்கியதாம். அவையின் உறுப்பினர் என்ற முறையில், தன்னுடைய பாராளுமன்ற அலுவல்களை, இரு அவைகளிலும் ஆற்றும் வகையில் சொல்லிய அனைத்துச் சொல்லையும் ஆற்றிய செயல்களையும் போலவே, இரு அவைகளின் குழுக்களிலும், ஓர் உறுப்பினர் என்ற உரிமையில் தன் கடமையை நிறைவேற்றும் வகையில், கூறிய ஒவ்வொரு சொல்லையும், ஆற்றிய ஒவ்வொரு செயலையும் உள்ளடக்கியதாம் என்று முடித்துள்ளனர்.

அதோடு நில்லாமல் அடுத்து. "ஒரிசா உயர்நீதி மன்றம், "பாராளுமன்றத்தில் நடைமுறைகள்" என்ற தொடர், பாராளுமன்றம் உண்மையில் கூடி இருக்கும் காலத்து அவை நடவடிக்கைகளை மட்டும் குறிப்பிடும் நிலையில் வரையறுத்து வைக்கப்பட்டுவிட வில்லை. கேள்விகளுக்கான அறிக்கைகளைக் கொடுப்பது. தீர்மானங்களுக்கான அறிக்கைகளைக் கொடுப்பது போலும், சில பூர்வாங்க நடவடிக்கைகளையும் உள்ளடக்கியதாம். கூறிய அத்தொடரின் அச்சொல்லாட்சி நிலையிலிருந்து, உய்த்துணரக் கிடக்கும் இப்பொருளாட்சி. ஒரு கேள்விக்கான அறிவிக்கை கொடுக்கப்பட்டுப் பேரவைத் தலைவர் அதை ஏற்பதோ மறுப்பதோ செய்யும் போது, அக்கேள்வி, உண்மையில் நாடாளுமன்றக் கூட்டத் தொடரிலேயே கேட்கப்பட்ட நிலைக்கு ஏற்ப ஏற்கப்பட்டது அல்லது மறுக்கப்பட்டது என்ற கருத்தோட்டத்தில் பெறப்பட்டதாகும்" எனத் தெரிவித்த கருத்தையும் எடுத்துக்காட்டியுள்ளார்.[23]

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகள், தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் அச்சிடப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவ்விரண்டில் ஆங்கில வெளியீட்டில் எங்கெல்லாம் Proceedings of the Assembly'' என்ற தொடர் இடம் பெற்றுள்ளதோ. தமிழ் வெளியீட்டில் அங்கெல்லாம் அத்தொடரின் தமிழ் வடிவமாக ''பேரவை நடவடிக்கைகள்'' என்ற தொடரே இடம் பெற்றுள்ளது, 30 (5); 46 (5); 47 (ஆ) ஆகிய விதிகளைஒப்பிட்டுக் காண்க.

ஆக, ''Proceedings of the House'' என்ற தொடர் பேரவைத் தலைவர் அவைக்கு வருதல் முதல் அவை ஒத்தி வைக்கும் வரையான காலத்தில், அவையில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும், பேரவை நியமிக்கும் ஆய்வுக்குழு. பொதுக்கணக்குக் குழு,மதிப்பூட்டுக் குழு போலும் பல்வேறு குழுக்கள் கூடியிருக்கும் போது நிகழும் நிகழ்ச்சிகளையும் மட்டுமே குறிக்கும் என்பது ஐயத்திற்கு இடம் இன்றி உறுதியாகிறது.

பேரவை அலுவல்களாகக் கொள்ளப்படுவன, யாவை?

1. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொள்ளுதல் (4) (1).
   பதிவேட்டில் கையெழுத்து இடுதல் (5)

2. பேரவைத் தலைவர் (7), துணைத் தலைவர் (8) தேர்தல்கள் மாற்றுத் தலைவர் பட்டியல் தருதல் (9)

3. ஆளுநர் உரையும், அதன்மீது விவாதமும் (11, 12)

4. தனியார் அலுவல்கள் :

   அ. வினாவிடை 32

ஆ. கவன ஈர்ப்புத் தீர்மானம் (55)

இ. ஒத்திவைப்புத் தீர்மானம் (56)

ஈ. அரை மணி நேர விவாதம் (54)

உ. குறுகிய காலவிவாதம் (74)

ஊ. பொதுநலன் குறித்த நாள் குறிப்பிடாத தீர்மானம் 78.

எ. பேரவைத் தலைவர், துணைத் தலைவர் பதவி விலகல் தீர்மானம் (68)

ஏ. அமைச்சரவை மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் (72)

ஐ. தனித் தீர்மானம் (198)

ஒ. வெட்டுத் தீர்மானம் (211)

ஓ. தன்னிலை விளக்கம்

5. அரசு அலுவல்கள் :

அ, நிதிநிலை அறிக்கை அளித்தலும் (207), அதன் மீது பொது விவாதமும் (209)

ஆ. மானியக் கோரிக்கையும் விவாதமும் (211)

இ. கூடுதல் நிதிக்கான மானியம் கோரல் (213)

ஈ. துணை மானியக் கோரிக்கை (215)

உ. நிதி ஒதுக்க சட்ட முன் வடிவு விவாதம் (214)

ஊ, பல்வேறு சட்டமுன் வடிவுகளின் விவாதம்

6. பொதுவான அலுவல்கள்

அ. ஒழுங்குப் பிரச்சனை எழுப்பல் (117)

ஆ. உரிமைப் பிரச்சனை எழுப்பல் (245)

இ. விளக்கம் கேட்டல் (89)

ஈ. அறிக்கை அளித்தல் (90)

7. பேரவைத் தலைவர் அலுவல்கள்.

அ. வினாக்கள், தீர்மானங்கள், சட்டமுன் வடிவுகளை அனுமதிப்பதும், மறுப்பதும்

ஆ. நடவடிக்கை குறிப்பிலிருந்து நீக்குதல்

இ. உறுப்பினரை வெளியேற்றுதல்

ஈ. உறுப்பினரின் பெயரிட்டுக் குறிப்பிடுதல்

உ. குழுக்கள் சிலவற்றை நியமித்தல்

ஊ. வாக்கெடுப்பு

எ, பேரவையை நாள் குறிப்பிட்டு ஒத்தி வைத்தல்.

பேரவை அலுவல்கள் என அரசியல் சட்டத்திலும், பேரவை விதிகளிலும் கூறப்பட்டிருப்பன இவைதாம், சட்டப் பேரவை விதி 3-ன் படி, சட்டசபைக் கூட்டத்திற்கான அழைப்பாணையினை உறுப்பினர்களுக்கு அனுப்ப வேண்டிய செயலாளர் செயல், பேரவை அலுவல்கள் பட்டியலில் அடங்காது. அழைப்பாணை அனுப்பப்பட வேண்டும் எனக் கேட்பது, உறுப்பினர்களின் பாராளுமன்ற உரிமை.

அரசியல் சட்டம் மூன்றாம் பகுதியில் வழங்கப்பட்டிருக்கும் அடிப்படை உரிமை என்பதன்கீழ் இது அடங்காது. இந்தியக் குடிமகன் என்ற உரிமைபெற்ற அனைவர்க்கும் வழங்கப்பட்ட உரிமை, அடிப்படை உரிமை.

ஆனால், தமிழ்நாடு சட்டமன்றவிதிகளில் 3-வது விதியின்படி, சட்டசபைக் கூட்டத்திற்கான அழைப்பாணை உறுப்பினர்க்கு அனுப்பப்பெற வேண்டும் என்பது, அரசியல்

அமைப்புச்சட்டம் 105 மற்றும். 194-பிரிவுகளின் கீழ். உறுப்பினர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டிருக்கும் பாராளுமன்ற உரிமை (Parliamentary privilege) ஆகும்.

அடிப்படை உரிமை வழங்கும் பிரிவுகள் உட்பட உள்ள அரசியல் அமைப்புச் சட்டத்தின் எந்தப் பிரிவுகளையும் திருத்தலாம் என்ற அரசியல் அமைப்புச் சட்டத்தின் 24-வது திருத்தம், அரசியல் அமைப்புச்சட்டம் 32-வது பிரிவின் கீழ், தன் அடிப்படை உரிமையை நிலைநாட்டிக்கொள்ள உச்சநீதி மன்றம் செல்லலாம் என ஒரு குடிமகனுக்கு வழங்கியிருக்கும் உரிமையை வேண்டுமானால் செல்லத் தக்கதல்லதாக ஆக்கியிருக்கலாம்.

ஆனால், அரசியல் அமைப்புச் சட்டம் 105 மற்றும் 194 பிரிவுகள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமே வழங்கியிருக்கும் பாராளுமன்ற அதிகாரம், உரிமை, சட்டப் பாதுகாப்பு (Power Privilege and immunities of Poaliament and its members) ஆகியவற்றைச் செயலற்ற தாக்கும் உரிமை, அந்த 24-வது திருத்தத்திற்கு வழங்கப்பட வில்லை.

அரசியல் சட்டம் வழங்கியிருக்கும் பாராளுமன்ற உரிமையைப் பறிக்கும் எந்தத் திருத்தத்தையும் அரசியல் அமைப்புச் சட்டம் அனுமதிக்காது. ஆகவே, தன்னுடைய பாராளுமன்ற உரிமைக்கு ஊறு நேர்ந்த போது, அதைப் போக்கிக் கொள்ள, தன் பாராளுமன்ற உரிமையை நிலை பெறச் செய்து கொள்ள, ஒரு சட்டமன்ற உறுப்பினர், நீதிமன்றம் செல்வதற்கு எந்தச் சட்டமும் குறுக்கே நிற்க இயலாது.

அரசியல் சட்டத்து 105 மற்றும் 194 ஆம் பிரிவுகள் பேரவை நடவடிக்கைகள் (proeeedings of the House)

குறித்துத்தான் எந்த நீதிமன்றமும் கேள்வி கேட்கக் கூடாது என நீதி மன்றங்களுக்குத் தடை விதித்துள்ளவே அல்லாது, ஓர் உறுப்பினரின் பாராளுமன்ற உரிமை பறி போனது பற்றி விசாரிக்கக் கூடாது எனத் தடை விதிக்கவில்லை.

பாராளுமன்ற உரிமை இழப்புக்குப் பரிகாரம் காண நீதி மன்றம் செல்ல உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு; அவர்கள் முறையீட்டை ஏற்றுத் தீர்ப்பு வழங்க நீதிமன்றங்களுக்கும் உரிமை உண்டு.

இந்த இரு உரிமைகளை, அரசியல் அமைப்புச் சட்டத்து 105 மற்றும் 194 பிரிவுகளோ, அரசியல் அமைப்புச் சட்டத்து எந்தத் திருத்தமோ, பறிக்கும் உரிமை பெற்றவை அல்ல.

# சான்றெண் விளக்கம்

1. எம். என். கவுல், எஸ். எல். ஷக்தர்— பாராளுமன்றத்தின் பழக்க வழக்கமும் நடைமுறை ஒழுங்கும்" M. N. Kaul, S. L. Shakdher— (Practice and Procedure of Parliament)—பக். 150.

2. எர்ஸ்கின்மே, "பாராளுமன்றத்தின் சட்டம், உரிமைகள்நடைமுறைகள், பழக்கவழக்கங்கள்(Erskinc May's Treatise on The Law, Privileges, Proceedings and Usage of Parliament)—பக். 105.

3. மேலது—பக்கம் 133.

4. மேலது—பக்கம் 133.

5. எம். என். கவுல்—"பாராளுமன்ற, சட்டமன்றங்களும் அவற்றின் நிகழ்ச்சிகளும்" (M. N. Kaul—"Parliamentary Institutians and Procedure)—பக். 225.

6. மேலது—பக். 225

7. மேலது—பக். 225.

8. மேலது—பக். 226.

9. A. I. R. 1952 Calcutta 632, AIR 1951 Madras 269.

10. AIR 1952 Madras-177.

11. AIR. 1966 S. C. 651.
எம். என். கவுல், எஸ். எல். ஷக்தர்— "பாராளுமன்றத்தின் பழக்கவழக்கமும் நடைமுறை ஒழுங்கும்-பக். 211.

12. A.I.R. 1952 Madras 177.
எம். என். கவுல், எஸ். எல். ஷக்தர்—மேலது பக். 211.

13. A.I.R. 1959—S. C. 395.
எம். என். கவுல், எஸ். எல். ஷக்தர்—மேலது பக். 232.

14. எம். என். கவுல், எஸ். எல். ஷக்தர்—மேலது—232.
A. I. R. 1965 S. C. 745.

15. "இந்திய நாடாளுமன்ற, சட்டமன்ற பேரவைத் தலைவர்களின் மாநாட்டின் 50வது ஆண்டு, நிறைவு விழா" மலர்—பக். 10.

16. எம். என். கவுல், எஸ். எல். ஷக்தர்—மேலது பக். 233.

17. எம். என். கவுல்— "பாராளுமன்றங்களும் நடைமுறைகளும்" பக். 217.

18. A. I. R. 1969, S. C. 903.
எம். என். கவுல், எஸ். எல். ஷக்தர்—மேலது பக். 104.

19. பேரவைத் தலைவர்கள் மாநாட்டு மலர்—பக். 10, 11

20. மேலது—பக். 11.

21. மேலது—பக். 12.

22. மேலது—பக். 12.

23. மேலது—பக். 12.

24. மேலது—பக். 11.

25. எர்ஸ்கின்ஸ் மே—மேலது—பக். 87.

26. எம். என். கவுல், எஸ். எல். ஷக்கர்—மேலது—பக். 204, 205, A. I. R. 1953 Orissa 111.

★

குறிப்புக்காக :



இருபதாம் நூற்றாண்டுத் தமிழகத்தின் வரலாற்றில் தனக்கென ஒரு சிறப்பிடத்தைப் பெறத்தக்க வகையில், நல்ல தமிழ் அறிஞராக, வரலாற்றுத் திறனாய்வாளராக, செந்தமிழ்ப் பேச்சாளராக, இலக்கியப் படைப்பாளராக, பாதை மாறாத பகுத்தறிவுவாதியாக, அப்பழுக்கற்ற அரசியல் தலைவராக, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவராக, எனப் பல்திறன் படைத்த நற்றமிழ்ப் புலவராக விளங்கியவர்,

புலவர் கா. கோவிந்தனார் அவர்கள்

"தமிழுக்கும், தமிழ்ப் புலவர்கட்கும், தமிழ்நாட்டுக்கும் தொண்டாற்றத் தன்னையே அர்ப்பணித்தவர்" என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் பாராட்டப் பெற்று, திருவண்ணாமலை குன்றக்குடி ஆதீனத்தாரின், 'புலவரேறு' பட்டம், தமிழக அரசின், 'திரு.வி.க. விருது', மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின், 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' பட்டம் போன்ற சிறப்புகளைப் பெற்ற புலவர் அவர்களின் 'தமிழ்ப் பணி', பொன்விழாக் கண்ட பெருமையினையுடையது.

I S B N-81-85703-20-5